# வணிக இதழ் 2008

(60)

FREE ISSUE

June 2008

தமிழர் இலண்டன்

# தகவல்

London Tamil's Information




85 அகவையில் தமிழினத் தலைவர்




மாதாந்திர செய்திச் சஞ்சிகை

A monthly information digest


ஆயிரங்காலத்துப் பயிருக்கு ஆண்டாண்டு
பாரம்பரியம் உள்ள
தங்க நகைகள்
LAKSHMIS JEWELLERS
276 High Street North London E12 6SA UK
Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448

உங்கள் சகல வியாபார தொடர்புகளுக்கும்
எங்களை அழையுங்கள்

# Vaani Cash & Carry




பிரமாண்டமாய் ! பிரமாண்டமாய் !



தொலைபேசி
இலக்கம்
0208 668 7648



தயாரிப்பாளரிடம்
இருந்து
நேரடியாக
வாடிக்கையாளருக்கு



தங்கமானவர்களிடம் தங்கத்தை வாங்குங்கள்
Pathmini Jewellers
892 London Road
Thornton Heath Surrey CR7 7PB
Tel : 020 8665 1111 Fax : 020 8664 8999

# வாழ்த்துச் செய்தி

சுகி. சிவம், B.A., B.L.,
98422-84984

ஜனனி அடுக்ககம், 313/9, டிடிகே. சாலை, ஆழ்வார்பேட், சென்னை-600 018.



வாழ்க்கையில் கொள்கைகள் உடைய மனிதர்கள் மிகவும் குறைவு. அந்தக் குறைந்த மனிதர்களில் ஒருவர் தான் திரு. சிவானந்த ஜோதி. இலங்கைப் பொருட்களை விற்று அதிக லாபம் சம்பாதிக்க முடியும் என்று ஒரு வியாபாரியாக வாழ விரும்பாமல் விற்பதில்லை என்று கொள்கை வகுத்து நட்டப்பட்டவர் ஜோதி.

வாழ்க்கையில் வீசிய பலப்பல புயல்களையும் சந்தித்து வளையாத நெஞ்சுறுதி அவரது சுயார்ஜித சொத்து. எதை நினைக்கிறாரோ அதை முடிக்கிற பலம் அவரது பலம். இந்தியாவிலிருந்து இலக்கிய வித்தகர் பலரை இலண்டனுக்கு வரவழைத்து கவுரவம் சேர்த்துக் கொடுத்த பண்பு அவரது பண்பு. அவரது தனிக் குணம் மனதுக்குப் பட்டதை மறைக்காமல் சொல்வது. எவருக்கும் அஞ்சாது எப்போதும் சொல்லுவது.

சொல்லுவதை எழுத ஐந்தாண்டுகளுக்கு முன்னர் அவர் கண்ட காகித ஆயுதம் தமிழர் தகவல். அது ஓர் எழுத்து ஊர்வலம்... பிறரை அவர் பாராட்டும்போது, சமயம், ஆன்மிகம், சமூகம், இலக்கியம், கவிதை, துணுக்குகள், சமையல், வண்ணப்படங்கள் என்று மாதம் ஒரு மாநாடாக ஒவ்வொரு இதழையும் உருவாக்குவார். பாரீஸ் நகர வாசனைத் திரவியங்களில் புகழ் பெற்ற ஒன்று ONE MAN SHOW. இந்தத் தமிழர் தகவலும் அப்படியே.

கோவில்களில் நடக்கும் பிழைகளைச் சுட்ட, சிலரது தவறுகளைக் குட்ட, அலைவீசும் எண்ணங்களைக் கொட்ட அவர் கையில் எடுத்த எழுத்து அவதாரம் தமிழர் தகவல். அவ்வப்போது அமுத கலசம்... அவ்வப்போது அன்புக் கவசம்... அவ்வப்போது தனி மனித ராணுவம்... சோதியின் இந்தத் தமிழர் தகவல்.

அறுபதில் மகிழ்வது தமிழர் வாழ்வியல்... எனவே மகிழ்வோடு வாழ்த்துகிறேன்... வாழ்க... வளர்க...

சுகிசிவம்

# Ayngaran
## International

இப்போது லண்டனில் உள்ள திரையரங்குகளில்




30 High Street, Collierswood
London SW 19 2AB
UNITED KINGDOM
Tel : 00 44 (0) 208 540 1500
Fax : 00 44 (0) 208 543 8400
Email : shop@ayngaran.com

Unit 19, Riverside Business Park
Lyon Road, Wimbledn
London SW19 2RL
UNITED KINGDOM
Tel : 00 44 (0) 208 543 4477
Fax : 00 44 (0) 208 543 4466
Email : sales@ayngaran.com

367 High Street North
East Ham
London E12 6PG
UNITED KINGDOM
Tel : 00 44 (0) 208 471 3111
00 44 (0) 208 471 3133

**Ayngaran நான்காவது கிளை**

**11-13 Ealing Road Wembley Middlesex HAO 4AA**

# தமிழர் தகவல் Tamils' Information

திருவள்ளுவர் ஆண்டு 2039
சர்வதாரி – ஆனி

மலர் : 05

இதழ் : 60
ஜுன் 2008

" பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்." – குறள்

## ஐந்தாண்டின் உண்மைகள்

தமிழர் தகவல் அறுபதாவது இதழில் உங்களை சந்திப்பதில் ஒரு ஆத்ம சுகம் கிடைக்கிறது. அதில் பலமும் உண்டு, பலவீனமும் உண்டு. இது தொடர்ந்து வெளி வருமா? என்று இப்போதும் கேட்டுக் கொண்டிருப்பவர்கள் இருக்கிறார்கள். அதற்கான பதில் எதுவும் இதுவரை நாம் தயாரித்ததில்லை. காரணம், தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சிதன் மெய்வருத்தக் கூலி தரும் என்ற வள்ளுவ வாசகமே, என்றும் மனதுள் இருந்தது. அதற்காகவே ஒவ்வொரு இதழிலும் எங்காவது ஒரு இடைவெளிக்குள் வள்ளுவனின் வரிகளை புகுத்திப் பார்த்திருந்தோம்; ஒரு மனதிருப்தியும் பெற்றிருந்தோம்.

இந்த ஐந்தாண்டுப் பயணத்தில் பல நல்லிதயங்களை பார்க்க முடிந்தமையும் அவர்களது ஆசிகளை பெற முடிந்தமையும் பேறாகவே எண்ணமுடிகின்றது. இதனால் ஒரு வெற்றிப் பெருமிதம் கூட எனக்கு ஏற்பட்டுள்ளது. எப்படி இதை ஒரு இலவச வெளியீடாக வெளிக்கொணர முடிகின்றது ? என்று கேட்டு வியப்படைந்தவர்களும் உண்டு. இத்தனை அழகாக அச்சிட்டு வழங்க கட்டுப்படியாகிறதா? என்று கேட்டவர்களும் உண்டு.

தமிழர் தகவல் இலண்டனில் முளைவிட முன்னோடியான ஆலோசனைகளை வழங்கியவர் புதினம் ராஜகோபால். அது ஒரு மறக்க முடியாத நன்றி உணர்வு. வாசித்துவிட்டீர்களா தமிழர் தகவல் என நாள்தோறும் காட்டிக் கொண்டிருக்கும் தீபம் தொலைக்காட்சி எம் நெஞ்சை நிறைக்கிறது.

மாதத்தில் முதல் நாளன்றே இதழ் வந்ததா எனக் கேட்கும் பல இதயங்களின் நல்லெண்ணம் என்றும் எம்மை நாடி நிற்கின்றது. இலண்டனில் தொடராக வெளிவரும் நல்ல தமிழ் வெளியீடு என புகழாரம் சூட்டிய ஐ.பி.சி தமிழ் வானொலி நிலையம் உற்சாகப்படுத்துகிறது.

தொடர்ந்து வெளியிடுங்கள் என ஆதரவும் அரவணைப்பும் தந்தவர்கள் எனது விளம்பரதாரர்கள். அவர்களை மறக்காமல் மனதுள் வைத்துள்ளோம்.

இலண்டன் வாசகர்கள் இடையேயான பங்களிப்பின் பற்றாக்குறையே நாம் எதிர்பார்த்தபடி விடய தாளங்கள், ஆக்கங்கள், சிறுகதைகள், கட்டுரைகள், துணுக்குகள் எங்களுக்கு கிடைக்கவில்லை. ஐந்தாண்டாக எம்மால் விடுக்கப்பட்ட வேண்டுகோள்கள் எதுவும் செவிசாய்க்கப்படவில்லை. அங்கீகாரம் பெற்ற படைப்பாளிகள் என்போர் எவரும் எம் பக்கம் பார்க்கவே இல்லை. நாம் சில்லறைகளாக தெரிந்திருக்கலாம். தீண்டத்தகாதவர்களாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கலாம். ஆறாவது வருடத்திலாவது மாற்றம் வருமா?

எம்மை வழிநடத்திய நல்லிதயங்களுக்கு மீண்டும் நன்றி சொல்கிறோம். கடந்த காலத்தில் கட்டிக் காத்துத் தொட்டுப் படர துணை நின்றவர்கள் நீங்களே.

பதிப்பாசிரியர்

முகவரி :

41, HADDINGTON ROAD,
BROMLEY,
KENT BR1 5RG, U.K.

தொலைபேசி :
020 8480 3320

Email :
jothy5@yahoo.co.uk

வெளியீடு :
திருமுருகன் அறிவகம்
இலண்டன்
Thirumurugan Arivagam
London

ஆசிரியர் :
அரவிந்தன்
Editor :
Aravindan

கணினி, அச்சுப்பதிப்பு :
கமலா ஆர்ட்ஸ்

Computer Layout :
Kamala Artz

படைப்புகள்
ஆக்கியோரின்
உரிமைகளே

4000 பிரதிகள்

தமிழர்களே ! தமிழர்களுடன் தமிழில் பேசுங்கள்

வாசகர்களே ! எமது விளம்பரதாரர்களை மனமுவந்து ஆதரியுங்கள் !


BEST FOOD
நாங்கள் வளர்கின்றோம்
எமது 5-வது கிளை மிக விரைவில்
11-13 Ealing Road Wembley
Middlesex HAO 4AA
364 - 366, Bath Road, Hounslow Middlesex TW4 7HT
Tel : 020 8577 6002 Fax : 020 8570 2323
249 Northolt Road Harrow Middlesex HA2 8HR
Tel : 020 8423 9933
259 - 261, London Road West Croydon Surrey CRO 2RL
Tel : 020 8684 6269/ Fax : 684 4677
திறப்பு விழாவை முன்னிட்டு
பல பொருட்கள்
மலிவு விற்பனையில்

# வாழ்த்துச் செய்தி



காசி
ஆனந்தன்
குடில்

காசி ஆனந்தன்

ஐந்தாண்டு காலம் பைந்தமிழ் அரும்பணி
ஆற்றிய 'தமிழர் தகவல்' போற்றுவோம்...
செந்தமிழ் ஈழம் தந்த சோதியார்
இனத்தின் விடுதலைச் சிந்தையின் வடிவம்!
லண்டனில் இருந்து வண்டமிழ் வளர்த்தல்
தமிழராய் உலகில் நிமிர்தமிழ்ப் பணியாம்...
மோதிவாழ் சிவானந்த சோதி போர்க்குணம்
இன்றைத் தமிழர் கற்கத் தக்கதாம்...
பல்லாண்டு காலம் பல்லாண்டு காலம்
தமிழர் தகவல் தழைத்தோங்கி வாழ்கவே!

காசி
ஆனந்தன்

26-5-2008.



# WHITE FIRE UK LTD



The Name of Diamond

உங்களுக்கு ஈடு இணையற்ற வைரத்தை
பிளாட்டினத்திலும், தங்கத்திலும் மற்றும் வெள்ளைத் தங்கத்திலும்
மிக குறைந்த விலையில் அளிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடையும்

**WHITE FIRE UK LTD**
63, Victoria Road
Ruislip Manor
Middx
HA4 9BH
**Phone : 077 80975142 / 077 69714383**

# வாழ்த்துச் செய்தி

## அறுபது மலர்கள்.... அடடா ஒரு சாதனை



புலம் பெயர்ந்த மண்ணில், கடந்த ஐந்து ஆண்டுகளாக, ஓரிதழ் கூட விடுபடாமல் 'தமிழர் தகவல்' இதழை வெளிக் கொண்டு வந்திருக்கும் அய்யா சிவானந்த சோதி ஒரு சாதனையாளர்தான்!

சொந்த மண்ணில், பல முறை முயன்றும் தொடர்ந்து இதழைக் கொண்டு வருவதில் தோற்றவன் நான். எனவே, தமிழர் தகவலின் சாதனையை வாழ்த்துவதற்கு முழுத் தகுதியும் உடையவன் நானே!

தமிழர் தகவலைத் தொடக்கத்திலிருந்து பார்த்தும், படித்தும் வருபவன் நான். சில இதழ்களில் 'குறுகத் தரித்த குறள்' என்னும் தொடரையும் எழுதியுள்ளேன். ஆன்மீகம், வாழ்வியல், ஈழப் போராட்டம் முதலியன அவ்விதழின் அடக்கம் என்று சுருக்கமாக் கூறலாம்.

ஆன்மீகத்தில், குறிப்பாகச் சைவ சமயத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்ட அய்யா சிவானந்த சோதிக்கும், முழுக்க முழுக்கப் பெரியாரியல் கோட்பாடுகளைப் போற்றும் எனக்கும் நட்பு மலர்ந்த விதமே வியப்பானது.

1990களின் தொடக்கத்தில் 'இனி' என ஓர் இதழைத் தமிழகத்தில் நான் சிறப்பாசிரியராகப் பொறுப்பேற்று நடத்திக் கொண்டிருந்தேன். அதனைக் கடையில் வாங்கிப் படித்துவிட்டு, அவர் என்னைத் தொடர்பு கொண்டார். நேரில் வந்து சந்தித்தார். அது மட்டுமல்லாமல், 100 இதழ்களை வாங்கிக் கொண்டு போய் லண்டனில் விற்பனை செய்தார்.

அதுதான் லண்டனில் நான் பெற்ற முதல் அறிமுகம். அதன் மூலமே அங்கு எனக்கு நண்பர்கள் பலர் கிடைத்தனர். எனவே என்னைக் கடல்தாண்டி கவர்ந்திழுத்துக் கொண்டு சென்ற முதல் மனிதர் அவர். அந்நாட்களில் லண்டனில் என்னை யாருக்கும் தெரியாது. இன்று ஆயிரம் நண்பர்களைப் பெற்றுள்ளேன் என்றால், அது அவர் எனக்கு வழங்கிய கொடை.

தமிழர் தகவல் இதழில் எனக்குப் பிடித்தமான பகுதி திருக்குறள் விளக்கமும், தென்கச்சியாரின் வாழ்வியல் கதைகளும். கடந்த 60 இதழ்களில், நூற்றுக்கும் மேற்பட்ட குறள் விளக்கங்களைத் தமிழர் தகவல் தந்துள்ளது. குறளே நம் நெறி, வள்ளுவனே நம் வாழ்வாசான் என்பதைச் சரியான புரிதலோடு தமிழர் தகவல் வெளிப்படுத்துகின்றது.

தென்கச்சியாரின் சிறுகதைகள் அனைத்து இதழ்களிலும் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. 'உருவில் சுருக்கம், கருவில் பெருக்கம்' என்பது அவருடைய கதைகளுக்குத்தான் பொருத்தம்.

ஐரோப்பாவில் புலம் பெயர்ந்து வாழும் தமிழீழ மக்களுக்குத் தாயகச் செய்திகளை உடனுக்குடன் தருவதில் தமிழர் தகவல் நற்பணி ஆற்றியுள்ளது. தமிழகச் செய்திகளும் அவ்வப்போது இடம் பெற்றுள்ளன.

எனக்குப் பிடிக்காத பகுதியும் 'தகவலில்' உண்டு. 'மாத சோதிடம்' என்னும் பகுதி எனக்கு உடன்பாடானது அன்று. பொதுவாக, ஆன்மீகப் பகுதியே 'தகவலில்' கூடுதலாக உள்ளது என்ற கருத்துடையவன். அதையும் தாண்டி, சோதிடம் என்பது மக்களின் அறிவை, எதிர்காலம் உழைப்பால் உருவாக்கப்பட வேண்டும் என்ற கருத்தை மழுங்கடிக்கின்ற காரணத்தால் அதனை எதிர்ப்பவன் நான். ஆன்மீகவாதிகளான விவேகானந்தர், பாரதியார் முதலானவர்களே 'சோதிடம் தனை இகழ்' எனக் கூறியுள்ளதை நாம் நினைவு கூர வேண்டும்.

எவ்வாறாயினும், தமிழர் தகவலின் சாதனையை நாம் யாரும் மறுத்துவிட முடியாது. உண்மையும், விடா முயற்சியும், உறுதியான ஈடுபாடும் வெற்றியைத் தந்தே தீரும் என்பதற்குத் தமிழர் தகவல் பெற்றுள்ள வெற்றி நமக்கு சான்றாக நிற்கிறது. சிவானந்த சோதி அவர்களின் வெள்ளை உள்ளத்திற்கு, எதிர்காலத்தில் இன்னும் பல வெற்றிகள் காத்திருக்கின்றன.

அன்புடன்

26-05-08

## தமிழர் தகவலின் தனிவழி

அகவை ஆறில் 60வது இதழாக மலரப் போகும் தமிழர் தகவல் புலம் பெயர்ந்த தமிழ் மக்களின் இதயங்களில் ஒரு நிரந்தர இடத்தைப் பிடித்துவிட்டது. இது வெறும் புகழ்ச்சியல்ல. தனியொருவனாக, தலை நிமிர்ந்து தனக்கேயுரிய ஒரு தனிவழியில், அயராது உழைத்து தமிழுக்கும், தமிழ் மக்களுக்கும், சைவத்திற்கும் அதன் வழிவந்த பெரியோர்க்கும் தமிழர் தகவல் ஊடாகப் பணியாற்றி வரும் திரு. ந. சிவானந்த சோதி அவர்கள் பாராட்டுக்குரியவர்கள்.

ஐந்து வருடங்களாக 4000 பிரதிகளை மாதந்தோறும் தவறாது வெளியீடு செய்த பதிப்பாசிரியர், ஆறாவது ஆண்டில் 5000 பிரதிகளை வினியோகிப்பதற்கு அவருடைய ஆத்மபலன் உறுதுணை நிற்க எமது உளங்கனிந்த வாழ்த்துக்கள். இலவசமாக வினியோகிக்கப்படும் இப்பிரசுரம், அழகிய வண்ணப்படங்களை முகப்பில் தாங்கி வரும்போது சமகால நிகழ்வுகளை வாசகர் மத்தியில் நினைவூட்டத் தவறுவதில்லை. இதைத் தெரிவு செய்யும் பாங்கு பதிப்பாசிரியருக்கே உரித்தான ஒரு தனிப்பாணி.

குறைந்த பக்கங்களுடன் நிறைந்த செய்திகளைக் கூறும் ஒரு மாத சஞ்சிகையை வெளியிடுவது இலகுவான காரியமல்ல. அதிலும், இவர் தொடாத விடயங்களே அரிது. அரசியல் தொட்டு, ஆன்மீகம் வரை நடை பயின்றுள்ளார். வள்ளுவர் காட்டிய வழியைக் காண்பித்து, நகைச்சுவை ததும்பும் நல்ல ஆக்கங்களையும் தந்துள்ளார். கவிதைகளைச் சேர்த்து, இலக்கிய கண்ணோடு மனங்கவர் படைப்புகளையும் தந்துள்ளார். மருத்துவம் கூறும் அறிவுரைகளோடு, மாதமொரு சோதிடக் கணிப்பையும் முன் வைத்துள்ளார். அனுபவம் ஒரு நல்ல ஆசான் என்ற உண்மைக்கு அடங்கிஆய்ந்தெழுதும் ஆக்கங்களை ஊக்குவித்து, ஈழத்து மண்வாசனை எம் மக்களிடமிருந்து அகன்று விடாதிருக்க ஈழத்துச் சிவாலயங்களை ஞாபகமூட்டி பாரிய தொண்டை பரப்பும் தமிழர் தகவல் பல்லாண்டு, பல்லாண்டு பவனிவர வாசகர்கள் சார்பிலும், புலம் பெயர் தமிழர்கள் சார்பிலும் வாழ்த்தக் கடமைப்பட்டுள்ளேன். நன்றி வணக்கம்

அன்புடன்

உமா மகாலிங்கம்.

# வாழ்த்துச் செய்தி

ஒளவை நடராசன்


AVVAI NATARAJAN



## தாளாண்மைக்குத் தகவலிதழ்

புலத்துறை முற்றிய பெருமையும் திறமையும் வாய்ந்த ஈழத் தமிழர்கள் புலம் பெயர்ந்த நிலையில் புகலமைந்த நாடுகளில் வாழ்ந்தபடி அயராத உழைப்பும் ஆற்றலும் மிளிரத் தொண்டாற்றுகின்றனர். அத்தகைய தாளாண்மைக்குத் தனி வடிவம் பூண்ட இதழாகத் தமிழர் தகவலின் அறுபதாம் இதழ் மலர்வது கண்டு பாராட்டுகிறேன்.

சோர்வறியாத உள்ளத்தோடு சுடர்மணியாக ஒளிரும் நண்பர் சோதியார் தமிழர் தகவலை வெளியிட்டு உடன்பிறந்த தமிழர்களை அரவணைத்து அன்பும் ஆறுதலும் வழங்குகின்றார். காரிருள் அகத்தில் நல்ல கதிரொளியாகத் திகழும் தமிழர் தகவல் ஒருமையுணர்வை வளர்த்துத் தமிழுணர்வைத் தொடர்ந்து ஊட்டி வர வாழ்த்தி மகிழ்கிறேன்.



முன்னைத் துணைவேந்தர்
'ஜெ' பகுதி எண் : 82,
அண்ணா நகர் கிழக்கு,
சென்னை - 600 102.
தொலைபேசி : 2626 9950, 2626 3868

Former Vice Chancellor
`J' Block No. : 82,
Anna Nagar East,
Chennai - 600 102.
Phone : 2626 9950, 2626 3868

E-mail : thamizhavvai@hotmail.com, avvaithamizh@hotmail.com

# ஒரு நாடோடிப் பாடகனின் இன்றைய நாட்குறிப்பு

கால் ஓயா,
ஒரு
கோழை
நாடோடி வாய்ப்பாடகனின்
கைப்பிறந்த
இன்றைய நாட்குறிப்பு,
இது:

---

அநாமதேயக் கீழைத்தேசமொன்றின்
ஏழைப்புத்திரன் ஒருவன்,
மேற்குத் திசைநகர்ந்து
பெரு ஆற்றுக்கழிமுகத்து வாய்ப்பரப்பில்,
யாழ் மீட்டி, இசை சொட்டி,
யாசித்துக் கிடப்பான்,
வழிப்போக்கர் வீசு
அழுக்கு நாணயங்கள்,
நிலம் விரிந்த
துணி வயிற்றில்.

---

அவனது தேசம்,
அங்கே,
தெருத்தெருவாய்
நெடும் தீப்பற்றி எரியும்.
இங்கிரவு,
சிறு இரவற் கோப்பை நிறை
நீர் பருகி,
இறுகி
அணைத்திருப்பான்
இவன்,
திணற்றும் புகை
இன்றைய துயர்.

பெயர்தெரியா இலை
உதிர்த்த பூங்கா
இருக்கையிலே,
வான் பார்த்து
முகம் கிடக்க,
கடக்கும் குளிர் மேகம்
இருட்டில்,
இவன் தேசத்திசை.

---

ஓடும் நதி,
கீற்று மூங்கிற்
சிறுகுழற்காற்றூடாய்,
நாட்பொழுதில் யாழ் மீட்டி
ஓய்ந்தவன்மேல்,
ஒரு நாழி,
நாதப் பிறப்பாகி,
மேல் தடவி
முயங்கிப் புணர்ந்திருக்கும்.

இனி வரும் காலைக்கு,
அவனுட் புதுக் கரு விளையும்;
கரட்டு விரல் மடிந்து,
மகர யாழ் மோகித்து வளர்க்கும்
அவன் துயர் தழுவு தந்திக் காவியம்.

அதுவரையில்,
அன்றைய மணற்றிடர்
திரை பின்னிருந்த
அந்தகக்கலைஞனின்
இன்னொரு இன்றைய குழந்தை
யாசிப்பு யாத்திரைநாளொன்று
நீட்டித் துயில்வான்,
முன்னவன் போல்,
வேற்றொரு திசையிலே
விரிகடல் கடந்து.

---

காலத்தின் கறங்கலிலே,
நகர் நகராய்,
நகராமற் தொடரும்,
நீங்கா
அகதி யாழ்ப்பாணன்
யாத்திரைத் துயர்கள்,
கால் துளிர்ப்பிற்
கிளர்ந்தெழுந்த
நிழல் நேசத் தொடர்பாய்.

# Rathi Jewellers & Silk House

28 Ealing Road, Wembley, Middlesex HA0 4TL
Tel : 020 8903 3063 Fax : 020 8903 9711

என்றும் நியாயமான விலையில்
புதுப்புது வடிவங்களில் நீங்கள்
விரும்பும் தங்க நகைகளை
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள நம்பிக்கையும்
நாணயமும் நிறைந்த ஒரு நிறுவனம்

உங்கள் மனம் கவரும் வண்ணங்களில்
பட்டுப் புடவைகளைப் பெற்றுக்
கொள்ள நாடுங்கள்

## ரதி சில்க் ஹவுஸ்

Link Up
**Rathy Properties**

12 Ealing Road, Wembley
Middlesex HA0 4TL
Tel : 020 8903 0325



Opening Hours : Monday - Saturday 10.30am - 6.30pm
Sunday 12 noon - 6.30pm

கால் பரவிப் போகும்
தேசம் திசை எங்கும்,
கானல் வரிப் பாடல்கள்
புதுக் கோடுகள் காணும்;
கோலத்தில்,
வளை வரிகள் குறுக்கோடும்;
புள்ளி மையங்கள்,
மெல்லவாய்
இடம்பெயரும்.

---

நாட்போக்கில்,
வான் வீதியிலும்
பல்வேறு நட்சத்திரப்பாதை
அவரவர்க்காய்
ஓடக் காண்பார்கள்,
தீ பரவப் பிரிந்த
பாலை மணற் புத்திரர்கள்.

பாணர்கள்
இசைப்பண் மாறும்;

பாடினிகள்
ஆடுபாவம் கோணலுறும்;

பாலகர்கள்,
தீ எரியும் தேசத்
துயர் தெரியா,
யாத்திரை செல்
தேசக்குடிகளாகி
வந்த திசைச்சுவடு
மணல்மூட
மறந்து போவார்கள்.

---

வசிப்பு
யாசிப்புக்காய்,
யாழ் வாசிப்பு
இனியும் தொடரும்;
ஆனால்,
மகரயாழ்,
முகம் மழுங்கி
மூளியாய்ப் போகும்;
தந்தி,
நெம்ப நெம்ப
நேர்நிலை
தொய்யும்;
அவர்களறியா
இன்னொரு கருவியிது
என்றாகிப் போகும்
பின்னொரு நாள்,
முன்னைய யாழ்.
இனிவரு
பாணர் குழவிகள் கருவியிலே,
இசைக்கருக்கள்,
அகதித்தேசத்து
கருக்கு
அவலம் மட்டுமே
பேசித் துயருறும்.

---

ஆயினும்,
வெகுதூரத்தே,
அவர் முன்னவர் தேசம்,
யாழ்கள் முறித்துப்போட்டு,
பாணர்கள் தேகம் பற்றி,
தொடர்ந்து நெருப்பு
ஆகுதல், அவித்தல்
நிலைத்துத் தொடரும்.

அந்நிலையில், தாய்க்கிழப்பாடினிகள்
தம் வாய் திறக்க,
மரண ஓலம் மட்டும்,
உயரே எழுந்து ஓங்கிப்
பரவிக் கொட்டியது,
உப்புக்கரி
கடற்காற்று வெளியில்
இரத்தச்சிறுதுளிகள்,
நிலம்
சொட்டச் சொட்டப்
பெரிதாகி.

26.09.98

(செம்மணி மைந்தர்கள் நினைவாக,
செயலற்ற பெரு வாய் மட்டும்
மிஞ்சிப்போன ஒரு வெற்றுக் கோழையின்
கையிலிருந்து எழுந்தது)


Mathangi
Samudra
Sea Foods
புதிதானதும் தரம் சிறந்ததுமான
சகலவித மளிகைப்பொருட்கள்,
சரக்கு வகைகள் மற்றும்
உடனடியாக உண்ணக்கூடிய
உணவுகள்
Rabeena
Pickle
Importers & Distributors :
Samudra Sea Foods
Mathangi Products
Rabeena Products
Larich Products
Priya Products & MD Products
Tel : 020 8685 1122
020 8685 1133
Fax : 020 8685 1144
Email : spicewayltd@hotmail.com
Website : spicewayltd.co.uk
SPICEWAY LTD.
Unit 4, College Fields
Prince Georges Road
Merton, London SW 19 2PX

வியாபாரம் செய்பவர்கள் தனியே வியாபாரம் செய்து பணம் ஈட்டுவதில் மட்டும் கவனம் கொள்ளாமல் பொது பணியில் ஈடுபட்டு மக்களுக்கும் பயன் பெற செய்யலாம். இந்த மாதம் சென்னையில் ஆரம்பித்த ராம்ராஜ் நிறுவனத்தாரின் சமுதாயப் பணி மெச்சத்தக்கதாக உள்ளது. மே மாதம் 26ஆம் தேதி பாண்டிபஜாரில் மிகப்பெரிய காட்சியறையில் அவர்களது வெண்மை ஆடைகளை விற்பனைக்கு வைத்திருந்தார்கள். அதற்கு விளம்பரமாக உறவுகள் மேம்பட... என்ற தலைப்பில் சுகி. சிவம் அவர்களின் சொற்பொழிவை நாரத கான சபையில் மண்டபம் நிறைந்த மக்களுக்கு வழங்கினார்கள். வியாபாரத்தோடு சமுதாயப்பணி பாராட்டுதற்குரியது. இப்படியான நல்ல செய்திகளை லண்டன் வியாபாரிகளும் பின்பற்றலாமே



ராம்ராஜ் வேட்டிகள் ஆரம்ப விழாவில் உரிமையாளர் நாகராஜ் தமிழர் தகவல் பதிப்பாசிரியருக்கு பொன்னாடைப் போர்த்தி மரியாதை செய்கிறார்

# உறவுகள் மேம்பட


குடும்பத்திலும் சரி, அலுவலகத்திலும் சரி மனித உறவுகளில் விரிசல்கள் ஏற்படாமல் இருக்கவும், ஏற்பட்ட விரிசல்கள் மேலும் பெரிதாகாமல் இருக்க

- நானே பெரியவன், நானே சிறந்தவன் என்ற அகந்தையை விடுங்கள்.
- அர்த்தமில்லாமலும், பின்விளைவு அறியாமலும் பேசிக் கொண்டேயிருப்பதை விடுங்கள்.
- எந்த விஷயத்தையும் பிரச்சனையையும் நாசூக்காக கையாளுங்கள் விட்டுக்கொடுங்கள்.
- சில நேரங்களில் சில சங்கடங்களை சகித்துத்தான் ஆக வேண்டும் என்று உணருங்கள்.
- நீங்கள் சொன்னதே சரி, செய்வதே சரி என்று வாதாடாதீர்கள். குறுகிய மனப்பான்மையை விட்டொழியுங்கள்.
- உண்மை எது, பொய் எது என்று விசாரிக்காமல் இங்கே கேட்டதை அங்கே சொல்வதையும், அங்கே கேட்டதை இங்கே சொல்வதையும் விடுங்கள்.
- மற்றவர்களை விட உங்களையே எப்போதும் உயர்த்தி நினைத்து கர்வப்படாதீர்கள்.
- அளவுக்கதிகமாய், தேவைக்கதிகமாய் ஆசைப்படாதீர்கள்.
- எல்லோரிடத்தும் எல்லா விஷயங்களையும் அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ, இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.
- கேள்விப்படுகிற எல்லா விஷயங்களையும் நம்பி விடாதீர்கள்.
- அற்ப விஷயங்களை பெரிதுப் படுத்தாதீர்கள்.
- உங்கள் கருத்துக்களில் உடும்புப் பிடியாய் இல்லாமல் கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள்.
- மற்றவர் கருத்துக்களில் மரியாதை காட்டவும், இனிய, இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள்.
- புன்முறுவல் காட்டவும் சிற்சில அன்புச் சொற்களை சொல்லவும் கூட நேரமில்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்.
- பேச்சிலும், நடத்தையிலும் பண்பில்லாத வார்த்தைகளையும், தேவையில்லாத மிடுக்கையும் காட்டுவதைத்தவிர்த்து அடக்கத்தையும் பண்பையும் காட்டுங்கள்.
- அவ்வப்போது நேரில் சந்தித்து மனம் திறந்து பேசுங்கள்.
- பிரச்சினைகள் ஏற்படும்போது அடுத்தவர் முதலில் இறங்கி வர வேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத் துவக்க முன் வாருங்கள்.

– தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி

விழாவில் நடைபெற்ற சுகிசிவம் அவர்களின் சொற்பொழிவில் ராம்ராஜ் வேட்டிகள் உரிமையாளருடன் பதிப்பாசிரியர்




திருப்பூரில் இருந்து சென்னைக்கு
உலகத் தமிழர்களின் வசதிக்காக இப்போது
ராம்ராஜ் சென்னையில் உதயம்
வெள்ளைக்கு இல்லை
– கள்ளச் சிந்தை
For the prestigious People
RAMRAJ
ராம்ராஜ்
COTTON
DHOTIES • SHIRTS • BANIANS
100, பாண்டி பஜார்
(ஹோட்டல் சரவணபவன் அருகில்
சென்னை – 600 017

# சிவனை கோவில்களில் பரிவாரமூர்த்தியாக வைப்பது சரியா?



சாவகச்சேரியூர்
டாக்டர் கதிர்காமநாதன்

சிவன்தான் முதற்கடவுள். மங்களமான சிவனை ஆதிமூலம், மகாதேவன் என்று இதனால் அழைக்கிறோம். மேலும் தொல் பொருள் ஆராய்ச்சியாளர்கள் சமய ஆராய்ச்சியாளர்கள் இதை உறுதிப் படுத்தியிருக்கின்றனர். சிவனை வணங்குபவர் சைவ சமயத்தவ ராவார். சிவனை முக்குரவர்களும் மாணிக்க வாசகரும் தேவாரம், திருவாசகம் போன்றவை களால் ப்ாடியுளனர். சைவ சமய பைபிள் எனக் கூறும் திருமந்திரமும் சிவனையே கடவுளாக பாக்கள் பாடியுளது.

காலப்போக்கில் சிவனுக்கு பரிவாரங்களை ஏற்படுத்தினர். மனைவியாக பார்வதியும், பிள்ளைகளாக பிள்ளையாரும், முருகனும். கடவுளை குடும்பமாக வணங்குவது எமது சமயத்தில் மாத்திரம்தான் உளது. வாழ்க்கையில் நடக்கும் ஏற்றத் தாழ்வுகள், கோப தாபங்கள், சண்டை சச்சரவு யாவும் இவர்களின் குடும்பத்தில் இருக்கிறது. சைவ மக்களுக்கு அறிவு, அன்பு, ஆணவத்தை அடக்குதல் போன்றவற்றை எடுத்துக்காட்டுவனவாகும்.

சிவனை லிங்க வடிவில்தான் வணங்கி வருகிறோம். லிங்க வழிபாடு சிந்துவெளி நாகரிகத்தில் கூட இருந்திருக்கிறது. லிங்கத்திற்கு முன்னால் நந்தி அதற்குப் பின்னால் பலிபூடம். நந்தி சிவனின் வாகன மாகும். பலி பீடம் பத்ரலிங்கமாகும். இது சிவனின் பாதங்களைத் தாங்கி தாமரை வடிவிலிருக்கும். அகங்காரம், ஆணவம், கீழ் உணர்ச்சிகள் யாவும் பலியிட்ட பின்னரே கடவுள் அனுக்ரகம் கிட்டும் என்பதே இதன் தத்துவமாகும். லிங்கம், நந்தி, பலிபீடம் இவை மூன்றும் சிவன் கோவில்களில் சிவனோடு ஒன்றாக இருக்கும்.

எனது கிராமமாகிய நுணாவில் கிழக்கில் முருகன் கோவில் உள்ளது. அங்கு பிள்ளையார், விஷ்ணு, அம்மன் இவைகள்தான் பரிவார மூர்த்திகள். சிவனை தரிசிக்க வாரிவநாத சிவன் கோவிலுக்கே செல்வோம். அருகாமையில் உள்ள பிள்ளையார் கோவிலிலும் சிவன் பரிவார மூர்த்தியாக அமைக்கப்படவில்லை. இதே போன்று பெயர் பெற்ற செல்வவிநாயகர் சந்நிதி கோவிலில் முருகன், வள்ளி உண்டு. சிவன் பரிவாரமூர்த்தியாக இல்லை.

எமது கோவில்கள் யாவும் ஆகம முறைப்படி அமைக்கப்பெற்றுள்ளன. இலண்டன் கோவில்கள் வியாபாரத்திற்கும் விளம்பரத்திற்குமே இருக்கின்றன. முதற் கடவுளாகிய சிவனை பரிவார மூர்த்தியாக சுவரை அண்டியோ ஒரு மூலையிலோ பரிதாபமாக நந்தி, பலிபீடமின்றி ஏன் சுற்றி கும்பிடக்கூட இடமின்றி முடக்கிவிட்டிருக்கிறார்கள். இது சிவனை நித்திப்பது மாத்திரமின்றி சைவ சமயத்திற்கே ஒரு இழுக்காடாகும்.

நாங்கள் வணங்கி வந்த முருகள் பிள்ளையார் அம்மன் கோவில்கள் போன்று அல்லாது இலண்டனில் ஏன் சிவனை பரிவாரமூர்த்தியாக வைத்திருக்கிறார்கள்? எமது வழமைக்கும் ஆகமத்திற்கும் மாறாக சிவனை பரிவார மூர்த்தியாக வைப்பது சரியல்ல என்பதே எமது தாழ்மையான அபிப்பிராயமாகும்.

(மேற்கண்ட கடிதம் தமிழர் தகவலின் நீண்ட நாளைய எண்ணங்களை பிரதிபலிப்பதாக உள்ளது. டாக்டர் ஐயா அவர்களுக்கு எமது நன்றி. லண்டன் மக்கள் சிந்திப்பார்களாக)

---



மாதமிரு திருக்குறள் கற்போம்

## படை மாட்சி

*மறமானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்*
*எனநான்கே ஏமம் படைக்கு* (குறள்: 766)

வீரம், மானம், சிறந்த வழியில் நடத்தல், தெளியப்படுதல் ஆகிய நான்கு பண்புகளும் படைக்குச் சிறந்தவையாகும்.

*தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த*
*போர்தாங்கும் தன்மை யறிந்து* (குறள்: 767)

தன் மேல் எதிர்த்து வந்த பகைவர் படையின் போரைத் தாங்கி வெல்லும் தன்மை அறிந்து, அவர் தூசிப் படையை எதிர்த்துச்செல்ல வல்லதே படை.

தொடர்ந்து 25 வருட காலம் லண்டன் தமிழர்களுடன்

# லீலா

உற்பத்தியில் பெருமை
உபயோகத்தில் ஆனந்தம்

லீலா

PROUD TO PRODUCE
PLEASURE TO USE

1981 தொடக்கம் இன்று வரைக்கும் ஐரோப்பா கண்டத்தில் தொடர்ந்து உன்னத உற்பத்தியில் லீலா தயாரிப்புகள்

ஈழ மக்களின் ரசனைக்கேற்ற சகல உணவுப் பொருட்களுக்கும்

Leela Exports & Imports
Srilanka
Gold Award Winner N.C.E


லண்டன் விற்பனையாளர்கள்

குமரன் ஸ்டோர்ஸ்

142 - 144 Hoe Street, Walthamstow, London E17 4QR 07739 25 22 23, 07801 86 50 31, 020 8530 3033

# அனைத்துலக வளர் தமிழ் வெது ஆய்வு மாநாடு

தில்லி தமிழ்ச்சங்கச் செயலர் மற்றும் தலைவருடன் பதிப்பாசிரியர்




## மாநாட்டு நிறைவுவிழா

பிரபல மருத்துவரும், அறுவை சிகிச்சைத் துறைப் பேராசிரியருமான மருத்துவ முனைவர் நரேந்திரன் தலைமை ஏற்க தில்லி தமிழ்ச்சங்கச் செயலர் இரா. முகுந்தன் முன்னிலையில், புலம் பெயர்ந்துள்ள தமிழர்கள் தமிழுக்கு ஆற்றி வரும் தொண்டுகளைப் புகழ்ந்துப் பாராட்டி மாநாடு ஒன்று டில்லியில் நடைப்பெற்றது.

தமிழர் தகவல் ஆசிரியர் திரு சிவானந்த சோதி அவர்கள் தமிழகத்துடன் நெருங்கிய தொடர்புடையவர். பல தமிழ்ப் பேச்சாளர்களை இலண்டனுக்கு அழைத்துப் பெருமைப்படுத்திய தன்னலமற்ற தொண்டர். 60 இதழ்களாகத் தமிழர் தகவலை வெற்றிகரமாக நடத்துபவர். தமிழுணர்வும் இலக்கிய ஆர்வமும் கொண்டவர். இவருக்குச் செந்தமிழ் இலக்கிய வேந்தன் என்ற விருதினை காமாட்சிபுரி ஆதீனத் தலைவர் வழங்கினார்.

இன்பத் தமிழ் வானொலி எனும் 24 மணி நேர ஒலிபரப்பை ஆஸ்திரேலியாவில் 12 ஆண்டுகளாய் மிகச் சிறப்பாக நடத்திவரும், திரு பாலசிங்கம் பிரபாகரனுக்கு தமிழ்க்கலை வேந்தன் விருது வழங்கப்பட்டது. நியூசிலாந்து நாட்டைச் சேர்ந்த தில்லையார் வர்ணகுலசிங்கம் பல தமிழ் நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தும், பிள்ளைகளுக்குத் திருக்குறளைச் சொல்லித் தந்தும் முருகன் கோவில் அறங்காவலராக (10 வருடங்களாக) விளங்கியும் பல வழிகளில் சமய, இலக்கியப் பணிபுரிவதால் நற்றமிழ் வேந்தன் என்ற விருது வழங்கப் பெற்றார்.




நிவேதா, ரதிதேவி, அமுதா, கலைவாணி ஆகியோர்களுக்கு தமிழ்ச் சிற்பி விருது வழங்கப்பட்டது.

சிறந்த தமிழ்ச்சங்கம் எனத் திருப்பூர்த் தமிழ்ச்சங்கமும், அதிக அளவில் ஆய்வுக் கட்டுரை வழங்கிய மதுரை செந்தமிழ்க்கல்லூரியும் பாராட்டும் விருதும் பெற்றன. தமிழ்ப்பல்கலைக் கழகம், முனைவர் பட்ட ஆய்வாளர்கள் நிவேதா, ரதிதேவி, அமுதா, கலைவாணி ஆகியோர் ஆய்வு கட்டுரை அளித்தனர். இவர்களுக்கும் தமிழ்ச் சிற்பி விருது வழங்கப்பட்டது.

பல தமிழறிஞர்கள், ஆய்வாளர்கள், நூல் ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டனர். விழா கோலாகலமாக மகிழ்ச்சி அலைவீச நிறைவுற்றது.

### வெள்ளம்போல் தமிழர் கூட்டம்

மே 2008 16, 17, 18 ஆகிய மூன்று நாள்களிலும் பாரதத் தலைநகர் புது தில்லியில், தில்லி தமிழ்ச் சங்கத்தில் தமிழர்


ஒரு மாமாங்கம் காணும் சேவையில்
Western Jewellers
230 Upper Tooting Road
London SW17 7EW
Telephone : 020 8767 3445
SILK
EMBORIUM
122 Upper Tooting Rpad
London SW17 7EN
Tel : 020 8672 1900
Western Jewellers
& Textiles
5 Plaza Parade 29-33 Ealing Road
Wembley Middlesex HA0 4YA
Tel : 020 8903 0909

திருக்கூட்டம் பெருவாரியாகக் கூடியது. அது உலகளாவிய தமிழாம் உயர்தனிச் செம்மொழியைத் துறை தோறும் வளர்க்க வழிவகைகளை ஆராயத்தான் !

திருவையாறு தமிழய்யா கல்விக்கழகம், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகக் கட்டிடக்கலைத்துறை, கண்ணதாசன் தமிழ்ச் சங்கம் இணைந்து நடத்திய ஆறாவது ஆய்வு மாநாடுதான் அங்கு நடந்தது. 650 ஆய்வுக் கட்டுரைகள் 6 தொகுதி நூல்களாகத் தமிழ்ப் பால்வளத்துறை அமைச்சர் மாண்புமிகு உ.மதிவாணன் எம்.ஏ.பி.எல் அவர்களால் வெளியிடப் பெற்றது.



செந்தமிழ் இலக்கிய வேந்தன் விருது பதிப்பாசிரியருக்கு வழங்கப்பட்டது

### எழுச்சி உரை

தமிழகப் பால்வளத்துறை அமைச்சர் உரையாற்றும் போது 1967 இல் இந்தியை எதிர்த்தோம். தமிழை அரியணை ஏற்றுவோம் என்றோம். சொன்னதைச் செய்து காட்டினோம். 14 வயதில் இந்தியை எதிர்த்துத் திருவாரூர் வீதியில் கொடி பிடித்து ஊர்வலம் சென்றார் டாக்டர் கலைஞர். செம்மொழி தமிழ் என்று நடுவண் அரசை விட்டே அறிவிக்கச் செய்தோம். தமிழிசைப்பாடல் பாடினால் தீட்டு என்ற நிலை மாறி தமிழிசைக்குக் கல்லூரிகள் கண்டார் முதல்வர். தாய்மொழி வழிக்கல்வி இன்றியமையாதது. பெருந்தலைவர் காமராசர் கல்விக்கண் திறந்த, படிக்காதமேதை. நால்வகை கல்விபெறுதல் இன்றியமையாதது என்றார்.



திரு பாலசிங்கம் பிரபாகரனுக்கு தமிழ்க்கலை இலக்கிய வேந்தன் விருது வழங்கப்பட்டது

### உயர்தனிச் செம்மொழி

வடமொழி போன்ற மொழிகள் செம்மொழியாயினும் உலகப் பேச்சு வழக்கின்றிப் போயின. தமிழ் தனித்துவம் பெற்று 11 தகுதிகள் கொண்ட உயர்தனிச் செம்மொழி என்றும் 22¼ கோடி மக்கள் பேச வேண்டிய தமிழ் இன்று 6½ கோடி மக்கள் மட்டுமே பேசும் மொழியானது. தெலுங்கு, மலையாளம், கன்னடம் தமிழின் சேய் மொழிகள் என்று தஞ்சைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் முனைவர் சுப்பிரமணியம் பேசினார்.

### ஆதீனத் தலைவரின் அருள் உரை

ஆதீனங்கள் தமிழுணர்வோடு திருநெறிய தெய்வத் தமிழை வளர்க்க வேண்டுமென்று ஆசியுரை வழங்கிய கோவை காமாட்சிபுரி ஆதீனம் சிவலிங்கேசுவர சுவாமிகளின் எடுப்பான குரலும் தெளிவான உச்சரிப்பும் அனைவரையும் ஈர்த்தன.



திரு தில்லையார் வர்ணகுலசிங்கம் அவர்களுக்கு நற்றமிழ் வேந்தன் விருது வழங்கப்பட்டது

### தமிழில் சட்டமும் நீதியும்

சென்னை உயர்நீதி மன்ற நீதியரசர் இராம சுப்பிரமணியம் அவர்கள், ஔவை, சேக்கிழார், பாரதி என அனைவர் பார்வையிலும் சட்டமும் நீதியும் எவ்வாறு தமிழிலக்கியத்தில் போற்றப்பட்டதென அழகுத் தமிழுரை ஆற்றி நீதியரசர் தமிழ்ச் சொல்லரசர் என்று காட்டிவிட்டார். பல்வேறு தமிழ்த் தொண்டர்களுக்கு விருதுகளும் வழங்கினார். ●

உங்கள் உறவுகளுக்கு உலகின் எப்பாகத்துக்கும்
பணமாற்றீடு செய்ய சிறந்த நிறுவனம்


# KURU'S AGENCY MONEY TRANSFER

11A, EALING ROAD
WEMBLEY, MIDDX
TEL : 020 8453 5644
FAX : 020 8453 4545



தமிழர் தகவல்
இலவச இதழை
எங்களிடம்
பெற்றுக்கொள்ளலாம்

# வீரர் பகத்சிங்கின் தம்பி



மாவீரர் பகத்சிங் பிரிட்டிஷ் ஆட்சியாளரால் தூக்கிலிடப்பட்டபோது, அவரது இளைய சகோதரர் ரன்பீர்சிங்கின் வயது 6. ரன்பீர்சிங்கும், பகத்சிங்கைப் போலவே கொள்கை உறுதி கொண்டவர். நன்பீர்சிங்கின் மகன் இயேனான் சிங் — இப்போது இந்திய இராணுவத்தில் உயர் அதிகாரியாக ஜம்மு — காஷ்மீர் மாநிலத்தில் பணிபுரிகிறார். பகத்சிங் தம்பி மகன் தான் இயோனன் சிங். பிரதமன் மன்மோகன் சிங் ஜம்மு காஷ்மீர் சென்றபோது அவரது கவனத்துக்கு இது கொண்டுவரப்பட்டது. உடனே பிரதமர் இவரை அழைத்துப் பேசினார். இந்த இயோனன் சிங் — ஈழத் தமிழர்களை அழித்தொழிக்கச் சென்ற ''இந்திய அமைதிப் படையில்'' ஒருவராக ஈழம் சென்றவர். யாழ்ப்பாணத்தில் ஈழத் தமிழர்களை கொன்று குவித்தவர். இதற்காக — இவருக்கு இந்திய அரசு ''வீர சக்கரா'' விருது வழங்கியது. ஆனால் மகன் விருது பெறும் விழாவில் அவரது தந்தையும், பகத் சிங்கின் இளைய சகோதரருமான ரன்பீர் சிங் பங்கேற்க மறுத்துவிட்டார். இதற்கான காரணத்தை விருது பெற்ற மகன் இப்போது ஒரு பேட்டியில் கூறியுள்ளார்.

''என் தந்தை எனது பெரியப்பா பகத்சிங்கைப் போலவே சிறந்த லட்சியவாதி. சுதந்திரம் பெற்ற பிறகே திருமணம் செய்வேன், அதுவும் ஒரு விதவைப் பெண்ணையே திருமணம் செய்வேன், என்று உறுதி எடுத்து, அதை நிறைவேற்றியவர். விடுதலைப் புலிகளின் உறுதியான போராட்டத்தையும், துணிவையும் எனது தந்தை மிகவும் மதிப்பவர். லட்சியத்துக்காக உயிரையும் இழக்கும் இந்த போராளிகளின் தியாகம் மதிக்கப்பட வேண்டும் என்று கருதினார். அந்த தியாகமும், வீரமும் மதிக்கப்படாததைக் கண்டு வேதனையடைந்தார். அதனால்தான் ஈழத்தில் ''அமைதி'' படையில் நான் பங்கேற்று நடத்திய ''வீரச் செயலுக்கு'' விருது வழங்கும் விழாவை அவர் புறக்கணித்தார்'' என்று கூறியுள்ளார்.

பகத்சிங்கின் வாரிசு — அவரது வழியிலேயே சிந்திக்கிறார். தாய் நாட்டின் விடுதலைக்கு பகத்சிங் போராடி வீரமரணம் தழுவியதில் உள்ள நியாயத்தை தமிழ் ஈழத்துக்காகப் போராடும் விடுதலை புலிகளிடமும் அவர் பார்க்கிறார். எனவே விடுதலைப் புலிகளைக் கொன்றதற்காக மகனுக்கு விருது கிடைத்தாலும் — அதில் மகிழ்ந்து நிற்க அவர் தயாராக இல்லை.

நன்றி — உண்மைக்குரல்

# கானக்குயில் 2008



வழமையாக ஜுன் மாதத்தில் நடைபெறும் கானக்குயில் 2008 இந்த வருடம் நவம்பர் மாதத்தில் இளைய கானக்குயிலுடன் சேர்க்கப்பட்டு பிரமாண்டமான கானக்குயிலாக நடைபெற உள்ளது. இசைப்பிரியர்கள் இதை கவனத்தில் கொள்ளவும்.

# ஆசையும் துன்பமும்

ஒரு சமயம் சோளக் கொல்லையில் ஒருவன் காவல் காத்துக் கொண்டிருந்தான். பொதுவாகச் சோளக் கொல்லையில் ஒரு பொம்மையைக் காவலுக்கு வைப்பது வழக்கம். 'பொம்மை எதற்கு? நாம் போய் அங்கே இருந்து கொள்வோமே !' என்று அவன் நினைத்தான் போலிருக்கிறது ! காவலுக்குப் போனவன் கவனமாயிருந்து காவல் காக்க வேண்டுமல்லவா? ஆனால் அவன் அப்படிச் செய்யவில்லை. பொம்மை மாதிரியே இருந்து விட்டான். தூக்கம் வந்தது... தூங்கி விட்டான்.

அந்த நேரம் பார்த்து அந்தக் கொல்லையை மேய்வதற்கு ஒரு நந்தி வந்தது. எங்கிருந்து வந்தது? கயிலாயத்திலிருந்து வந்தது ! சிவபெருமானிடம் இருக்கும் அல்லவா, அந்த நந்தி ! அது தன் விருப்பம் போல் சோளக் கொல்லையை மேய ஆரம்பித்தது.

இவன், என்னமோ தெரியவில்லை. திடீரென்று கண்விழித்துக் கொண்டான். நந்தியைப் பார்த்தான். விரட்டிப் பிடிப்பதற்காக அதன் அருகில் ஓடினான். அது அதற்குள் விருட்டென்று புறப்பட்டு ஆகாயத்தில் பறந்து போய்விட்டது.

'ஆகா, ஏமாந்து போய்விட்டோமே !' என்று நினைத்தான். 'சரி ! இது மறுபடியும் இங்கே வரும் ... அப்போது பார்த்துக் கொள்ளலாம்' என்று நினைத்தான். மறுநாள் தூங்குவது போல் பாவனை செய்து கொண்டிருந்தான். அப்போது அவன் எதிர்பார்த்தது போலவே அந்த நந்தி வந்தது. இவன் மெதுவாகப் பாம்பு மாதிரி நெளிந்து, நெளிந்து அதன் அருகில் சென்றான்.

இவன் அருகில் சென்ற சமயத்தில் அது இவனைப் பார்த்து விட்டது. விருட்டென்று மேலே கிளம்பியது. இவன் ஒரே தாவாகத் தாவி அதன் வாலை அப்படியே பிடித்துக் கொண்டான். அது பறந்து போகிறது. அவன் அதன் வாலைப் பிடித்தபடி தொங்கிக் கொண்டே போகிறான். நேராக நந்தியுடன் கயிலாயம் போய்ச் சேர்ந்தான்.



பார்வதி பரமேசுவரரைப் பார்த்து, ''உங்களுடைய நந்தி என் சோளக் கொல்லையை அழித்து எனக்குப் பெரிய நஷ்டத்தை ஏற்படுத்தி விட்டது. இது நியாயமா?'' என்று வினவினான்.

அதற்கு நஷ்ட ஈடாக ஒரு பை நிறைய தங்கக் கட்டிகளைப் போட்டு அவனிடம் அவர்கள் கொடுத்தார்கள். அவன் அதை வாங்கிக் கொண்டான். பிறகு அந்த நந்தியே அவனைப் பூலோகத்திற்கு கொண்டு வந்து சேர்த்தது.

இவன் வீடு வந்து சேர்ந்தான். பேசாமல் சந்தோஷமாக வாழ வேண்டியதுதானே ! அதை விட்டு விட்டான். ''அவ்வளவு தாராளமாகத் தங்கக் கட்டிகளை அள்ளிக் கொடுத்தார்களே ! அவை உண்மையிலேயே தங்கக் கட்டிகள்தானா .. இல்லே வேறே ஏதாவது !'' என்ற சந்தேகம் அவனுக்கு வந்து விட்டது.

இவன் மனிதன்தானே.. இயல்பாக வரக்கூடிய சந்தேகம். இங்கேயே யாராவது கொஞ்சம் தாராளமாகத் தர்மம் செய்தால் மக்கள் அவன் செய்த செயலைப் பாராட்டுவதில்லை; மாறாக, 'இப்படி அள்ளி வீசுகிறானே, இவன் எங்கே கொள்ளையடித் திருப்பான்..?' என்று சந்தேகப்படுவதைப் பார்க்கிறோம்.

ஒரு தங்கக் கட்டியை எடுத்துக் கொண்டு தன் நண்பன் ஒருவனிடம் சென்றான். அவன் இது சம்பந்தமான விவரம் தெரிந்தவன் – வியாபாரம் செய்பவன், ''இது என்ன நிஜமான தங்கம்தானா, பார்த்துச் சொல்!'' என்று இவன் அவனைக் கேட்டுக் கொண்டான்.

**தென்கச்சி சுவாமிநாதன்**

நண்பன் தங்கத்தைச் சோதித்துப் பார்த்தான். அது நிஜமான தங்கம்தான் என்பதை அவன் புரிந்து கொண்டான். இருந்தாலும் அந்த உண்மையை இவனிடம் நண்பன் சொல்லவில்லை. "இது தங்கம் இல்லை..! பித்தளை..! இப்படி உன்னை ஏமாற்றியது யார்?" என்று மிகவும் தந்திரமாகக் கேட்டான். இவன் அப்பாவித்தனமாக எல்லாவற்றையும் விவரமாக அவனிடம் கூறினான். பிறகு, "சரி வருகிறேன் என்று நண்பனிடம் விடைபெற்று வீடு திரும்பினான்.

மறுபடியும் கடவுளிடம் சென்று, 'இது நியாயமா? என்று கேட்க வேண்டும்' என்று முடிவு செய்தான். அன்றைய இரவும் நந்தி வழக்கம் போல் அவனது வயலில் மேய்வதற்காக வந்தது. இவன் ஓடிச் சென்று அதன் வாலைப் பலமாகப் பிடித்துக் கொண்டான். அவன் வாலைப் பிடித்துக் நந்தி பறக்க ஆரம்பித்தது. அவன் வாலைப் பிடித்துக் கொண்டு தொங்கினான். அவனுக்கு அப்போது காலில் கப்பென ஏதோ பிடிப்பது போல் தெரிந்தது. ஆதலால் தொங்கியபடியே கீழே குனிந்து பார்த்தான். பார்த்தால்.. அவனது நண்பன்... அதுதான் 'பித்தளை' என்று கூறி ஏமாற்றினானே, அவன் இவன் காலைப் பிடித்துக் கொண்டு தொங்கியபடியே வந்து கொண்டிருந்தான். அவனுக்கும் தங்கக் கட்டியைப் பெற வேண்டும் என்று ஆசை. எனவேதான் இப்படி செய்தான்.

நடுவானத்தில் நந்தி சென்று கொண்டிருந்தது. அப்போது காலைப் பிடித்திருந்தவன் வாலைப் பிடித்திருந்தவனைப் பார்த்து, "அது சரி... உனக்கு எவ்வளவு தங்கம் கொடுத்தார்கள்?" என்று கேட்டான்.

அதற்கு வாலைப் பிடித்திருந்தவன் "இதோ இவ்வளவு இருக்கும் !" என்று இரு கைகளையும் விரித்துக் காட்டினான். அவ்வளவுதான் ! இவர்கள் இரண்டு பேரும் மிகவும் வேகமாக பூலோகத்துக்கு வர ஆரம்பித்து விட்டார்கள் ! நந்தி மேலே பறந்து போய் விட்டது. இவர்கள் பொத்தென்று பூமியில் வந்து விழுந்தார்கள்.

இந்தக் கற்பனைக் கதையிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டிய நீதி இதுதான்:

வாலைப் பிடித்தவன்.. உண்மையைச் சந்தேகப்பட்டான்.

காலைப் பிடித்தவன் .. பேராசைப்பட்டான்.

உண்மையைச் சந்தேகப்படுபவர்களுக்கும் – பேராசைப்படுபவர்களுக்கும் இது போன்ற கதிதான் ஏற்படும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும் ●

## சைவக் கோவில் ஒன்றியம்

அண்மையில் சைவக் கோவில் ஒன்றியத்தின் வருடாந்த கூட்டம் நடைபெற்றதாக அறிகிறோம். 5 சைவக் கோவில்கள் இருக்கும் ஒன்றியத்தில் ஒற்றுமையை காணமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. கனக துர்க்கையம்மன் கோவில் தாங்கள் இரகுநாத ஐயரின் பஞ்சாக்கத்தைதான் பின்பற்ற வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார்கள். இதனால் வேற்றுமையில் ஒற்றுமை காணுவோம் என்று ஆர்ச்வே கோவில் நிர்வாகத்தினர் தமிழர் தகவலுக்கு கூறினார்கள். 5 கோவில்களாக இருக்கும் இவர்களே ஒன்றுபடவில்லை என்றால் லண்டனில் உள்ள அனைத்து கோவில்களையும் ஒன்றாக்குவது எப்படி?

லண்டனில் புலம்பெயர்ந்தவர்களின் வணிகம் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளது. இறக்குமதி செய்வதிலோ, வியாபாரம் செய்வதிலோ இவர்களின் பங்கு பண்மடங்கு உயர்ந்துள்ளது. முன்பு இவர்கள் தங்கள் விளம்பரங்களை தகுதியானவர்களிடம் கொடுப்பதற்கு எந்த வசதியும் இருந்ததில்லை. ஆனால் இன்று மக்களை சென்றடையக்கூடிய வகையில் தீபம் தொலைக்காட்சி, தமிழர் தகவல் மாத இதழ், புதினம், ஒரு பேப்பர், ஈழ முரசு, வடலி போன்ற பத்திரிக்கைகள் வந்து கொண்டிருக்கின்றன. இவற்றை வணிகர்கள் பயன்படுத்தலாமே.

## மரண அறிவித்தல்

கொக்குவில் பிறந்து லண்டன் ஈஸ்ட்ஹேமில் வாழ்ந்து வந்த சீதாலட்சுமி பாலயோகன் 26.05.2008–ல் சிவபதம் அடைந்து விட்டார். அன்னாரின் மறைவுக்கு தமிழர் தகவல் ஆழ்ந்த அனுதாபத்தையும் அவர்களது குடும்பத்துக்கு இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறது.



# பச்சை வயல் கனவு

## அத்தியாயம் 7

தாமரைச்செல்வி

**வா**ய்க்காலில் தண்ணீர் பாய்ந்தோடிக் கொண்டிருந்தது.

வாய்க்காலுக்குள் மாடுகளை இறக்கிக் குளிப்பாட்டிக் கொண்டிருந்தான் சிவம். மயிலரிடம் காசு கொடுத்து வண்டில மாடுகள் வாங்கியிருந்தார்கள். நல்ல வெள்ளை மாடுகள்.

சிவத்துக்கு வாய்க்காலில் மாடுகளை தண்ணிக்கு விடுவதும் குளிப்பாட்டுவதும் முக்கிய வேலைகளாய் ஆகிவிட்டது. காய்ச்சல் வந்ததில் கொஞ்சம் மெலிந்து போயிருந்தான். காய்ச்சல் நன்றாக குறைந்து அவன் கொஞ்சம் தேறியதும் தங்கள் வண்டிலிலேயே இருவரும் ஊருக்குப்போய் வந்திருந்தார்கள்.

ஊரில் நின்ற இரண்டு நாளும் ஆச்சியும் அன்னமும் ஒடியற்கூழும், புளிக்கஞ்சியும் காய்ச்சிக் கொடுத்தார்கள். ஆசை தீர புளிவெட்டையில் கிளித்தட்டு மறித்தான். சிவலையையும் வெள்ளையையும் தடவிக் கொடுத்தான்.

அவனுக்கு ஒருவித மரியாதை வீட்டில் இருந்தது. அப்பு முணுமுணுக்கவில்லை. உழைக்கிற பிள்ளை என்ற மதிப்பு அவனுக்கு திடீரென்று ஏற்பட்டது போலிருந்தது. இது அவனுக்கு மகிழ்வையே ஏற்படுத்தியது.

அதனால் மூன்றாம்நாள் அண்ணனோடு விருப்பத்துடனேயே புறப்பட்டு வந்தான். வேலாயுதம் வண்டிலில் அமர்ந்திருக்க அவன் கம்பு வைத்து மாடுகளை செலுத்தினான். எதிர்க்காற்று வெற்று மார்பில் மோதியபோதும் தலைகலைந்த போதும் உற்சாகமாகவே இருந்தது. காய்ச்சல் வந்த உடனும் அழுததை நினைக்க இப்போது வெட்கமாக இருந்தது.

மாடுகளை வாய்க்கால் நீருக்குள்ளிருந்து கரைக்குக் கலைத்தான் அதே வாய்க்காலில் சிறிது தூரத்தில் நின்று நந்தாவதியும் அருநோசின் மனைவி மெனிக்காவும் தமது பிள்ளைகளுடன் குளித்துக் கொண்டிருந்தார்கள். இவர்கள் அநுராதபுரப்பக்கமிருந்து வந்தவர்கள் என்பதை அண்ணன் மூலம் அறிந்திருக்கிறான். எங்கிருந்து எங்கே வந்திருக்கிறார்கள் என்று அவன் ஆச்சரியப்படுவதுண்டு. இந்த நீர்ப்பாசனக்காணியை பண்டா வாங்கி ஏழெட்டு வருடமாகிறதாம். பண்டாவும் அருநோசுவும் நல்ல உழைப்பாளிகள். தங்கள் மனைவி பிள்ளைகளுடன் இந்த காட்டுக்குள் வந்து வசிக்க அவர்களுக்கு எவ்வளவு துணிச்சல் இருக்க வேண்டும் என்றும் அவன் வியப்பதுண்டு.

அவன் மாடுகளை சாய்த்துக் கொண்டு வந்து கொட்டிலுக்குள் கட்டினான். குடிசைக்கு பின்புறம் நின்று வயலைப் பார்த்தான். தூரத்தில் வேலாயுதம் மண்வெட்டியுடன் வரம்பில் நடப்பது தெரிந்தது. பயிரின் பசுமையும் அலை காற்றுக்கு அசைவதும் அழகாய்த் தெரிய இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

பயிர்கள் வளர்ந்து குடலை தள்ளி கதிர் பிடித்தது. பொன் நிறத்தில் நெற்கதிர்கள் முற்றிச் சரிந்து நின்றன.

தை பிறந்திட்டுது. நல்ல நாளில புதிர் காய்ச்ச வேணும். வாற வெள்ளிக்கிழமை தைப்பூசம் வருகுது. அண்டைக்கு புதிர் காய்ச்சலாம்.

வேலாயுதம் நெற்கதிர்களை கொய்து எடுத்து வந்தான்.

ஒரு கட்டு நெற்கதிரை மாவிலையோடு சேர்த்து குடிசை வாசல் மேல்தடியில் கட்டினான். போனவருடம் கட்டிய நெற்கதிரும் மாவிலையோடு வாடிப்போய் பக்கத்தில் இருந்தது.

மிகுதிக்கதிரை கசக்கி நெல்லைப் பிரித்து எடுத்தான். ஓலைப்பாயில் பரவி முற்றத்தில் சிறிது நேரம் காயவைத்தான். நெல்லைக்குற்றுவதற்காக யோசித்துக் கொண்டிருந்த போது நந்தாவதி தான் குற்றித்தருவதாக எடுத்துப் போய் குற்றி அரிசியாக்கி கொண்டு வந்து கொடுத்தான். தைப்பூசம் அன்று வேலாயுதம் சிவத்திடம் பத்துசதம் கொடுத்து


''மயிலற்ற கடையில கற்பூரமும் வெத்திலை பாக்கும் வாங்கி வா'' என்றான். சிவம் காசு வாங்கிக் கொண்டு மாடுகளை வண்டிலில் பூட்டினான்.

''ஏன் வண்டில் எடுக்கிறாய் உதில நடந்து போய் வாங்கி வாறதுக்கு'' சிவம் தயங்கி நின்றான்.

''இல்லையண்ணை வண்டிலில போயிட்டு வாறன்''. ''சரிசரி போயிட்டுவா'' தடுக்க மனம் வராமல் தலையசைத்தான்.

மாடுகள் சதங்கை ஒலியுடன் மண் தெருவில் நடந்தன. வண்டிலில் அமர்ந்து மாடுகளை விரட்டிக் கொண்டு பிரயாணம் செய்வதில் ஏற்படும் மகிழ்ச்சி தனியானது.

மத்தியான நேரத்து வெய்யில் சுள்ளென்று எரித்தது. பரந்தன் சந்தியில் இருந்த மயிலரின் கடையை நோக்கிப் போனான். இப்போது மேலும் ஒன்றிரண்டு கடைகள் தோன்றி யிருந்தன. கடிதங்கள் அடங்கிய காக்கிப்பை தோளில் தொங்க காக்கித் துணியில் சேட்டுக் காற்சட்டை அணிந்த ஏரம்பு விசில் ஊதி கடிதம் கொடுத்துக் கொண்டிருந்தான். சந்திக்கு முன்னதாக ஒரு நீளக் கொட்டிலில் தபால்கந்தோர் இயங்கத் தொடங்கியிருந்தது.



மயிலரின் கடை வாசலில் வண்டிலை நிறுத்திக் குதித்து இறங்கினான். நாலைந்து ஆட்கள் மூட்டை முடிச்சுடன் கிழக்குப் பக்கம் திரும்பிய வீதியில் நடந்து போய்க்கொண்டிருந் தார்கள். சமீப நாட்களாய் பரந்தனின் மனிதர்கள் நடமாட்டம் ஓரளவு தென்பட்டது.

அவன் கடைவாசலுக்கு போன போது அவன் வயதையொத்த ஒரு இளைஞனுடன் மயிலர் கதைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தான். சிறிது தயங்கி நின்றான். அவனிடம் திரும்பிய மயிலர்,

''என்ன சிவத்தான் என்ன வேணும்'' என்று கேட்டார்.

''கற்பூரமும் வெத்திலை பாக்கும் வேணும்''

''என்ன விசேசம்''.

''இண்டைக்கு புதிர் காய்ச்சிறம் அண்ணை''

''அட, தைப்பூசமெல்லே. விசேசம் தான். எட்டுச் சதம் தா''.

உள்ளங்கை விரித்து எட்டுச்சதம் எண்ணிக் கொடுத்தான்.

கிடுகு வேய்ந்த சிறு கொட்டில். காட்டுத் தடிகளினால் வரியப்பட்ட தட்டுகளில் புகையிலை, பனங்கட்டி, ஒடியல், பனாட்டு ஒரு புறமும் சிறு சிறு சாக்குப் பைகளில் மல்லி, மிளகாய், உப்பு போன்றவையும் வரிசையாய் வைக்கப்பட்டிருந்தன.

''கொஞ்சம் பொறு கார்த்திகேசு. சிவத்தானுக்கு குடுத்திட்டு வாறன்''.

அப்போதுதான் சிவம் திரும்பி அவனைப் பார்த்தான்.

நாலுமுழ வேட்டி கட்டி மேலே கேட்டு அணிந்திருந்தான். மெல்லிய மீசை நெளி நெளியாய் தலைமயிர். கையில் ஒரு துணிப்பை வைத்திருந்தான்.

''இந்தத் தம்பி கார்த்திகேசு. இங்கால முரசுமோட்டையில இவைக்கு நீர்ப்பாச்சல் காணி கிடக்கு. முந்தி தகப்பன் வந்து வயல் செய்தவர். அவர் மோசம் போன பிறகு இந்தத் தம்பிதான் வந்து செய்யுது. சாவகச்சேரி ஆட்கள் இப்ப போற கரிக்கோச்சியில் ஊருக்குப் போக வெளிக்கிடுகிறார்''.

அவன் சிவத்தைப் பார்த்து சிரித்தான். ஏனோ பார்த்த முதல் பார்வையிலேயே அந்த முகமும் சிரிப்பும் சிவத்துக்கு மிகவும் பிடித்துப் போனது. சேட்டுப் போட்டிருந்த அவனை கொஞ்சம் மதிப்போடு பார்த்தான். இந்தக் காட்டுக்குள் தன் வயதை ஒத்த ஒருவனைக் கண்டதால் ஏற்பட்ட மகிழ்ச்சியுடன் சொன்னான்.

''எனக்கு சிவப்பிரகாசம் பேர். முழுப்பேர் ஒருதரும் சொல்லிக் கூப்பிடுறேல்லை. எல்லோரும் சிவம் எண்டுதான் கூப்பிடுவினம்''.

பிறகு கேட்டான்.

''இங்கயிருந்து முரசுமோட்டை கன தூரமா?''

கிழக்குப் பக்கத்தால மூண்டு கட்டை போகவரும். நீங்கள் எங்க இருக்கிறீங்கள்''.

''பரந்தன் சந்தியிலயிருந்து மேற்காக ஒண்டரைக் கட்டைப் போகவரும். அஞ்சாம் வாய்க்கால் எண்டு சொல்லுறது. கரிக்கோச்சி வெளிக்கிட்டிடும். வாங்கோ கொண்டுபோய் ஸ்ரேசனில விட்டுவிடுறன்.

''கொஞ்சந்தூரம் தானே. நான் நடந்து போறன்''.

''இல்ல வாங்கோ. கெதியாய் போயிடலாம்''.

ஓம் மோனை. பரந்தன் சந்தி தாண்டி விட்டு விடுவான். கதைச்சுக் கொண்டு போக வந்திடும்.

''சரியண்ணை. போயிட்டு வாறம்''.

வண்டிலில் சிவம் ஏற அவனுக்கு அருகாக கார்த்திகேசு ஏறிக் கொள்ள வண்டில் புறப்பட்டது. தங்களைப் பற்றியும் தங்கள் வீட்டாக்கள் பற்றியும் கதைத்துக் கொண்டே போனார்கள்.

கார்த்திகேசுவின் கதைகளைப் பார்த்தால் கொஞ்சம் வசதியுள்ளவனாய் தெரிந்தது. சாவகச்சேரியில் சின்னதாய் ஒரு கல்வீடு இருக்கிறதாம். சாவகச்சேரி விதானைக்கு சொந்தக்காரராம்.

ஒரு நாளைக்கு தான் ஐந்தாம் வாய்க்காலுக்கு அவர்கள் வீட்டுக்கு வருவதாகச் சொன்னான். அவனையும் முரசுமோட்டைக்கு வரச் சொல்லிக் கேட்டுக் கொண்டான். ஸ்ரேசன் வாசலில் வண்டில் நின்றது.

''கரிக்கோச்சி நிற்குது. கெதியாய் போய் ஏறுங்கோ''.

கார்த்திகேசு அவனைப்பார்த்து சிரித்துத் தலையாட்டி விட்டு உள்ளே போக அவன் வண்டிலைத் திருப்பினான். இவனை மாதிரியே நானும் சேட்டுப் போட்டுக் கொண்டால் நன்றாய் இருக்கும் என்று நினைத்துக் கொண்டான்.

சிவம் வீடு வந்த உடனும் சமையல் அலுவலைத் தொடங்கினார்கள். மண்பானையில் புது அரிசி போட்டு காய்ச்சி இறக்கி வைத்துவிட்டு நாலைந்து கறிகள் வைத்தார்கள். சமையல் முடிய பொழுது சாய்ந்து கொண்டு வந்தது. கதிர்கள் முற்றிச் சரிந்திருந்த வயலின் நடுவே மூன்று தடிகளை வேலாயுதம் கொண்டுபோய் முக்கோணமாய் நட்டான். வெள்ளை வேட்டித் துணியால் மூன்று தடிகளையும் இணைத்துக் கட்டினான். வீட்டுக்கு வந்து பெரிய வாழையிலையில் பச்சையரிசிச் சோறும் கறிகளும் போட்டு அப்படியே கடகத்துக்குள் எடுத்து வைத்து வயலுக்கு கொண்டு போனான். இன்னொரு வாழையிலை, மூன்று இளனி, வெத்திலை பாக்கு, வாழைப்பழம், கற்பூரம், தேசிக்காய் எல்லாவற்றையும் சிவம் எடுத்துக் கொண்டு போனான்.

வயல் நடுவே வெள்ளைத்துணி கட்டிய தடிகளின் மீது கடகத்தை வேலாயுதம் வைத்துவிட்டு முன்னால் இலை வைத்து வெத்திலை, பாக்கு, தேசிக்காய் எல்லாவற்றையும் அதில் வைத்தான். மூன்று இளனிகளையும் முகப்புச் சீவி நடுவே வைத்து அதன் மீது கற்பூரத்தை வைத்தான் சிவம். தேங்காய் எண்ணையில் தோய்த்து பந்தம் கொழுத்தி இரு பக்கத்திலும் நட்டு வைத்தான்.

வேலாயுதம் கற்பூரம் கொழுத்தி விட்டு ஒரு வினாடி கண்மூடி நின்றான். பிறகு நாங்கள் திரும்பிவரும் வழி தவிர்ந்த மூன்று திசைகளையும் பார்த்து கூ.. என குரல் எழுப்பிக் கூவினான். அந்த வெட்ட வெளியில் அவன் குரல் கலந்து தேய்ந்து மறைந்து குளிராய் வீசியது.

''வா, பிறகு வருவம்''.

இருவரும் திரும்பி வீட்டுக்கு வந்தார்கள்.

சிறிது நேரத்தின்பின் மறுபடி வயலுக்குப் போனார்கள்.

கற்பூரம் எரிந்து முடிந்திருந்தது. பந்தங்கள் இன்னமும் எரிந்து கொண்டிருந்தன. முன்னால் நின்று கைகளைக் குவித்து கும்பிட்டார்கள்.

வேலாயுதம் கண்களை மூடித் திறந்தான்.

''இந்த மண் எங்களுக்கு கடவுள் மாதிரியடா. எங்களுக்கு நல்லதுதான் தரும் நாங்கள் கஷ்ரப்பட்டால் அதுக்குத்தக்க பலன் கிடைக்கும். அதுக்காக இந்த மண்ணுக்கு நாங்கள் செய்யிற படையல்தான் இது''.

சிவம் பந்தம் எரியும் வெளிச்சத்தில் வேலாயுதத்தைப் பார்த்தான். இவனுக்குத்தான் எத்தனை நம்பிக்கை. இந்த மண் எங்களுக்கு வாழ்வுதரும் என்று.

வேலாயுதம் கத்தி எடுத்து இளனிகளை வெட்டி இரண்டாய் பிளந்து வைத்தான். படையலுக்கு தண்ணீர் தெளித்து கடகத்தோடு எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு வீட்டுக்கு வந்தார்கள்.

''நீ போய் பண்டா அருநோசு வீட்ட சொல்லிப்போட்டு வா. முன்னால செல்லத்துரை அண்ணையிட்டையும் சொல்லிவிடு. அவையள் தங்கட புதிர் சாப்பிட்டிட்டினம். அதால எங்களோட வந்து சாப்பிடுவினம்''.

சிவம் போய் சொல்லிவிட்டு வந்த சிறிது நேரத்தில் எல்லோரும் வந்தார்கள்.

பக்கத்தில கைவிளக்கு கொழுத்தி வைத்துவிட்டு வேலாயுதம் நிலத்தில் இலையை எடுத்து வைத்து சோறு கறி எல்லாவற்றையும் குழைத்தான். எல்லோரும் வந்து முன்னால் வட்டமாக அமர்ந்து கொள்ள எல்லோருக்கும் இலைகளில் வைத்த குழையலை சிவம் எடுத்துக் கொடுத்தான். பெரிய இலையில் மேலும் சோறு கறி போட்டு குழைத்து வேலாயுதம் கொடுக்க வாங்கி சிவமும் பக்கத்தில் அமர்ந்து கொண்டு சாப்பிட்டான். அந்த சோற்றுக் குழையல் மிகவும் ருசியாக தொண்டைக்குள் இறங்கியது.

''இந்த முறை வேலாயுதனுக்கு நல்ல வேளாண்மை நல்லாய் பொலி அடிக்கும்''.

செல்லத்துரை சொன்னதைக் கேட்டு சிவம் வேலாயுதத்தைப் பார்த்தான். அவன் முகம் மலர்ந்து போயிருந்தது.

''இந்த மண் எங்களுக்கு வாழ்வு தரும்''.

அந்த வார்த்தைகள் வெகு நேரத்துக்கு காதுகளில் இரைந்து கொண்டேயிருந்தது.

—தொடரும்

தேனையும் பாலையும் கன்னலையும் ஒத்து இனிய கோனவன் போல் வந்து என்னைத் தன் தொழும்பில் கொண்டருளும் வானவன் பூங்கழல்கள் பணிந்து ஈழத்துச் சிவாலயங்களின் வரிசையிலே கொழும்பு முகத்துவாரம் சுவர்ணாம்பிகா சமேத அருணாசலேஸ்வர ஆலய வரலாறாக இக்கட்டுரை இடம்பெறுகிறது.

திருக்கோயிலில்லாத திருவிலூரும்<br>
திருவெண்ணீறணியாத திருவிலூரும்<br>
பருக்கோடி பத்திமையாற் பாடாவூரும்

எம் மனக் கண்முன் தோன்றுவது ரமண மகரிஷி வாழ்ந்த திருவண்ணாமலைதான்.

அருணாசலசிவ அருணாசலசிவ அருணாசலா<br>
அருணாசலசிவ அருணாசலசிவ அருணாசலா

இவ் அடிகள் ஸ்ரீ ரமணமகரிஷி திருவண்ணா மலையை வலம் வரும்போது அவருடைய திருவாக்காக வெளிவந்தவைகளைத் தொடர்ந்து சென்ற அவரது சீடரொருவர் எழுதிக் கொண்டது. திருவண்ணாமலையில் திருக்கார்த்திகையின் போது ஒளி வடிவாகக் காட்சி தருவதும், அடியவர்கள் கிரிவலம் வருவதும் நாமறிந்தது. நினைக்க முத்தி தரும் பெருமை பொருந்திய திருவண்ணாமலையை



## கொழும்பு முகத்துவாரம்

# ஸ்ரீ சுவர்ணாம்பிகா சமேத ஸ்ரீமத் அருணாசலேஸ்வர சுவாமி ஆலயம்

பாங்கினொடு பலதளிக ளில்லாவூரும்<br>
விருப்போடு வெண் சங்க மூதா ஊரும்<br>
விதானமும் வெண் கொடியு மில்லாவூரும்<br>
அருப்போடு மலர் பறித்திட்டுண்ணாவூரும்<br>
மவையெல்லாம் ஊரல்ல வடவிகாடே !

இவ்வாறாக திருக்கோவில்களின் பெருமையை அப்பர் சுவாமிகள் விதந்துரைக்கின்றார். திருக் கோவில்களால் ஊருக்குப் பெருமை. நம் இந்து மக்களுக்குப் பெருமை. இந்தப் பெருமை சிவஸ்தலங்களால் மேலும் உயர்ந்து நிற்பதை எமது நாயன்மார்கள் திருக்கேதீஸ்வரம், கோணேஸ்வரத்தின் மேல் பாடியருளிய பாடல்களால் அறியக்கூடியதாக இருக்கின்றது. எனவே இந்த இக்கட்டான சூழ்நிலையிலும் எமது இந்துமதம் சிதைந்து போகாமல் சைவநெறியில் வாழ்கிறதென்றால் அதற்கு இந்த சிவாலயங்களே காரணமாக அமைகின்றன. இந்த வகையில் பெருமை பெற்ற சிவாலயங்களுள் முகத்துவாரம் அருணாசலேஸ்வர ஆலயமும் ஒன்றாகும். அருணாசலேஸ்வரர் என்றால் முதற்கண் நினைக்கத் தோன்றும் வகையில் ஈழமணித் திருநாட்டின் தலைநகரம் கொழும்பு மாநகரின் கண்ணே முகத்துவாரம் என்ற இடத்தில் கடலோடு கூடிய சாரலில் அமைந்திருப்பது தான் 'சுவர்ணாம்பிகா சமேத ஸ்ரீ அருணாசலேஸ்வரர்' ஆலயம். அனைத்து இன மக்களும் இணைந்து வாழும் இடத்தில் இப்படியொரு ஆலயமா? என்று எண்ணும்போது இந்த ஆலயத்தை எமக்கெனத் தந்து போயுள்ளவர்களை நினைவு கூருவது பொருத்தமானதும் நன்றி செலுத்துதலுமாக அமையும். இந்த ஆலயத்தை விட இன்னும் ஒருபடி உயர்ந்து தலைநகரின் கண்ணே ஒளி பொருந்திய திருக்கோவிலாக பரிணமிக்கிறது பொன்னம்பலம் ராமநாதன் அவர்களின் பொன்னம்பல வாணேஸ்வரர் ஆலயம். இவ்வாறாக நமது இலங்கைத் தீவின் தலைநகரின் கண்ணே அமைந்து எத்தனையோ பக்தர்கள், பெரியோர்கள், சைவ அறிஞர்கள், எனப் பலவகையான அடியவர்களைத் தன்பால் ஈர்த்து அவர்களுக்கு அருளும் ஆசியும் வழங்கிக் கொண்டிருக்கின்றார் இந்த குஞ்சிதபாதன் என்றால் இந்தப் பெருமையெல்லாம் அந்த மூலகர்த்தாக்களையே சாரும். நேரம் தவறாத பூசைகள், உற்சவங்கள் போன்றவற்றைத் திறம்பட நடாத்தும் நிர்வாகத்தர், பொறுப்புணர்ந்து செயற்படும்

பூசகர்கள் மற்றும் சேவை செய்பவரெல்லாம் ஒருங்கே இணைந்து இத்திருக்கோவில்களை சிறப்படையச் செய்து, திருக்கோவில்கள் மேலும் மெருகேறும் தன்மையைப் பார்க்கும்போது இவற்றை வழிபட எமக்குச் சிறந்த முறையிலமைத்துத் தந்துபோயுள்ள அந்த மூலகரணர்களை நாம் போற்ற வேண்டாமா?

''நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்றாது புத்தேள் உலகு''

ஒருவன் நிலவுலகில் நிலையான புகழைச் செய்வானானால் தேவருலகம் அவனைப் போற்றுமே யன்றி அறிவால் சிறந்தவரை மட்டும் போற்றாது. இது வள்ளுவரின் வாய்மொழி. அவரின் வாய்மொழி போல் புகழாலும், ஏன் அறிவாலும் கூட, ஒப்பில்லாதவர் களாகி தேவர்களிடத்தே கூட வாழ்த்தையும் பெற்றவர்கள் இவர்கள். இவர்களை நாமும் வாழ்த்தியேயாக வேண்டும்.

இறைவன் மேல் மாறாத அன்பு பூண்டொழுகி வந்த திரு. திருமதி பொன்னம்பலம் ஆகியோருக்குத் தவப்புதல்வர்களாக வந்துதித்தவர் கள்தான் பொன்.இராமநாதன், பொன்.அருணாசலம் ஆகியோர். இறைவன் மேல் கொண்ட பக்தி மேலீட்டினால் பொன்னம்பல முதலியார் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டதுதான் கொச்சிக் கடை பொன்னம்பல வாணேஸ்வரர் ஆலயம். பின் அவரது புதல்வன் சேர்.பொன்.இராமநாதன் அவர்கள் சிற்பக் கலைஞர்களைக் கொண்டு மேலும் மெருகூட்டி தனிக் கருங்கல்லினால் அழகுற வடிவமைத்தார். இளையவரான சேர்.பொன் அருணாசலம் அவர்கள் முகத்துவாரக் கடலோரத்தில் சுவர்ணாம்பிகா சமேத அருணாசலேஸ்வரர் ஆலயத்தைச் சிறந்த முறையில் உருவமைத்துப் போயுள்ளார். இவர் இதனை உருவமைத்த வரலாற்றைப் பார்ப்போம்.

நாயிற் கடைபட்டு வாழும் அறிவிலிகளாகிய எம்மைத் திருத்தி இறைவன் மேல் நாட்டம் கொள்ள, வழி நடத்தவென அவ்வப்போது நம்மிடையே ஒருவர் தோன்றுவார் என்பதைக் கேள்விப்பட்டிருக்கின்றோம். இந்த வகையில் வந்துதித்த மகான்தான் ''ஆனைக்குட்டிச் சுவாமியார்''. இவரின் பிறப்பிடம் இந்தியா. இவரும் இன்னுமொரு சாதுவும் தெரு வீதிகளிலே உலாவிக்கொண்டு வரும்போது பெருநாளி என்ற இடத்தில் தொற்று நோயால் பலர் இறந்ததை ஊர் மக்கள் வாயிலாக அறிந்த இவர்கள் நோயாளிகளின் வீடுகளுக்குச் சென்று உணவு வாங்கி அருந்தி நோயாளிகளைக் காப்பாற்றினார்கள். இவ்வாறாக மக்களுக்குப் பல வழிகளில் சேவை செய்த இந்த இருவரும்தான் பெரியானைக்குட்டி சுவாமியாரும் குயின்பரியில் சமாதியாகிய நவநாதச் சித்தரும். இந்த இருவரும் ஈழம் வந்து ஈழ மக்களை இரட்சிக்கவேண்டுமென்பது இறைவன் நியதி போலும். இறைவனின் திருவுளப்படி ஈழம் வந்தடைந்த பெரியானைக்குட்டி சுவாமிகள் மலையகத்தின் தலைநகரான கண்டித்தெரு வீதிகளிலும் ஆலயச் சூழல்களிலும் சுற்றித் திரிந்து வாழ்ந்து வந்தார். காலம் செல்ல ஒரு சலவைத் தொழிலாளியிடம் சேர்ந்து அவரின் அன்பான உபசரிப்பில் அவருக்கு உதவியாக இருந்து, பல அற்புதங்களைச் செய்தார். 'இறைவன் படைப்பில் உயர்வு தாழ்வில்லை எல்லா உயிர்களும் ஒன்றே' என்பதை நிலைநாட்டப் பற்பல சாதனைகளைச் செய்து அடியவர்களின் அன்பால் ஆட்கொள்ளப்



பட்டார். சித்தர்கள் நிலையை அடைய வேண்டி இவர் இந்தியா சென்று பல சாதுக்களோடு சேர்ந்து சாதுவானார். இந்தியா முழுவதும் பல வருடங்களாகச் சித்தர்களோடு சித்தராக உலாவி மீண்டும் இலங்கை வந்து சேர்ந்தார். கொழும்பின் பல பாகங்களிலும் யாரென்று காட்டிக் கொள்ளாது சுற்றித் திரிந்த இவர் கப்பித்தாவத்தையிலுள்ள கஷ்டப்பட்ட நிலையில் கல்லுக்குள் மாணிக்கம் போல் திகழ்ந்த ஈனமுத்து என்பவரிடம் சென்றடைந்து அவருடன் வாழ்ந்து வந்தார். தன் குடும்பத்தைக் கூட கவனிக்கப் போதுமான வருமானம் இல்லாத நிலையிலும் இவரைக் கைவிடாமல் தன்னாலானமட்டும் கவனித்து வந்தார். இந்த நிலையில் சுவாமியார் ஒருநாள் ஈனமுத்து வெளியே சென்றிருந்த வேளை சுவரில் தலையைச் சாய்த்தபடி காலை நீட்டிக் கொண்டு உயிர் போனவர் போல் காட்சியளித்தார். வீடு வந்த ஈனமுத்து சுவாமியின் நிலையைக் கண்டு உள்ளம் பதைபதைத்து இந்த இக்கட்டான நிலையில் சுவாமி எங்களைத் தவிக்க விட்டாரே என்று கதிகலங்கி ஈ[illegible]யுகளை எப்படி நிறைவேற்றுவேன் என்று [illegible]லங்கி நிற்பதை அறிந்த சுவாமிகள் 'நான்

செத்துப் போனேன் என்று அழுகிறாயா?' என்று கேட்டார். அந்தக் குரலைக் கேட்டதும் ஆச்சரியமடைந்து, ஆனந்தக் கண்ணீர் பெருக சுவாமியைச் சுத்தம் செய்தார். அப்பொழுது அவரிடமிருந்து சந்தன வாசனை வீசியது. சுவாமி ஈனமுத்துவைப் பார்த்துக் 'கலங்காதே ! இனிப் பணம் எல்லாம் வரும்' என்றார். அவரின் வாய்மொழி பலித்தது. பணம் பெருகியது. பெரிய தனவந்தர்கள் ஈனமுத்து வீட்டுக்கு வந்து போய்க் கொண்டிருந்தார்கள். ஈனமுத்து, சுவாமியார் வீதி சுற்றி வரவேண்டி ஒரு வண்டில் மாடு வாங்கினான். சுவாமிகள் இதில் பவனிவரும் போது வழியிலே நோயாளிகள், வறியவர்களைக் கண்டால் நின்று ஆறுதல்படுத்துவார். வெற்றிலை மென்ற திருவாயிலிருந்து உமிழ்நீர் வழிந்தபடி இருக்கும். அவர்களுக்கு அந்த எச்சிலைத் தடவுவார். அத்துடன் நோய் மறைந்து போகும். செட்டிமார் தம் பணப் பெட்டியைத் தொட மாட்டாரா? என்று நிற்பர். சுவாமி தாம் விரும்பியவரின் பெட்டியிலிருந்து பணத்தை அள்ளி எடுப்பார். தாம் விரும்பியவர்களுக்கு ஆசை தீரக் கொடுப்பார். எந்தப் பெட்டியில் கை வைக்கப்பட்டதோ அந்தப் பெட்டி பணத்தால் நிரம்பும்.

இப்படியாக உலாவரும் காலை சிறீமான் பொ.அருணாசலம் செய்த தவப்பயனாக சுவாமியாரின் தரிசனம் கிட்டியது. சுவாமியார் அருணாசலம் அவர்களின் வீட்டிற்கு அடிக்கடி போய் வரும் நேரம் படிப்படியாக சுவாமிகளின் மகிமைகளை அறியலானார். இவ்வாறாக சுவாமியாரை உபசரித்து மகிழும் காலை, ஒருநாள் அவர் வீட்டிற்குச் சென்றிருந்த சுவாமியார் ''இன்று உன் வீட்டில் ஒரு மங்கள காரியம் நடைபெறப்போகிறது'' என்று திருவாய் மலர்ந்தார். அவரது தீர்க்க தரிசனம் பலித்தது. திருமதி சிவானந்தம் பூப்பெய்திய தினம் தான் அந்த நாள். இதன்பின் குடும்பத்தவர் அனைவரும் சுவாமிமேல் பெரு மதிப்பு வைத்து அன்பு செலுத்தலாயினர்.

இவர்களின் சீடர்களின் முதன்மையானவர்தான் சித்தானைக்குட்டி சுவாமியாராகும். தன் குரு சமாதியடையுங் காலம் நெருங்கி விட்டதைத் தெய்வீக தரிசனத்தால் அறிந்த சித்தானைக்குட்டி சுவாமி தான் நின்ற இடத்திலிருந்து கொழும்புக்கு விரைந்து வந்தார். அவர் குருவைத் தரிசித்து வேறு எங்கும் செல்லாது அவரிருந்த சுற்றுச் சூழலிலேயே சுற்றித் திரியலானார். அவரின் உள்ளக் கிடக்கையை அறிந்த சுவாமியார் சித்தானைக் குட்டியை அருகிலழைத்து என்னை யாழ்ப்பாணத்தில் சமாதி வைக்கும் எண்ணத்தைக் கைவிட்டுவிடும்படி கூறி அங்கு ஏற்கனவே ஒரு சமாதி வைக்கப்பட்டுள்ளது (அதுதான் கடையிற் சுவாமிகளின் சமாதி) என்று கூறி அந்த மகான் நடமாடிய பூமியில் தன்னை வைக்க வேண்டாமென்றுங் கேட்டுக் கொண்டார்.

இவர் சமாதியடையும் நேரம் நெருங்கிவரும் வேளை சித்தானைக் குட்டி சுவாமியை அழைத்து, 'நீ இங்கு ஏன் வட்டமிட்டுக் கொண்டு திரிகிறாய் முனீஸ்வரம் போ' என்று அங்கு அனுப்பி வைத்தார். அவர் முனீஸ்வரத்தில் இருக்கும் போது சுவாமிகள் சமாதியடைந்து விட்டார். சுவாமியவர்களின் சமாதி கொழும்பு முகத்துவாரம் தீர்த்தக்கரையில் சைவ சமய சாதிக் கிரியைகளுடன் வெகு சிறப்பாக நிறைவேற்றப்பட்டது. இவ்விறுதி நிகழ்ச்சியில் சேர்.பொன். இராமநாதன், சேர்.பொன். அருணாசலம், பிரபலம் வாய்ந்த செட்டிமார்கள் சுவாமியின் அருள் பெற்ற அடியார் கூட்டம் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இந்த சுவாமியின் நினைவாக, சேர்.பொன். அருணாசலம், அவரது துணைவியார் திருமதி. சுவர்ணாம்பிகை இருவரதும் பெரு முயற்சியால் தோற்றுவிக்கப்பட்டதுதான் இந்த ஆலயம். இந்தியாவிலுள்ள பிரயாகையிலிருந்து மகரிஷி ஒருவர் பூஜித்து வந்த அழகே உருவான பாணலிங்கத்தையும் நந்தியெம் பெருமானையுமே இங்கு எடுத்து வந்து எழுந்தருளப்பண்ணிக் கும்பாபிஷேகம் செய்தார்கள்.

குனித்த புருவம், கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பு, பனித்த சடை, பவளம் போல் மேனியில் பால்வெண்ணீறு, இனித்தமுடைய எடுத்த பொற்பாதம், இதுவே எம் பெருமான் ஆனந்த நடராஜனது அழகுத் திருவடிவம். திருச்செந்தூரின் கடலோரத்தில் செந்திலாண்டவன் குடி கொண்டிருப்பது போல இந்த மோதரைக் கடலாகிய முகத்துவாரத்தின் கடலோரத்தில் கடலின் அலைகள் எழுப்பும் நாதத்தின் ஓசையை ரசித்தபடி தன் மனையாள் ஸ்ரீ சிவகாமி அம்பாள் உடன் வீற்றிருக்க ஆனந்த நடனமாடிக் கொண்டிருக்கிறான் அருணாசலேஸ்வரராகிய ஆனந்த நடராஜன். ராஜ கோபுரத்திலும் இதே நிலையில் காட்சி தந்து தன்னை நாடி வரும் அடியவர்களை அரவணைத்து ஆறுதலளித்துக் கொண்டிருக்கிறான் தில்லையிலே நடம் புரியும் அம்பலக் கூத்தன். அருகில் தன் மூத்த புதல்வனுக்கும் தனியான ஆலயத்தை அமைத்துக் கொடுத்து மேலும் தன் பக்கம் அடியார்களை ஈர்த்துக் கொண்டிருக்கிறான். மூல மூர்த்தியாக ஸ்ரீமத் அருணாசலேஸ்வரர் அழகிய லிங்க வடிவில் காட்சியளிக்க மகா மண்டபத்தின் வலது புறத்தில் வல்லப கணபதியும், இடது புறமாக பாலமுருகன், சுவர்ணாம்பிகையும் எழுந்தருளியுள்ளனர். ஸ்ரீதேவி, பூதேவி, சமேத ஸ்ரீமத் பத்ம நாத சுவாமி, ஸ்ரீ சாகம்பரி தேவி, மற்றும் நவக்கிரகங்கள், நர்த்தன விநாயகர்,

தெட்சணாமூர்த்தி, லிங்கோற்பவர், பிரம்மா, துர்க்கையம்பாள், வைரவர், சண்டேசுவரர், அனைவரும் இவருக்கு அழகமைத்துக் கொண்டு சூழ வீற்றிருக்கிறார்கள். அரசமர நிழலில் ஆனந்தமாக அமர்ந்திருக்கிறார் மூத்த புதல்வன் கணபதி. அவருக்கு அழகூட்டியபடி மேற்கு வாசலில் 36 அடி உயரமான கோபுரம் அமைந்திருப்பதைக் காணலாம்.

முதலாவது கும்பாபிஷேகத்தை ஜனவரி 26, 1913ல் நல்லூர் தியாகராஜா குருக்கள் அவர்கள் நிறைவேற்றி வைத்தார்கள். இந்துமா சமுத்திரத்தை நோக்கிய வண்ணம் ஆடிக் கொண்டிருக்கும் ஆனந்த நடராஜனையும் சிவகாமசுந்தரியையும் அதன் பின் வடிவமைத்து இரண்டாவது கும்பாபிஷேகம் 1926ல் நிறைவேற்றப்பட்டது. அவர்களுக்குப் பின் அவர்தம் மகன் அருணாசலம் மஹாதேவா, அவர்களால் செப்டெம்பர் 4, 1968ல் 3வது கும்பாபிஷேகம் நிகழ்த்தி வைக்கப்பட்டது. இறுதியாக 1992, யூன் 11ந் திகதி நான்காவது கும்பாபிஷேகம் நடைபெற்று பூசைகள், அபிஷேகங்கள், திருவிழாக்கள் என்பன முறைப்படி சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 15.09.1997ல் ஆனந்த நடராஜர் சந்நிதான நுழைவாயிற் கோபுரமும் கும்பாபிஷேகம் செய்யப்பட்டு அலை கடலின் அருகாமையில் அழகாக கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது. அவ்வாலயத்தைப் பிரதம குருவாக இருந்து ஸ்ரீ நிவாச சர்மா அவர்கள், 1946ம் ஆண்டு ஏப்பிரல் மாதம், ஜப்பான் குண்டுபோட்ட காலப்பகுதியிலிருந்து நிர்வாகம், பூஜைகள் யாவும் சிறப்பாக நடாத்திவரும் வேளை 1975ம் ஆண்டு ஆவணி மாதம் மூல நக்ஷத்திரத்தில் சிவபதமடைந்தார். அதற்குப் பின்பு ஸ்ரீநிவாச சர்மாவின் மருமகன் கு.கார்த்திகேசக் குருக்களும் அவருடைய மனைவி, சிவகாமசுந்தரியும் நிர்வாகம், பூஜைகள், விழாக்கள் ஆகியவற்றை முறைப்படியும் திறம்படவும் நடத்தி வருகின்றனர்.

இங்கு நடைபெறும் பூஜை விபரங்கள்; வருடப்பிறப்பன்று அலங்காரத் திருவிழாவும் சித்திரா பூரணைக்கு சாகம்பரி தேவிக்கு மஹா ஹோமம் நடைபெற்று அபிஷேக ஆராதனை நடைபெறும். வைகாசி விசாகத்தில் சண்முகப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனையும் ஆனி உத்தரத்தில் பூஜை வழிபாடுகளும் இடம்பெறுகின்றன. ஆடிப்பூரம், ஆடிப்பெருக்கு, போன்றவையும் விஷேட வழிபாடாக நடாத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆவணி மூலம் முதல் 10 நாட்களும் சண்டி ஹோமம் நடைபெற்று வசந்த நவராத்திரி நடைபெறும். கிருஷ்ண ஜெயந்திக்கும் பத்து நாட்கள் உற்சவமும் நவராத்திரி பூசைகளும் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. புரட்டாதி சனிக்கிழமைகளில் சனி பகவானுக்கு விஷேட வழிபாடுகளும் நடைபெறுவதைக் காணலாம். ஐப்பசியில் கந்தஷஷ்டி 6ம் நாள் சூரசம்ஹாரம் நடைபெற்று 7ம் நாள் பட்டாபிஷேகமும் 8ம் நாள் திருக்கல்யாணமும், 9ம் நாள் திருஊஞ்சல் விழாவும் 10ம் நாள் பூங்காவனத் திருவிழாவும் நடைபெற்று சண்முக அர்ச்சனையுடன் கந்த ஷஷ்டி விழா நிறைவு பெறும்.

கார்த்திகை தீபம், சர்வாலய தீபம், விஷ்ணு ஆலய தீபம், குமாராலய தீபம், பூசைகள் இடம் பெறுகின்றன. பிள்ளையார் பெருங்கதையும் நடைபெறுகின்றது. மார்கழியில் ஆனந்த நடராஜனுக்கு திருவெம்பாப் பூசைகள் வெகு சிறப்பாக நடைபெறுகின்றன. தைப்பூசத்துக்குப் பொங்கல் விழாவுடன் சண்முகப் பெருமானுக்கு மஹர சங்கிராந்தி அபிஷேக ஆராதனைகள், சிவராத்திரிக்கு 10 நாட்களும் வில்வத்தால் அர்ச்சனை பண்ணி பஞ்சமுக அர்ச்சனை நடைபெற்று மறுநாள் சிவராத்திரி நான்கு ஜாமப் பூசைகளும் நடைபெற்று மறுநாட் காலை சங்கம தீர்த்தத்தில் எம்பெருமான் தீர்த்தமாடுதலும் இடம்பெறும். மாசி மகத்துக்கு சாகம்பரி தேவிக்கு விஷேட அபிஷேக ஆராதனைகளும் இடம் பெறும். பங்குனி உத்தரத்தில விஷேட பூசைகளும் இடம்பெறுகின்றன. இத்துடன் பிரதோஷ வழிபாடு மாதம் இருமுறையும், திருவிளக்குப் பூசைகளும் நடேசராபிஷேகங்களும் இங்கு வழக்கமாக நடைபெறும் சிறப்பு நிகழ்ச்சிகள். இங்கு நடைபெறும் ஆடி அமாவாசை பூசைகளுக்குத் தனிப் பெருமை உண்டு. கீரி மலைபோல் இந்த முகத்துவாரக் கடலுக்கு ஒரு சிறப்புண்டு. ஆடி அமாவாசை தினத்தன்று விரதமிருப்போர் இங்கு வருகை தந்து சங்கம தீர்த்தத்தில் நீராடித் தம் பிதுர்க்கடன்களை முடித்து அருணாசலரைத் தரிசித்துச் செல்வார்கள். இறந்தவர்களின் பிதிர்க்கடன்களும் இங்கு நிறைவேற்றப்படுகின்றன. இந்தச் சூழலில் இன்னுமொரு சிறப்பு என்னவென்றால் அருணாசலேஸ்வரர் ஆலயத்துக்கு வலது புறமாக சற்றுச் சமீபமாக 'வெங்கடேஸ்வர விஷ்ணு' ஆலயம் அண்மைக் காலத்தில் வெகு சிறப்பாக வடிவமைக்கப்பட்டு, கும்பாபிஷேகமும் நடைபெற்று பூசைகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இத்தகைய பெருமைகளையெல்லாம் தன்னகத்தே கொண்டு திகழ்பவர்தான் சுவர்ணாம்பிகா சமேத ஸ்ரீமத் அருணாசலேஸ்வரர். இந்த வகையில் பக்தி பூர்வமான சூழலில் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஒருங்கே அமையப் பெற்ற இவ்வாலயம் சைவ சமயத்தவருக்கு ஒரு சிறப்பான சிவாலயமாக அமைந்துள்ளது என்றால் மிகையாகாது.

**திருமதி. இந்திரா திருநீலகண்டன்**

# விருந்து

கனகுவுக்கு வயிறு புகைத்தது. காலையில் குடித்த வெறுந் தேத்தண்ணி தேயிலையின் கசப்பு நுனி நாக்கில் ஊறறெடுத்தது. காறி உமிழ்ந்தவன்; மடியிலிருந்த சீவலை எடுத்து, வாயில் போட்டுக் கொண்டான். வெற்றிலை சருகாயிருந்தது. அதையும் சுண்ணாம்பு தடவாமலே போட்டுக் கொண்டான். பீடி பற்ற வைக்க வேண்டும் போலிருந்தது. கையிலை காசில்லாமல் பீடியும் வெத்திலையும் தான்... அலுத்துக்கொண்டவன், வீதியில் இறங்கி நடந்தான்.

பவானி ரீச்சரின் ஞாபகம் வந்தது. சின்னச் சின்ன வேலை – பூச்செடிகளுக்கு நீர்வார்ப்பது, மண் அணைப்பது, பசளை இடுவது, சடைத்து வளர்ந்துவிட்ட வாழை நிரைகளைச் சீர் செய்வது என்று – ஏதாவது அவவிடம் எப்பொழுதும் இருக்கும். கூலி விசயத்திலும் அவ தாராளம்.

கேற்றைத் திறந்தவன், 'ரீச்சர்' – என்று குரல் கொடுத்தான். ஆள் சிலமனில்லை. அவ வளர்க்கும் பெட்டை நாய்தான் குரைத்துக் கொண்டு பாய்ந்து வந்தது. பக்கத்து வீடு பார்த்துத் திரும்பியவனுக்கு 'ரீச்சரில்லை கோயிலுக்கு' என்று பதில் வந்தது.

மாஸ்ரரும் ரியூசனுக்குப் போயிருப்பார்... என்று நினைத்தவன், மீளவும் வீதியில் இறங்கி நடந்தான்.

எத்தனை நாட்களாகி விட்டன. ஆற அமர இருந்து வயிறாரச் சாப்பிட்டு. அவள் பெட்டை தனம் பாவம். கருவுயிர்த்து ஆறு மாசம். தலைச்சன் பிள்ளை. அது சவலையாகி விடக்கூடாதே என்ற கவலை அவளுக்கு. அவளுக்கு மட்டுமா... எனக்கு...? மனதில் திரண்டு குமையும் நினைவுகள்.

''கனகு, ஒரு நிமிஷம் மோனை!''

பரமசிவத்தாரின் குரல் அவனது சிந்தனையைக் கலைத்தது.

''உந்த வேம்பிலை ஏறி இரண்டலக்கு வேப்பம் பூ தட்டி விடணை.. அவள் கடைக்குட்டி வடகம் வேணுமெண்டு ஆசைப்படுறாள்.

அவர் நயிச்சியமாய்ப் பேசுவதில் இருந்து அவரிடம் தம்பிடி கூடப்பெயராது என்பது தெரிந்தும், ''கேட்ட வாய்க்குத் தட்டேலுமே''. என நினைத்தவனாய் வேம்பில் ஏறி, அவர் சுட்டிக் காட்டிய கொம்புகளைத் தட்டிவிட்டு கீழே இறங்கி, அவர் நிற்பதையே பொருட்படுத்தாமல் வெளியே நடந்தான்.

இரவு, தீட்டுப் பச்சைக் குறுநலில் தனம் உப்புக் கஞ்சி காச்சினாள்.

''அவள் பாவம் குடிக்கட்டும்'' என இவன் இருந்தபொழுது, அவள் கஞ்சியை வார்த்து இவன் முன்னால் வைத்தாள்.

''குடியுங்க.. எத்தனை நாள் கால் வயிறும் அரை வயிறுமாய்க் கிடக்கேலும்''.

அவளது குரலில் இழைந்த துயரம் இவனைக் கலங்க வைத்தது.

பதில் ஏதும் தராமல் மௌனமாய் எழுந்தவன், பானையை எடுத்துப் பார்த்தான். சிறிதளவு கஞ்சிதான் அதில் மீதமிருந்தது. மீளவும் வந்து அவள் அருகாக உட்கார்ந்து கொண்டவன், விநயம் ததும்ப, ''நீ முதலிலை குடியம்மா'' என்றான்.

அவள் இரண்டு வாய் குடித்து விட்டு, பானையில் இருந்ததையும் வார்த்துத் இவனுக்குத் தந்தாள். குடித்ததாய்ப் பாவனை பண்ணியவன், திரும்பவும் மிகுந்த நெகிழ்ச்சியுடன் அவளை உபசரித்து , அவனாகவே இரண்டுவாய் அவளுக்கு ஊட்டவும் செய்தான். அவள் சற்று உணர்ச்சி வசப்பட்டவளாய் அன்பு ததும்ப விழிகளை அலர்த்தி அவனையே பார்த்தாள். அந்தக் கண்களின் ஒளி அவனைத் தொட்டது.

''என்னம்மா.. என்ன வேணும்..?'' குழைந்தவன், அவளது தழையும் கூந்தலை வருடியபடி, அவளை ஆரத்தழுவி அவளது நெற்றியில் முத்தமிட்டான்.

அவனது உள்ளில் ஏதோ உருகிக் கரைவதான உணர்வு. ''இவள் இந்தப் பெட்டையில்லை என்றால்.. நொந்து சீரழிஞ்சு போன இந்த வாழ்க்கையில... என்ன மிஞ்சும்... உயிர்ப்பும் ஈரமுமாய் இருப்பவள் இவளல்லவா..!''

தனலட்சுமியை அவன் கண்டு உறவு கொண்டதே ஒரு தனிக்கதை.

''சித்தங்கேணிப் பிள்ளையார் கோயிலுக்குக் கிழக்காலை சடைத்துக் கிடக்கும் பனங்கூடலை ஊடறுத்துச் செல்லும் ஒற்றையடிப்பாதையிலை நடந்தால் என்ரை குடிசை வரும்''. தவராசா அப்படித்தான் குறிப்புச் சொன்னான்.

''கையிலை மடியிலை ஏதென் முடக்கமெண்டா வீட்டுப்பக்கம் வாவன்.. தில்லையற்றை புண்ணியத்திலை நானிப்ப நல்லா இருக்கிறன்''.

அவன்ரை சொல்லை நம்பி வெளிக்கிட்டாச்சு. வீட்டிலை அவன் இருக்க வேணுமே..! இல்லையெண்டா வெளியிலை தலை காட்டேலாத கிரிசை கேடாய்த்தான் போயிடும்...''.

நான்கு நாட்களுக்கு முன்னர் தம்பிராசா வாத்தியார், ''அரைத்தூக்கு விறகு கொண்டு வந்து போடு மோனை''. என்று நூற்றி எண்பது ரூபாய் இவனிடம் தந்தார். அதை, ஏதோ அவசரத்துக்கு மாறியதால் அவரது முகத்தில் முழிக்க முடியாமலே போய்விட்டது இவனுக்கு.

''அந்த விறகை எடுத்துப் போட்டு விட்டுத்தான் மறுவேலை பார்க்க வேணும்'' மனசு கள்ளப்பட்டதான தவிப்பு அவனுக்கு.

''இவ்வளவு தொகைக்குத் தவராசாவை நம்பிப் போறது சரியா..?'' அவனுக்குக் குழப்பமாக இருந்தது.

''மானங்கெட்ட பிழைப்பு..'' என்று மாஸ்ரர் சொல்லி விடக் கூடாதே என்ற பயமும் கவலையும் வேறு அவனை அலை கழித்தது.

''சுன்னாகச் சந்தியிலை தவராசாவை ஏதச்சையாகச் சந்தித்தது கூட இந்தச் சிக்கலிலை இருந்து விடுபடத்தானா''.

இருட்டில் இருந்தவனுக்கு வெளிச்சம் காட்டின மாதிர. ஒரு சந்திப்பு அதென இவன் நினைத்துக் கொண்டான்.

தவராசா சொன்னது போல, பனங் கூடலின் உள்ளாக அந்த ஒற்றையடிப்பாதை முடிவடையும் இடத்தில் – அவனது குடிசை இருந்தது.

குடிசை சற்று விசாலமானது. பனை ஓலையால் வேய்ந்தது. புதிதாக, புனிதமாக பர்ணசாலை மாதிரி இருந்தது.

இவன் தயக்கத்துடன் குரல் கொடுத்தான். கூச்சம் குரலில் இழைந்தது.

அதிக உயரமில்லாத, ஒடிந்து விழக்கூடிய இதத்துடன் ஒரு இளைய பெண் – ஒளிரும் தாமிர நிறத்தில் சிறிய மெல்லிய மூக்கும், குழந்தைத்தனம் கசியும் கன்னங்களும், பெரிய கனவு காணும் கண்களுமாக – இவனது குரலுக்குப் பதில் தந்தபடி வந்தாள்.

''ஆரது.. ஆரைப் பார்க்க வேணும்..?'' தடைகளேதுமற்ற சரளம். ஒருகணம் மௌனியாக அவளையே பார்த்தபடி அவன் நின்றான்.

''நீங்கள் கனகுதானே.. அண்ணன்ரை'' பேசும்போது அவளது கண்களில் சுடர்த்த ஒளியும் இதமும் கபடமற்றத் தன்மையும் அந்தப் பனிபடர்ந்த இளங்காலைப் பொழுதில் அவனைப் பரவசம் கொள்ள வைத்தன.

''நீங்கள்..? என்று தடுமாறியவனைப் பார்த்து, 'தனலட்சுமி' என்று பதில் தந்தாள்.

மீளவும் குழம்பியவனைப் புரிந்து கொண்டவளாய் தனது வலது கரத்தால் நெற்றியையும் இடது கரத்தால் மோவாயையும் மறைத்த படி நின்றாள்.

அவன், அவளை அடையாளம் கண்டு, ஆச்சரியம் தாளாமல், ''எட எங்கடை தவராசன்ரை தங்கச்சி'' என்றான்.

''க்கூம்..'' என்று மிழற்றியவள் தொடர்ந்து கலீர் எனச் சிரிக்கவும் செய்தாள்.

அவளது குறும்புத்தனத்தில் திழைத்து நின்றவனை உபசரித்து, குடிசையின் முன்பாக முக்காலி ஒன்றை எடுத்துப்போட்டு உட்கார வைத்தாள்.

''அண்ணை வந்திடும் .. இருங்க'' என்றவள், புயலின் வேகத்துடன் வெட்டித்திரும்பி, குடிசையினுள் புகுந்து கொண்டாள்.

திடீரென இருட்டில் விட்டது போலிருந்தது அவனுக்கு. அவனைச் சூழ இருந்த ஒளியும், தூய்மையும், இளமையின் மொட மொடப்பும் அவள் கூடவே போய்விட்டதான உணர்வு அவனுள் விரவியது. முன்பின் உணராத அனுபவமாய் அது அவனுக்குத் தோன்றியது.

ஒருசில நிமிடங்கள் கழித்து வெளியே வசந்தவளது கையில் அலுமினியத்தட்டு. அதில் சுடச்சுடப் பால் அப்பம். மறுகையில் அவள் கை அலம்புவதற்கான நீர்.

''என்ன இது.. !'' என விழித்தவனை,

''அட... சும்மா சாப்பிடுங்க'' என்றவள் சட்டென ஒரு பார்வை பார்த்தாள். அதில் இழைந்த லேசான கண்டிப்பு அவனை ஆச்சர்யத்தில் ஆழ்த்தியது.

பெற்றவர்களை மிக இளமையிலேயே பறிகொடுத்து சித்தப்பாவின் தயவில் ஆளான அவனுக்கு இது மிகவும் பிடித்தமாக இருந்தது. இப்படி இந்த அளவுக்குத் தானும், அவளை அக்கறையுடன் கடிந்து கொண்ட பிறிதொரு சந்தர்ப்பத்தை அவனால் ஞாபகம் கொள்ள முடியவில்லை.

''மனசை அப்படியே ஒளிப்பேதும் இல்லாமல் கொட்டிக் காட்டும் இவள். அச்சொட்டாகத் தவராசா மாதிரித்தான்'' என நினைத்துக் கொண்டான்.

**திரு. சட்டநாதன்** அவர்களின்
புதியவர்கள் சிறுகதை தொகுப்பிலிருந்து

அவன் அப்பம் சாப்பிட்டுக் கொண்டிருந்த பொழுது தவராசா வந்தான்.

''என்ன.. பாலப்பமா..?'' தனத்தின் கை பட்டாலே தனி ருசி. என்று சிலாகித்தவன். சிரித்தபடி கனகு வந்த விஷயத்தை விசாரித்தான்.

கனகு தனத்தைப் பார்த்தான்.

''என்னடா.. அவளென்ரை தங்கச்சி. உன்ரை என்ரை எண்டு ஒளிப்பு மறைப்பு ஏதுமில்லை. எங்களிட்டைச் சொல்லு''.

கனகு வந்த விபரம் கூறினான்.

''இதுதானே. சரி பார்க்கலாம். மத்தியானத்திலிருந்து சாப்பிட்டிட்டுப்போ''

இவனால் அதைத் தட்ட முடியவில்லை. அன்று அந்த வீட்டில் மதியம்வரை இருந்து தங்கையினதும் அண்ணனினதும் உபசரணையில் திழைத்தான்.

கிழக்குக்கால் உசரியில் இறக்கிய கள்ளும் கோழிக்கறியும் புழுங்கலரிசிச் சோறும் சாப்பிட்ட பின்னர் ஒரு சிறு தூக்கம் வேறு போட்டுவிட்டு, இவன் புறப்பட்டபோது இவனது கைக்குள் ஒரு ஐந்நூறு ரூபாய் நோட்டைப் பொத்தியபடி வைத்தான் தவராசா.

''என்னடா இது.. எனக்கு இருநூறு போதும்''.

''சரி, சரி உனக்கு ஆகும்போது தா''..

தவராசாவிடம் விடை பெற்ற பொழுது – கனகு தனத்தைப பார்த்தான். அவளது விழிகள் படபடப்புடன் ஏதோ சொல்லிய மாதிரி இருந்தது. எல்லாம் ஒரு கணம்தான். அடுத்தகணம் அவள் விழிகளைத் தாழ்த்தி நிலத்தைப் பார்த்தபடிக்கு உதடுகளை இறுகக் கடித்தவாறு நின்றாள். அவளை இன்னொரு முறை உற்றுப் பார்த்துவிட்டு இவன் திரும்பி நடந்தான்.

தவராசா அவனைப் பனங்கூடல் எல்லை வரை வந்து விடை தந்தான்.

அதன் பின்னர் வாரத்தில் இரண்டு தரமாவது சித்தங்கேணிப்பக்கம் கனகு போய் வரத் தவறவில்லை. அவனால் தனத்தைப் பார்க்காமல் இருப்பதென்பது இயலாமலே போய்விட்டது. ஒரு சமயம் இவன் போன பொழுது தவராசா இருக்கவில்லை. தனம் தனியாக இருந்தாள். அவள் முன்பாக வந்ததும் ஒருவகைக் கூச்சமும் இன்னமும் என்று சொல்ல முடியாத படபடப்பும் இவனுள் திகைந்தது. இவன் உள் ஒடுங்கி, ஒதுக்கம் கொண்டது, தனத்துக்குச் சிரிப்பூட்டியது.

குலுங்கி, கலீர் எனச் சிரித்தவள் – அவனது கரங்களைப் பற்றியபடி ''வாருங்கள் நான் ஒண்டும் உங்களை விழுங்கி விட மாட்டன்'' என்றாள்.

அவளது கண்களில் அப்பொழுது ஒளிர்ந்த குளுமை, நிதானம், உதடுகளில் அவிழ்ந்த இனிய இளநகை. எல்லாமே அவனைப் பைத்தியமாக்கின. ''ஒருமுறை.. ஒரே முறை அவளை முத்தமிடலாமா.. என நினைத்தான். பின்னர் தன்னை நிதானப்படுத்திக் கொண்டான்.

நல்ல பிள்ளை என்ற பிம்பம் காப்பாற்றப்பட்டதில் அவனுக்கு உள்ளூர மகிழ்ச்சியாக இருந்தது. அன்று பல மணிநேரம் இருவரும் ஒன்றாகவே இருந்தார்கள். சின்னச் சின்ன பேச்சுக்கள், சீண்டல்கள், சிணுங்கல்கள், ஆனாலும் அவர்களிடையே குமிழிட்ட காதலை வெளியிட இருவருமே தயக்கம் கொண்டதாகவே தோன்றியது. துணிந்த பெட்டை என இவன் நினைத்த தனமும் இது விஷயத்தில் மௌனம் சாதித்தது அவனுக்கு ஆச்சரியமாயிருந்தது. பிரிய மனமில்லாமலே பேசிக் கொண்டிருந்தவர்கள், நீண்ட நேரம் ஆகிவிட்டதை உணர்ந்து எழுந்து கொண்டார்கள்.

''மீண்டும் இந்தப் பக்கம் எப்ப..?''

அவளது கண்கள் கேட்பது போல அவனுக்குத் தோன்றியது.

விழிகளுக்கு விடை தேடி அவன் தடுமாறியபொழுது அவள் திடீரென அவனை நெருங்கி வந்து அவனது கழுத்தில் தனது கரங்களை வளையமாகத் தவழவிட்டு, அவனது முகத்தைத் தனது முகத்துக்கு நேராக இழுத்து வைத்துக் கொண்டு அவனது உதடுகளில் மென்மையாக, மிக மென்மையாக முத்தமிட்டாள்.

''தனது காதலை இவ்வளவு சுலபமாக தயக்கமேதுமில்லாத துணிவுடன் தன்னால் அவளைப் போல உணர்த்தியிருக்க முடியுமா'' நினைத்த பொழுது அவனுக்கு வெட்கமாக இருந்தது. அவளை நிமிர்ந்து பார்ப்பதற்கே கூச்சப்பட்டவனாய் மெல்லிய தலையசைப்பில் விடைபெற்றுக் கொண்டான்.

கனகுவுக்கும் தனத்துக்கும் இடையே முகிழ்த்த அந்த ஆழ்ந்த காதலைத் தவராசா உணர்ந்து கொள்ளவே செய்தான். அது பற்றிய அவனது அபிப்பிராயத்தை அவர்கள் அறிந்து கொள்வதற்கு முன்னதாக – காய்ச்சல் எனப்படுத்தவன் பிறகு எழுந்திருக்கவே இல்லை. அறிவிழந்த நிலையிலேயே அவனது ஆவி பிரிந்து விட்டது. ஏதோ புது விதமான மூளைக்காய்ச்சல் என மருத்துவர்கள் அபிப்பிராயப்பட்டார்கள்.

அவனது பிரிவால் தனமும் இவனும் இடிந்து போனார்கள். தனிமைப்பட்ட உணர்வால் தவிப்புக் கொண்டனர். உரிமையுடன் இவன்தான் கொள்ளிக்குடம் காவி அவனது சிதைக்குக் கொள்ளி போட்டான்.

அநாதரவாகிவிட்ட தனத்தை ஊரோடு அழைத்து வருதைத் தவிர கனகுவுக்கு வேறு வழி எதுவும் தெரியவில்லை. கொண்டலடிப்பக்கம் வந்தவன், வைரவர் மேல் சகல பாரத்தையும் போட்டுவிட்டு, 'கையிலை மடியிலை' இருந்ததையெல்லாம் போட்டு அரைப் பவுணில் தாலி செய்து, அவளது கழுத்தில் கட்டினான். பவுணில் மெல்லியதாகக் கொடி செய்ய விரும்பிய பொழுதும் அவனால் முடியவில்லை. மஞ்சள் கயிறே மங்களமானது இப்போதைக்கு இது போதும். எனத் தனம் கூறியதும் இவனுக்கு ஆறுதல் தருவதாயிருந்தது.

தவராசா இல்லை என்றான பின்னர், சித்தங்கேணிப்பக்கம் சொத்து சுகம் என்று இவன் அலையவில்லை. தில்லையரும் கனடாச் சுவாத்தியம் ஒத்து வராமல் வந்துவிட்டதாக தகவல். அதை அறிந்த இவன், ஊரோடு இருந்து பிழைப்பதே உத்தமம் என நினைத்துக் கொண்டான்.

தனம் ஆதுரமாக இனிமை தருபவளாக ஒளிரும் உண்மையாக இருந்ததே அவனுக்குப் போதும் போதுமென்ற நிறைவைத் தந்தது. அவர்கள் எதிர்கொண்ட சிரமங்கள் விட்டு விலகியதுடன், ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளவும், மேலும் நெருக்கம் கொள்ளவும் இந்த உறவு அவர்களுக்குப் பெரிதும் உதவியது.

''ஆரது கனகுவா.. இஞ்சை வாரும்.. இந்த நொங்குக் காச்சியிலும்.. மாலைத்தீவிலும் ஏதாவது 'முத்தல் கித்தல்' கிடக்கா பாரும்''.

மதியம் ஒரு மணிவரை அலைந்து திரிந்த அவனுக்கு கூலி என ஏதோ குதிர்வது போல இருந்தது.

மணியத்தாரின் மனைவி கனகம் கூப்பிட்டாள். கரும்பூதம் மாதிரி நின்றவளுடைய கண்களில் மட்டும் ஒரு இனிமையான ஒளி, லேசான கருணையும் இதமும் அதில் இணைந்திருப்பதாக அவனுக்குத் தோன்றியது.

தென்னை மரத்திலேறி முற்றலாகப் பார்த்து காய்களைப் பறித்துப் போட்டான். பதினைந்து காய்கள் தேறின. இரண்டு காய்களை, தனது கூலியாக எடுத்தவனை, ''இல்லை கனகு, ஒரு காயை கொண்டுபோ'' என்று தடுத்த மணியத்தார் அவனது கையில் ஐந்து ரூபாய்க் குற்றி ஒன்றையும் வைக்க தவறவில்லை.

அவனால் அதைத் தட்ட முடியவில்லை.

'ஏன் இந்தத் தயக்கம், தடுமாற்றம், நியாயத்துக்குக்கூட தலை நிமிராமல், முரண்டு பண்ணாமல் அடங்கிப் போகிற ஒடுக்கம். இந்தத் தேங்காயும், ஐந்து ரூபாயும் எந்த மூலைக்கு. உக்கிரமாய்க் கனலும் உதரக் கொதியை இது அடக்குமா?'

தன்னில் தானே கழிவிரக்கம் கொண்டவனாய் – மனமும் உடலும் சோர நடந்தவன், தன்னை மறந்த நிலையில் வீட்டுப் பக்கம் வந்து விட்டதை உணர்ந்தான்.

'தனம் என்ன செய்கிறாள். சமைப்பதற்கு ஒரு மணி அரிசிதானும் வீட்டில் இல்லையே..!' அவனுக்கு ஆச்சரியமாயிருந்தது.

'தனம்' என்று குரல் கொடுத்தான்.

தனம் அகமும் முகமும் மலர வெளியே வந்து 'என்ன' என்றாள்.

பேசும்போது கண்களைச் சுரித்து ஒரு பார்வை பார்த்தாள். இதழ் உடையாமல் சிரித்தாள். அதில் இழைந்த கனிவு இவனது களைப்பை எல்லாம் தூர விலக்கியது.

''என்ன சமையலம்மா.?''

''விருந்து''

''விருந்தோ..?''

''ஓம், ஓம்.. மொட்டைக்கறுப்பன் புழுங்கலிலை சோறு. வெந்தயக் குழம்பு. கறி முருங்கையிலை வறுவல்''.

''அடி சக்கை, அலடின்ரை அதிசய லாம்பு ஏதாவது கிடைச்சுதா...?''

''ம்.. அது மாதிரித்தான்.. வாருங்களன் சொல்லிறன்''

இவன் கைகால் அலம்பி விட்டு அடுப்படியுள் நுழைந்தான்

''கமலாக்கா, பவானி ரீச்சர் வீட்டை மா இடிக்கப் போனாவா. நீயும் வாவன் எண்டு கேட்டா.



நான் தட்டேல்லை. கூடப் போனன். வேலை கொஞ்சம் கடுமைதான். பத்துக் கொத்தரிசி இடிச்சு வறுக்க வேணும். இருபது ரூபாய் கூலி. நான் காசு வேண்டாம். அரிசி இருந்தாத் தாருங்க ரீச்சர் எண்டன். அவ நல்ல மாதிரி. முகம் கோணாமல் இரண்டரைப் பேணி அரிசி தந்தா. வெறுவயித்தில போன எனக்குப் பாண்கூட வாங்கித் தந்தா.. எனக்குத்தான் தொண்டைக் குழியாலை இறங்கேல்லை. எல்லாம் உங்கடை நினைப்புத்தானப்பா.. அவளது கண்களில் கண்ணீர்.

''விசரி என்ன இது...'' என்று பதைத்தவன், எழுந்து சென்று அவளது கண்களை ஆதரவாகத் துடைத்துவிட்டான்.

அவள் மிருதுவாக அவனை நிமிர்ந்து பார்த்தாள். அதில் காதல் ததும்பி வழிந்தது.

''உலையிலை அரிசி வேகுது. வெந்தயக் குழம்பும் கூட்டியாச்சு. அடுப்பிலை வைச்சு இறக்கினதும் சாப்பிடலாம். கொஞ்சம் பொறுங்க''. என்றவள், முருங்கை இலையை இவனது பக்கமாக எடுத்துப் போட்டாள்.

''அசல் இலை. கொஞ்சம் நல்லெண்ணெய் விட்டுப் பொன் வறுவலா வறுக்க வேணும்''.

அவனது பேச்சுக்கு தலையசைப்பில் இவள் சரி சொன்னாள்.

அப்பொழுது படலை அடியில் ஏதோ அரவம் கேட்டது.

''தனம்... பிள்ளை தனம்'' கனகு வெளியே வந்து பார்த்தான்.

''தங்கச்சி அம்மா''

''அட.. அவவே... ! எத்தனை நாளைக்குப் பிறகு வருகுது மனிசி. வரச் சொல்லுங்க''

தனம் வெளியே வந்து வரவேற்றாள்.

சிறிய உருவம். வெய்யிலில் உலர்ந்து வற்றலாகிவிட்ட உடல். நீர்க்காவி ஏறிப் பழுப்பு நிறங்காட்டும் துவைத்து உலர்த்திய சேலை கட்டியிருந்தாள். முகம் சிறிது வீங்கி, இரத்த சோகையின் அறிகுறிகள் காட்டின. நெற்றி நிறைந்த விபூதி. அள்ளி முடித்த நீர் சொட்டும் கூந்தலில் வெள்ளலரிப் புஷ்பம்.

தனத்தைக் கண்ட மாத்திரத்தில், தங்கச்சி அம்மாவின் கண்கள் மலர்ந்து சிரித்தன. கிழவி இரண்டு எட்டு வேகமாக எடுத்து வைத்து வந்தாள். இவளது கரங்களை வாஞ்சையுடன் பற்றியபடிக்கு.

''அப்பன்.. அந்தப் பாலன்.. முருகன்ரை விபூதிப் பிரசாதம் பிள்ளை பூசணை.. தம்பிக்கும் கொடும்.. நல்லூரானிட்டைப் போயிற்று உங்களையும் பாத்திட்டுப் போவம் எண்டு வந்தன்''.

இவள் பிரசாதத்தை வாங்கிப் பூசிக்கொண்டாள். கனகுவுக்கும் பூசிவிட்டாள்.

''அப்பு, உன்ரை கைராசியாக்கும்.. நீ போன கிழமை தந்த ஐஞ்சு ரூபாயைத் தொட்டு மணியத்தாற்ரை மனிசி.. சிவம் பெண்டில்.. முதலாளியார் பெண்சாதி எண்டு எனக்கு நாப்பது ஐம்பது கிடைச்சுதப்பு.இப்ப முந்திப் போல ஓடி ஆடி வேலை செய்யமுடியுதே.. இல்லை ராசா.. எல்லாம் அந்த அப்பையனை நம்பித்தான் நடக்குது''.

அட இன்னொண்டு தம்பி.. உன்ரை பேரிலைதான் இம்முறை திருப்பணிச் சீட்டை எடுத்தனான்'' அவள் மடியிலிருந்து திருப்பணித் துண்டை எடுத்து இவனது பக்கமாக நீட்டினாள். அதில் மு.கனகசுந்தரம், திருப்பணி ரூபா ஐம்பது என்றிருந்தது.

ஆச்சி ஒரு தனிரகம். ஐந்து பத்தென்று யார் கொடுத்தாலும் தனது எளிமையான உணவு மற்றும் தேவைகள் போக – சில வேளைகளில் கோயில் பிரசாதமே அவளுக்குப் போதுமானதாய் விடும் – மீதிப் பணத்தை சேமித்து, தனக்கு உதவுபவர்கள் பெயரில் திருப்பணித் துண்டு எடுத்து விடுவாள். இம்முறை கனகுவின் பெயருக்கு எடுத்திருந்தாள்.

ஆச்சியின் அன்பு கனகுவையும் தனத்தையும் உருக வைத்தது. இருவரும் அவளை உணர்ச்சி பொங்கப் பார்த்தனர்.

"இப்படி உள்ள வாருங்க ஆச்சி" என்று பலகை ஒன்றை எடுத்துப் போட்டாள் தனம். தங்கச்சி அம்மா வந்து, போட்ட பலகையில் உட்கார்ந்து கொண்டாள்.

கனகு கிணற்றடிப்பக்கம் போனான். அவன் குளித்துவிட்டு வந்த பொழுது உணவு தயாராகி இருந்தது.

மூன்று இலைகளில் உணவை தனம் பரிமாறிய பொழுது கனகு அவள் காதைக் கடித்தான்.

"சோறு போதுமா..?''

''எல்லாம் போதும். பேசாமல் இருங்க''. அவள் பதிலுக்கு முணுமுணுத்தாள்.

அன்று மிகுந்த பசியுடன் இருந்த இருவரது உணவை மூவர் பகிர்ந்து கொண்டார்கள். அதுவும் எவ்வித மனத்தடைகளுமின்றி தனம், தனக்குச் சற்றுக் குறைத்துக் கொண்டதாகவே கனகுவிற்குத் தோன்றியது.

கனகுவின் மன உளைச்சலைப் புரிந்து கொண்டவளாய் அவள் ''எல்லாம் இரவு பார்த்துக் கொள்ளலாம்'' என்று மெதுவாகச் சொன்னாள்.

கனகுவிற்கு அது திருப்தியாக இருந்தது.

சாப்பிட்ட படியே கிழவி சளசளத்துக் கொண்டிருந்தது.

"தங்கச்சிக்கு இப்ப ஆறு மாசமே. வயிறு சிறப்பமாயிருக்கு. அந்த முருகன்.. அந்தப் பாலன்தான் தங்கச்சியின்ரை வயித்தில வந்து பிறக்கப் போறார். பிள்ளை ஒண்டு சொல்லிறன் கேளும். நான் அந்தப் பாலனிட்டை எதைக் கேட்டுக் கும்பிடுறது. எல்லாரும் கேட்டால் அந்தக் குழந்தையாலை என்ன செய்யமுடியும் சொல்லுமன். அண்டைக்கு மாம்பழத் திருவிழா. இந்த மாம்பழத்துக்குத்தானே எங்கடை பாலன் உலகத்தையே சுத்தினவர். அது அவருக்குக் கிடைக்காமல் போகிட்டுதெண்ட துக்கத்திலை எனக்குத் தொண்டையே அடைச்சுப் போட்டுது பிள்ளை. நான் அண்டைக்கு மாம்பழம் குடுத்து அவருக்கு அர்ச்சனை செய்த பிறகுதான், மனசே ஆறுதல் பட்டதணை..."

கதை கேட்டபடிக்கு தனம் வெத்திலைப் பெட்டியை எடுத்து கிழவிக்கு முன்பாக நகர்த்தினாள்.

"ஏது வெத்திலை..?" கனகு கேட்டான்.

"மாமா கடையிலை வாங்கினது".

கனகுவுக்கு வாய் ஊறலெடுத்தது. அவனும் வெற்றிலை போட்டுக் கொண்டான். நிதானமாக வெற்றிலை போட்ட கிழவி எழுந்து கொண்டாள்.

கனகுவும் தனமும் கூடவே எழுந்து, படலைவரை வந்து கிழவியை வழியனுப்பினார்கள்.

கிழவி போவதையே பார்த்தபடி நின்றவர்கள், திரும்பி ஒருவரை ஒருவர் பார்த்து மௌனமாக சிரித்துக் கொண்டார்கள்.

அந்தச் சிரிப்பில் கவலைகள் கரைந்த ஒரு இதம் இருந்தது. ●

## புறங்கூறாமை

ஒருவரைப் பற்றி அவரில்லாத போது, தவறாகப் பேசுவதைத் தவிர்ப்பதே புறம் கூறாமை எனப்படும். திருக்குறளில் இது பத்தொன்பதாவது அதிகாரமாகும். ஒருவர் அறத்திற்குப் புறம்பான செயல்களைச் செய்து விட்டால் கூடத் தாழ்வில்லை. அவன் புறம் பேசமாட்டான் என்ற நல்ல பெயரை எடுப்பதே சாலச் சிறந்ததாகும். முன்னால் சிரித்துப் பேசிவிட்டு, அவர் சென்ற பின்னர் அவரைப் பழித்துப் பேசுவது அறத்திற்கு எதிரான கொடுமைகள் அனைத்தையும் விட மிக்ககொடுமையானதாகும். நேரில் காணும் போது ஒன்றுமாய், காணாதபோது ஒன்றுமாய் புறம் பேசித் திரிந்து உயிர் வாழ்வதைவிட, உயிரை விட்டு விடுதலே மேலானது. ஒருவரை நேருக்கு நேர், பழித்தும் இழிவாகவும் பேசினால் கூடத் தாழ்வு இல்லை. அவன் இல்லாத போது புறம் பேசுதல் வேண்டவே வேண்டாம். புறம் பேசக்கூடிய இயல்பினைப் பெற்றவனுக்கு, அறநெறிகளைப் பற்றிப் பேசக்கூடிய தகுதி அறவே கிடையாது. தான் பிறரைப் பழித்துப் கூறுவதைப் போலவே, பிறரும் தன்னைப் பழித்துப் பேசுவர் என்பதை உணர்ந்து புறம் பேசாமல் இருக்க வேண்டும்.

இனிமையாகவும், இதமாகவும் பேசி, நண்பர்களை உருவாக்கும் உயர்வைத் தெரியாதவர்களே, பிரிவினை பேசி உறவைப் பகையாக்குவர். தமக்கு மிகமிக வேண்டியவர்களின் குற்றங்களையே ஊர் உலகுத் தெரிய தூற்றுகிறவர்கள், தமக்கு வேண்டாதவர்களை என்ன பாடுபடுத்துவார்களோ? அறியேன். சிவ அருளாளர்களைச் சுமக்கின்ற நிலையில், இந்த கீழ்மகனையும் சுமக்க வேண்டி உள்ளதே, என்ற ஆற்றாமையோடு, இந்த உலகம் புறம் பேசுகின்றவனையும் சேர்த்துச் சுமக்கின்றது. மற்றவர் மீது குற்றம், குறை கூறுவதற்கு முன்பு, தன்னுடைய குற்றம் குறைகளைச் சிந்தித்துப் பார்க்கும் சீரிய பண்பை ஒவ்வொருவரும் பெற்றுவிட்டால், இந்த மண்ணில் தீமைகள் ஏற்படுமா? ஏற்படாது.

எனவே புறங்கூறாமை நினைக்காத நெஞ்சம் பெற்று, வாழ்வில் உயர்ந்து, புகழ் பெறுவோம்.

ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கின்பின்
தீதுஉண்டோ மன்னும் உயிர்க்கு — திருக்குறள் 190



# ஆனி மாதப்பலன் (ஜுன் 15 - ஜுலை 15)

– கணித்தவர் : ஜோதிட ரத்னா – லயன். டாக்டர். கே.பி. வித்யாதரன்
37, மகாலக்ஷ்மி தெரு, தி.நகர், சென்னை – 17. தொலைபேசி : 2434 8877, 24336465

**மேடம்** எதற்கும் அஞ்சாதவர்களே ! சூரியனும் வெள்ளியும் சாதகமாக இருப்பதால் எதிர்பாராத பணவரவு உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். கவலை வேண்டாம். வாகனம் மாற்றுவீர்கள். செவ்வாய் பலவீனமாக இருப்பதால் தலைசுற்றல், வயிற்றுவலி, சில சில விபத்துக்கள் வரக்கூடும். பழைய கடனில் ஒருபகுதி தீரும். வேலை கிடைக்கும். சகோதரரின் உடல்நிலை பாதிக்கும். வியாபாரத்தில் தங்கிய சரக்குகள் விற்றுத் தீரும். புது ஒப்பந்தங்கள் தேடி வரும். உத்யோகத்தில் அதிகாரிகளுடன் இருந்த பனிப்போர் விலகும். அரசால் அனுகூலம் உண்டு. சாதித்துக் காட்டும் மாதமிது.

**இடபம்** தொலைநோக்கிச் சிந்தனை உள்ளவர்களே! உங்கள் ராசியை விட்டு சூரியன் விலகியதால் உடல்நிலை சீராகும். பயம் விலகும். பேச்சில் இருந்த தடுமாற்றம் நீங்கும். எதிர்பாராத பணவரவு உண்டு. மனைவிக்கு மருத்துவ செலவுகள் உண்டு. சொத்து விஷயத்தில் கவனம் தேவை. தாயார் வகையில் கருத்து மோதல் வரும். வாகனத்தில் செல்லும்போது நிதானம் தேவை. மாத மத்திய பகுதியிலிருந்து பணப்புழக்கம் அதிகரிக்கும். வியாபாரத்தில் கமிஷன் வகை லாபம் தரும். உத்யோகத்தில் வேலைச்சுமை கூடும். போராடி வெற்றி பெறும் மாதமிது.

**மிதுனம்** எதிரிக்கும் உதவுபவர்களே! செவ்வாய் சாதகமாக இருப்பதால் தைரியம் பிறக்கும். சகோதரர் உதவுவார். மாத பிற்பகுதியில் உங்கள் ராசிநாதன் வலுவடைவதால் குடும்பத்தில் சந்தேகம், குழப்பம் நீங்கும். நண்பர், உறவினர்களால் மதிக்கப்படுவீர்கள். சூரியனால் உடல் சோர்ந்து அசதி, காய்ச்சல் வரும். வெள்ளியால் பிரபலங்கள் உதவு வார்கள். வாகனம் வாங்குவீர்கள். வியாபாரத்தில் சில மாற்றங்களை செய்வீர்கள். பங்குதாரர்களுடன் சண்டை வரும். உத்யோகத்தில் வீண்பழி விலகும். சற்றே பொறுமை காக்க வேண்டிய மாதமிது.

**கடகம்** சகிப்புத்தன்மை உள்ளவர்களே ! ஒரே மாதத்தில் பல வேலைகளை பார்க்க வேண்டி வரும். உடல் நலத்தில் கவனம் செலுத்துங்கள். யாரையும் நம்பி பெரிய உதவிகள் எல்லாம் செய்ய வேண்டாம். செவ்வாய் உங்கள் ராசியை விட்டு விலகுவதால் கோபம் குறையும். புதன் மாத மத்தியில் வலுவடைவதால் நட்பு வட்டம் விரியும். புது வேலை கிடைக்கும். ஆடை, ஆபரணம் சேரும். மாதப் பிற்பகுதியில் வாகன வசதி கூடும். வியாபாரத்தில் பணப்புழக்கம் அதிகரிக்கும். உத்யோகத்தில் வேலைச்சுமை கூடும். ஏமாற்றங்கள் விலகும் மாதமிது.

**சிம்மம்** சிந்தனை சிற்பிகளே ! உங்கள் ராசிநாதன் லாப வீட்டில் அமர்ந்திருப்பதால் நினைப்பதெல்லாம் நிறைவேறும். பணவரவு உண்டு. இதுவரை ஒரே வீட்டில் நின்ற செவ்வாய் எட்டாம் தேதி முதல் உங்கள் ராசிக்கு வருவதால் சகோதரப்பகை விலகும். காணி வாங்குவதில் இருந்த தாமதம் நீங்கும். புது மின்சார சாதனங்கள் வாங்குவீர்கள். வியாபாரத்தில் வருமானம் உயரும். புது ஒப்பந்தங்கள் தேடி வரும். உத்யோகத்தில் சலுகைகள் கிடைக்கும். சக ஊழியர்கள் அடங்குவார்கள். மகிழ்ச்சி தரும் மாதமிது.

**கன்னி** கலைஞானிகளே! மாத மத்தியபகுதியிலிருந்து உங்கள் ராசிநாதன் புதன் ஆட்சி செய்வதால் தொட்ட காரியங்கள் துலங்கும். எதிர்பாராத பணவரவு உண்டு. எதிர்ப்புகள் நீங்கும். வேலை கிடைக்கும். நட்பு வட்டம் விரியும். குடும்பத்தில் நல்லது நடக்கும். பிள்ளைகளால் அலைச்சல் ஏற்படும். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்றுத் தீரும். பங்குதாரர்கள் ஒத்துழைப் பார்கள். உத்யோகத்தில் அதிகாரிகளின் ஆதரவு கூடும். தாய்வழியில் பிரச்சினைகள் வந்து நீங்கும். தோல்வியிலிருந்து விடுபடுவீர்கள்.

**துலாம்** காந்தியவாதிகளே ! பிரபல யோகாதிபதியான புதன் மாதத்தின் மத்தியில் ஆட்சி பெறுவதால் அதுமுதல் பணம் வரும். பழைய கடனில் ஒன்றை பைசல் செய்வீர்கள். தந்தையாருக்கு மருத்துவச் செலவுகள் உண்டு. செவ்வாய் வலுவடைவதால் சொத்துப் பிரச்சினை தீரும். மகளுக்கு நல்ல வரன் அமையும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். இறக்குமதி, கமிஷன் மூலம் பணம் வரும். உத்யோகத்தில் அதிகாரிகளின் அன்பை பெறுவீர்கள். வாகனம் வாங்குவீர்கள். திட்டமிட்ட காரியங்களை முடித்துக் காட்டும் மாதமிது.

**விருச்சிகம்** வாய்மையானவர்களே ! குருவும் ராகுவும் சாதகமாக இருப்பதால் உங்கள் திறமைகள் வெளிப்படும். உங்கள் ராசிநாதன் 8ந்தேதி முதல் தசமகேந்திரம் விலகுவதால் கால், முதுகு, மூட்டுவலி நீங்கும். எதிர்பாராத பணவரவு உண்டு. சூரியன் மறைந்திருப்பதால் அலைச்சல் செலவு உண்டு. குரு சாதகமாக இருப்பதால், பிரபலங்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் இருந்த தேக்க நிலை மாறும். பழைய பாக்கிகள் வசூலாகும். உத்யோகத்தில் எதிர்த்தவர்கள் அடங்குவார்கள். பிள்ளைகளால் அந்தஸ்து கூடும். திடீர் திருப்பங்கள் நிறைந்த மாதமிது.

**தனுசு** தன்னலமற்றவர்களே ! ராசிக்கு எட்டில் நின்று உங்களை ஆட்டிப்படைத்த செவ்வாய் 8ந்தேதி முதல் 9ஆம் வீட்டிற்கு செல்வதால் வீண் விரயம், கோபம், பயம் யாவும் நீங்கும். சுக்ரனும் சாதகமாக இருப்பதால் புகழ், கௌரவம் ஒருபடி உயரும். சொத்து அமையும். பிரிந்திருந்த தம்பதிகள் ஒன்று சேர்வீர்கள். அரசு காரியங்கள் உடனே முடியும். ஆடை, ஆபரணங்கள் சேரும். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்யோகத்தில் சிறந்த சலுகைகளைப் பெறுவீர்கள். வெற்றிக்கு வித்திடும் மாதமிது.

**மகரம்** தாய் மண்ணை மதிப்பவர்களே ! சூரியன் சாதகமாக இருப்பதால் பழைய பிரச்சினைகளுக்கு புது தீர்வு கிடைக்கும். உங்களைப் பற்றிய தவறான விமர்சனங்கள் அடங்கும். செவ்வாய் 8ந்தேதி முதல் அட்டமத்தில் நிற்கும் சனியுடன் சேர்வதால் சில சில விபத்துக்கள் ஏற்படும். பிள்ளைகளிடம் கோபத்தைக் காட்ட வேண்டாம். யாருக்கும் சாட்சி கையெழுத்து போட வேண்டாம். வியாபாரத்தில் மற்றவர்களை நம்பி ஏமாறாதீர்கள். கூட்டுத் தொழிலில் பிரச்சினைகள் வெடிக்கும். உத்யோகத்தில் நிதானம் தேவை. நாவடக்கம் தேவைப்படும் மாதமிது.

**கும்பம்** ஒற்றுமை உணர்வு உடையவர்களே ! தொடர்ந்து சுக்கிரனும் புதனும் சாதகமாக இருப்பதால் உங்கள் கை ஓங்கும். பிரச்சினைகளை முறியடித்து முன்னேறுவீர்கள். பணவரவு உண்டு. உறவினர்கள் மதிப்பார்கள். மகான்களின் ஆசி கிடைக்கும். புது வேலை அமையும். அரசு விவகாரங்கள், வழக்குகள் சாதகமாக முடியும். வியாபாரத்தில் சின்ன சின்ன பிரச்சினைகள் வேலையாட்களால் வரும். புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். உத்யோகத்தில் அதிகாரிகள் ஆதரிப்பார்கள். தடை உடைபடும் மாதமிது.

**மீனம்** மிதவாதிகளே ! ராகுவும் சுக்கிரனும் உங்களுக்கு ஆதரவாக இருப்பதால் குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். செவ்வாயால் வழக்கில் வெற்றி பெறுவீர்கள். காணி வாங்குவீர்கள். திடீர் பயணங்கள் உண்டு. கல்யாணப் பேச்சுவார்த்தை சுமுகமாக முடியும். ஷேர், லாட்டரியில் பணம் வரும். வியாபாரத்தில் புது முதலீடு செய்வீர்கள். கடையை பெரிதாக்குவீர்கள். உத்யோகத்தில் வேலைச்சுமை குறையும். வீண்பழி விலகும். விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வருவார்கள். மனதிருப்தி தரும் மாதமிது.

தரமானவர்களிடம் தங்கத்தை வாங்குங்கள்...
தரமான தங்கம் வாங்குவதற்கு
சிறந்த இடம் Wembleyயில்

# Tharani Jewellery

54 Ealing Road Wembley
Middlesex HA0 4TQ
Tel : 020 8902 7111, 8902 6777





மீண்டும் Tamil House-இல் மார்க்கண்டன் Solicitors

# MARKENDAN & UDDIN Solicitors

Solicitors & Administrators for Oaths

Tamil House, 720 Romford Road,London E12 6BT
Tel : 020 8514 8300, 07830 285 634 Fax : 020 8514 8381
Email : info@msssolicitors.com

We Specialise in
For all your needs in immigration
(All aspects upto house of lords)
Commercial & Residential
Conveyancing, Employment,
Civil Litigation, Consumer Problems,
Lastwill, Power of Attorney,
SponsorshipDeclaration
HSMP, Workpermits

Mr. Markandan : 07956 386 578
Mr. Uddin : 07957 455 670

# தொலைக்காட்சித் தொடர்களால் விளையும் சமுதாய சீர்கேடுகள்



தமிழ் மொழியை இயல் இசை நாடகம் என மூவகையாக முன்னோர் வகுத்தனர். ஆகவே, நம் தமிழ் முத்தமிழ் என வழங்கலாயிற்று. இயற்தமிழ் படித்து இன்புறத்தக்கது, இசைத் தமிழ் கேட்டு இன்புறத்தக்கது, நாடகத் தமிழ் பார்த்து மகிழத்தக்கது. நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும் என்ற தொல்காப்பியச் சித்திரத்தைக் கொண்டு பண்டைக் காலத்திலேயே நாடகம் தோன்றி வளர்ந்திருக்கிறது என்பதை அறியலாம். அவ்வாறு காலந்தோறும் படிப்படியாக வளர்ந்த நாடகக்கலை திரைப்படத்துறையின் வளர்ச்சியாலும், தொலைக்காட்சியின் வருகையாலும் வலுவிழந்தது. தொலைக்காட்சி வாயிலாக வெளியிடப்படும் நாடகங்கள் தொடர்கள் என்று அழைக்கப்படுகின்றன. அத்தகுத் தொடர்கள் சமுதாயத்தில் ஏற்படுத்தும் விளைவுகளை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

## சக்தி வாய்ந்த சாதனம்



நாளிதழ்கள், வார, மாத இதழ்கள், வானொலி, தொலைக்காட்சி, இணைய தளம் என்ற பல்வேறு ஊடகங்கள் இருக்கின்றன. அவற்றுள் தொலைக்காட்சியும் மக்களை ஒருங்கிணைக்கும் ஒரு பாலமாக விளங்குகின்றது. மொழி, கலை, தேசப்பற்று, மருத்துவம், பொழுதுபோக்கு, என அனைத்தையும் அறிந்து கொள்ளக்கூடிய சக்தி வாய்ந்த சாதனமாக அது விளங்குகின்றது. அதே சமயம் பொழுது போக்கிற்காக வெளியிடப்படும் தொடர்கள், சினிமா சம்பந்தமான சில நிகழ்வுகள் மனிதனின் வளர்ச்சிக்கும், தேக்கத்திற்கும் காரணமாய் அமைந்துவிடுகிறது எனலாம்.

அன்றைய மேடை நாடகங்களின் இடத்தை இன்றைய தொலைக்காட்சித் தொடர்கள் பிடித்துக் கொண்டன. முன்னோடிகளாகத் திகழும் பல்வேறுத் தொலைக்காட்சி நிறுவனங்களும் காலை பத்து மணி முதல் இரவு பன்னிரண்டு மணி வரை பல்வேறு தொடர்களை ஒளிபரப்பு செய்கின்றனர். இத்தகையத் தொடர்களைப் பார்ப்பதற்கு பெண்களே அதிக ஆர்வம் காட்டுகின்றனர். அவற்றால் விளையும் நன்மைகளை விட தீய விளைவுகளே அதிகம் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

## மெகா சீரியல்கள்



தொலைக்காட்சித் தொடர்கள் பெரும்பாலும் மெகா சீரியல்கள் என்றழைக்கப்படும் நெடுந்தொடர்களாகவே அமைகின்றன. அவை பெரும்பாலும் ஓராண்டு காலமாகவோ அல்லது அதற்கு அதிகமாகவோ வெளிவந்து கொண்டேயிருக்கும். சன் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் கோலங்கள் தொடரில் வரும் கதாநாயகி முதல் குழந்தைக்குத் தாயாகி இப்பொழுது இரண்டாவது பிரசவத்துக்குத் தயாராகியிருக்கிறாராம். அதனால், இயக்குனருக்கு அந்தத் தொடரை எப்படி முடிப்பது என்பதில் சிக்கல் போலும் ! கோலங்கள் முடிந்த பாடில்லை ! இப்படி எத்தனையோ தொடர்கள் தொடர்ந்த வண்ணம் உள்ளன. ஒரு தொடரை ஒளிபரப்பத் தொடங்கும் போதே அது எவ்வளவு காலம் ஒளிபரப்பாகும் என்பது அறிவிக்கப்படுவதில்லை. அது தொடரினைத் தயாரிப்பவருக்கும் தொலைக்காட்சி நிறுவனத்திற்கும் உரிய ஒப்பந்தமாக மட்டுமே அமைகிறது. எனவே, அதனைக் காணும் நேயர்கள்


Video Audio
14 Lompait Hill Lewisham
London SE13
Tamil, Malayalam, Hindi,
Telugu Films, Tele Drama
Devotional Carrnatic,
Classical Cd's
Tamil Magazines,
News Papers
Phone Cards
Maharasie Jewellers
122 Loampit Vale Lewisham
London SE13 7SN
Tel : 020 8691 8888


CAPITAL AUTOS LTD
51A Milton Avenue East Ham London E6 18G
Tel : 020 8470 4789 Fax : 020 8472 2147 www.capitalauto.com
இலண்டனில் எந்த இடத்தில் இருந்தாலும்
உங்கள் வாகனத் திருத்த வேலைகளுக்கு
நீங்கள் செல்ல வேண்டிய இடம்
• Fully equipped M.O.T. & accident repair centre
• Insurance repairs welcome
• Recovery Service
• Approved insurance repairs
• Courtesy vehicle available For most repairs
• Professional friendly service and advice
• Collection & deliver within the local area
BMW MERCEDES VAUXHALL HONDA
VOLKSWAGEN NISSAN Ford



கதையிலே தொய்வு ஏற்பட்டாலும் எப்பொழுது முடியும் என்று நினைத்துக் கொண்டே பார்ப்பதும் ஒரு தொடர்கதையாக அமைந்துவிட்டது.

## போட்டி

தொலைக் காட்சி நிறுவனங்கள் டிஆர்.பி ரேட்டிங்கில் தங்களை முதன்மைப்படுத்திக் கொள்ளவே விரும்புகின்றன. அதற்காக எவ்வளவு பணம் வேண்டுமானாலும் முதலீடு செய்யத் தயாராக இருக்கிறார்கள். திரைப்படங்கள் நடிப்பதில் இருந்து ஓய்வு பெற்ற நடிகைகள், திருமணமான நடிகைகள், ஏன் மிகப் புகழ் வாய்ந்த முன்னணி நடிகைகளும் தங்கள் சினிமா வாய்ப்பை இழந்த பிறகு தொடர்களில் நடிக்கத் தயாராக இருக்கிறார்கள். அதற்கு அவர்களுக்குக் கிடைக்கும் சம்பளமும் நிறைவாக இருப்பதாகவே கூறுகின்றார்கள். முன்னணி கதாநாயகா பெரும்பாலும் அரசியலுக்கோ வேறு நிர்வாக அமைப்புக்களை ஏற்படுத்திக் கொள்வதில் இத்தகு தொடர்களில் நடிக்க அதிக ஆர்வம் காட்டுவதில்லை.

## அன்றைய நாடகங்கள்

நாடகக்கலை தோன்றி பல நூற்றாண்டுகள் ஆகிவிட்டன. அக்கலை வாயிலாக அளப்பரிய செயல்களை நாடக ஆசிரியர்களும் கலைஞர்களும் ஆற்றியிருக்கின்றனர். நாடகங்கள் வாயிலாக நாட்டுப் பற்று, மொழிப்பற்று, அறிவியல் சிந்தனைகள், ஒற்றுமை உணர்வு என்று எத்தனையோ விஷயங்கள் மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டன. நாடக உலகில், பணியாற்றி நம் நெஞ்சங்களை விட்டு நீங்காத கலைஞர்கள் ஏராளம்.

## அபத்தங்கள்

இன்றைய தொலைக்காட்சி நாடகங்கள் மக்களுக்குக் கூற விழைவது என்ன? மக்கள் உணர்ந்து கொள்வதுதான் என்ன? என்பது கேள்விக் குறியாகவே உள்ளது. ஒவ்வொரு தொடரும் தினமும் குறிப்பிட்ட அரைமணி நேரம் ஒளிபரப்பாகும் என்று கூறுகிறார்கள். ஆனால் ஏராளமான வர்த்தக விளம்பரங்களுக்கு இடையில் பத்து நிமிடங்களோ அல்லது பதினைந்து நிமிடங்களோதான் ஒளி பரப்பாகின்றது என்பது வேடிக்கையான விஷயம். வீட்டிலுள்ள குழந்தைகளோ அல்லது வளர்ந்த பிள்ளைகளோ வேறு தொலைக்காட்சி சேனல்களை பார்க்க விரும்பினாலும் பெரும்பாலான பெண்கள் அதற்கு இடமளிப்பதில்லை என்பது வருத்தத்திற் குரிய உண்மையாகும்.


## மூளைச்சலவை

எல்லா நாடகங்களும் பெரும்பாலும் சமுதாயம் அல்லது குடும்பப் பிரச்சனைகளை மையமாகக் கொண்டே சுழல்கின்றன. அக்கா, தங்கை, கணவன், மனைவி, நாத்தனார், மாமனார், மாமியார், மருமகள்கள் உறவுகளின் பின்னணியில் ஏற்படும் பிரச்னைகளைக் கண்முன்னே கொண்டு வந்து அத்தொடர்கள் நிறுத்துகின்றன. மிகைப்படுத்திக் காட்டவும் தவறுதில்லை. அவற்றைப் பார்க்கின்ற பெண்கள் தங்கள் வாழ்க்கையின் பெரும்பகுதியை அப்படியே படம் பிடித்துக் காட்டுவதாக எண்ணுகின்றனர். யதார்த்தத்தை மறந்து விடுகின்றனர்.

தங்கள் அன்றாடக் கடமைகள், உறவினர் வருகை, குழந்தைகளைப் பராமரிப்பது போன்றவற்றில் அதிக அக்கறை செலுத்த விடாமல் பெண்களைக் கட்டி வைத்திருக்கின்றார்கள் என்பது வர்த்தகரீதியான உண்மையாக இருக்கலாம். ஆனால் அதைப் பார்க்கின்ற மக்களுக்கு நேரம் செலவாவதைத் தவிர மிஞ்சுவது ஒன்றும் இல்லை. அலுவலகங்களில் இருந்து வரும் கணவனுக்கு உணவு பரிமாறுவதற்குக் கூட விருப்பமில்லாமல் செயல்படுவதாகக் குற்றச்சாட்டு வேறு. பள்ளிப்பருவத்தில் இருக்கும் குழந்தைகளுக்குரிய பாடம் சொல்லிக் கொடுக்கும் தாய்மார்கள் குறைந்துவிட்டார்கள். கல்லூரிக்குச் செல்லும் பிள்ளைகள் மீது கவனம் இல்லை. எதாவது விசேஷங்களில் கூடியிருக்கும் பெண்கள் பேசுவது கூட ஒரு தொலைக்காட்சித் தொடர் பற்றியதாக அமைகிறது. நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகம் என்ற ஆன்றோரின் வாக்கு இத்தகு தொலைக் காட்சி நாடகங்களால் பொய்யாகும் அவலம் மேலோங்கி நிற்கின்றது.

## முரண்பாடான உறவுகள்

எந்தக் கலையாக இருந்தாலும் அது மக்களுக்கு மகிழ்ச்சியைத் தரவேண்டும். அதே சமயம் நல்லதொரு படிப்பினையாகவும் வழிகாட்டியாகவும் அமைய வேண்டும். அத்தகைய கலைகளே காலத்தை வென்று நிற்கும். ஆனால், தொலைக்காட்சித்


AMBAAL
Jewellers
784 London Road Thornton Heath Surrey CR4 6JB
Tel : 020 8689 8293 Fax : 020 8684 0323
176 Upper Tooting Road London SW17 7ER
Tel : 020 8672 9955 Fax : 020 8672 7097


STATION SUPERSTORE
Off Licence & Grocers
NEWSPAPER, PHONE CARDS
MAGAZINES, BUS PASS, PAY POINT
ஆகியவற்றுடன்
உங்களுக்கு தேவையான சகலவிதமான
மளிகைப்பொருட்கள், பசுமையான மரக்கறி வகைகள்
பழவகைகள் மற்றும் உங்களது அத்தியாவசிய
தேவைகளை நிறைவாகவும் மலிவாகவும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
Tel : 020 8503 4711
Fax : 020 8548 9564
Mob : 07985 143 150
07956 514 823

தொடர்களோ மக்களை வீண்பொழுது போக்குபவர் களாக மாற்றியமைத்திருக்கிறது எனலாம்.

தமிழர்க்கென்று ஒரு நாகரிகமும் பண்பாடும் காலம் காலமாக இருந்து வருகின்றது. கணவன், மனைவி, நண்பன், தோழி, அண்ணன், அண்ணி என்று ஒவ்வொரு உறவும் தமக்கென்று ஒரு புனிதத் தன்மையோடு இருக்கின்றது. இதனையே மக்களின் வாழ்வும், இலக்கியங்களும், காப்பியங்களும் உணர்த்தி நிற்கின்றன. ஆனால், தொலைக் காட்சித் தொடர்களோ இத்தகு உறவுகளைப் பெரும்பாலும் கொச்சைப் படுத்தி நமது பண்பாட்டுக்கே குந்தகம் விளைவிப்பதாக அமைந்துள்ளது. உலகத்தில் எங்கோ ஒரு மூலையில் நடைபெறும் மிகக் குறைந்த சதவிகித இழிந்த உறவுகளை மிகைப்படுத்தி நம் வீட்டு வரவேற்பறையில் வெளிச்சம் போட்டுக் காட்டுவது ஏன்? அதனால் எதிர்கால சமுதாயம் பாதிக்கப்படாதா? இதனைச் சிந்தித்து செயல்பட வேண்டியது நம் உரிமையும் கடமையும் ஆகும்.

ஆனந்தம் என்ற தொடரில் ஒரு குடும்பத்தைப் பழி வாங்குவதற்காக வந்த மருமகள். அவள் கணவன் அவளை விட்டு விட்டு காதலித்தவளையே திருமணம் செய்து கொள்கிறான். தனிமைப் படுத்தப்பட்ட விட்டதாய் உணரும் அவள் மீண்டும் ஆவேசமாகப் பழிவாங்க முனைகிறாள்.

கோலங்கள் என்னும் தொடரில் விவாகரத்து பெற்ற பின்னரும் அந்தக் கணவன் முன்னாள் மனைவியைத் துன்புறுத்துகிறான்.

லட்சுமி என்ற தொடரில் அக்காள் கணவன் மைத்துனியை அடையத் துடிப்பதைப் பிரதானமாகக் காட்டுகிறார் இயக்குநர்.

தான் விரும்பிய பெண் தன் அண்ணனுக்கு மனைவியான பிறகும் அவளை அடையத் துடிக்கின்ற அவலம். ஆனால் இத்தொடருக்குத் தலைப்பு இது நம்ம குடும்பம் என்பதாகும்.

கஸ்தூரி என்னும் தொடரில், தந்தையின் கட்டாயத்திற்காக கிராமத்துப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்கிறான் கதாநாயகன். நகரத்தில் வசிக்கும் நாகரிக மங்கையையும் இரண்டாவதாகத் திருமணம் செய்து கொள்கிறான். முதல் மனைவியை, இரண்டாவது மனைவியின் வீட்டில் வேலைக்காரியாகப் பணிபுரியும் அவலத்துக்கு ஆளாக்குகின்றனர்.

வளரும் சமுதாயத்திற்கு வழி காட்டும் தொடர்களா இவை? தொலைக்காட்சித் தொடர்கள் முரண்பாடான உறவுகளை வெளிச்சம் போட்டுக் காட்டி வளரும் சமுதாயத்தைப் படுகுழியில் தள்ளாதா? இதற்குத் தங்களை அறியாமலே பெற்றோர்கள் துணை போகின்றார்கள்.

## மாற்றத்திற்கான வழிகள்

தரமான தொலைக்காட்சித் தொடர்களைத் தேர்ந்தெடுத்துப் பார்ப்பதனால் மேற்கொண்ட சிக்கல்களைத் தவிர்க்கலாம். முடிந்தவரை குழந்தை களுக்குப் பல்வேறு உளவியல் பிரச்சனைகளை உருவாக்கும் இத்தகு தொடர்களைத் தவிர்ப்பது குடும்பத்திற்கு நலம். திரைப்படங்களுக்குச் சென்சார் போட்டு இருப்பது போல் தொலைக்காட்சி தொடர் களும் கண்காணிக்கப்பட வேண்டும். வீட்டிலுள்ள பெரியவர்கள் தங்கள் மகிழ்ச்சிக்காக பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் தகர்க்கும் இத்தகு தொடர் வெடிகளை வீட்டுக்குள் அனுமதிக்கக்கூடாது. அரசாங்கமும், பெண்ணிய அமைப்புகளும், சமூக ஆர்வலர்களும் கூடி இதனைச் சீர் செய்யப் போராடினால் அன்றி விடிவு ஏற்படப் போவதில்லை.

தங்கள் வளர்ச்சிக்காகப் படைப்பாளிகள் இரசிகர்கள் விருப்பம் இதுதான் என்று கூறி பண்பாட்டையும், நம் கலாச்சாரத்தையும் சிதைக்கக் கூடாது. வெறும் பொழுது போக்கிற்காகத்தான் என்று கூறி இரசிகர்களும் தங்கள் வீட்டு வரவேற்பறையில் தரம் இல்லாத நிகழ்ச்சிகளை வரவேற்கக்கூடாது. இருதரப்பினரும் ஒத்துப் போனாலன்றி இது போன்ற தொடர்கள் நம் கலாச்சாரத்தை தலைகீழாகப் புரட்டிப் போட்டு விடும் என்பதில் ஐயமில்லை. நாகரிகம் என்ற பெயரில் எதற்கு வேண்டுமானாலும் இடம் கொடுப்பது நம்மை அறியாமையில் தள்ளிவிடும் என்பதனைக் கண்ணதாசன் அவர்கள்,

**தற்கால நாகரிகம் மனிதனைக்**
**கற்காலம் நோக்கி ஒட்டுதே**

என்று கூறுகின்றார். நாடகங்களையும், நிகழ்ச்சிகளையும் வரவேற்போம். நம் நாகரிகத்தையும், கலாச்சாரத்தையும் போற்றுவோம்.

**செ. தனம்**
விரிவுரையாளர்
சிறிசாரதா மகளிர் கல்லூரி
சேலம்



# ARM ASSOCIATES

*For all types of insurance*

**P. SRINIVASAN** (CertPFS)
and
**SUHAN SRINIVASAN** (DipPFS, Economics BSc)

We have been helping our client to find competitive and quality policies for over 35 years. How have we been able to stay in the insurance business for so long? Well that is quite simple. We understand our clients and provide them with the personal service they need.

- ✓ We deal with all types of insurance under one roof
- ✓ There are no proposal forms to complete
- ✓ Quotations and cover provided over the phone
- ✓ We are able to offer exclusive rates
- ✓ We also offer Independent financial advice on:

Pensions
- Mortgages | Life cover
- Investments | Savings
- Inheritance Tax Planning

**ARM Associates is the one stop of all your financial needs**

**Tel : 020 8763 2221 Fax : 020 8763 2220**
**32 Abbots Lane, Kenley, Surrey, CR8 5JH**
**Email : sri@srinivasan.co.uk**
**Web : www.srinivasan.co.uk**



நீங்கள் விரும்பும் டிசைன்களில்
22 காரட் தங்க நகைகளை தெரிவு செய்ய
இன்றே நாடுங்கள். உங்கள் பழைய
பவுண்களை கொடுத்து புதிய நகைகளை
வாங்கலாம். அது மட்டுமல்ல, நீங்கள்
செய்யும் ஓர்டர்கள் குறித்த நேரத்தில்
செய்து தருவதில் வல்லுனர்கள்.

மலிவான விலையில்
தரமான
தங்க நகைகளுக்கும்
புடவைகளுக்கும்
ஹாசியத்தில்

# தினேஸ் ஜுவலர்ஸ்

## Thinesh Jewellers & Textiles

**276 Lewisham High Street,**
**Lewisham, London E13 6JZ**
**Tel : 020 8613 9569 / Fax : 020 8690 4661**
**Email : T-K6@hotmail.co.uk**
**www.thinesh-jt.com**

திருமண வைபவங்களுக்கு தேவையான பொருட்கள்
பட்டு சேலைகள், தலைபாகை, சிறுவர்களுக்கான அனைத்துப்
பொருட்களும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ளாம்.

# WHITE FIRE UK LTD



## நகைக்கடை திறப்பு விழா



லண்டன் **Ruislip** பகுதியில் ஒரு புதிய வைர நகைக் கடை அண்மையில் கோலாகலமாக திறந்து வைக்கப்பட்டது. இங்கு எத்தனையோ தமிழர் நகைக்கடைகள் இருந்தாலும், இந்த கடை ஒரு வித்தியாசமாக வியாபாரத்தை கொண்டுள்ளது. நகைகள் யாவற்றிலும் வைரம் பதித்ததுதான் இங்கு விற்பனையாகிறது. இது ஒரு புதிய முயற்சி. பட்டப்படிப்பு படித்த இவர் வியாபாத்தில் இறங்கியது பாராட்டுதற்குரியது.

இந்த கடை திறப்பு விழாவில் கலந்து கொண்டவர்கள் மற்றும் ஆதரவு கொடுத்தவர்களுக்கு நன்றி கூறுகிறார் இந்தக் கடையின் உரிமையாளர் செல்வன் தேவசகாயம்.














London
Euro Travels
&
Tours Ltd
சிறந்த வாகன வசதியும் சிறந்த தங்குமிடமும்
ஏற்பாடு செய்து கொடுக்கப்படும்
Chennai
ARS Tours
சுற்றுலா துறையில் 40 வருட அனுபவம்
Euro Travels-ன்
மற்றுமொரு சேவை
லண்டனில் இருந்து சென்னைக்கு போகிறவர்களுக்கு
விமான நிலையத்துக்கு
வாகன வசதி
தங்கும் வசதி
தமிழ் நாட்டை சுற்றி பார்க்கும் வசதி
நல்ல முறையில் ஏற்பாடு செய்ய தொடர்பு கொள்ளவும்
தமிழில் தொடர்பு கொள்ள
தீ. அருள்தாஸ்




எவரெஸ்ட்
Curry King
24 Loampit Hall Lewisham SE13 7SW
Tel : 020 8691 2233
Breakfast
Lunch Dinner
அசத்தலான
அசைவ சுவைக்கு



# ஜூன் 3ஆம் தேதி தனது 85ஆவது அகவையை கொண்டாடும் தமிழினத் தலைவருக்கு எமது வாழ்த்துக்கள்

ஒரு காலத்தில் மணியன் எழுதும் பயணக்கட்டுரையை வாசிப்பதற்கு ஆனந்தவிகடனை ஓடி ஓடி வாங்குவார்கள். நாங்கள் போகாத இடங்களை அவர் பார்த்து வர்ணித்து எழுதும்போது நாம் அவ்விடங்களை பார்க்க வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கும். அந்த அளவில் அவருடைய எழுத்துக்கள் இருந்தது.

கி.வா ஜகந்நாதன் கலைமகள் ஆசிரியர் அவரின் பயணக்கட்டுரைகள் குறிப்பாக, இலங்கைப் பயணக்கட்டுரைகள் (கண்டறியாதென கண்டேன்) சிறப்பாக இருந்தது. இப்போதும் எழுத்தாற்றல் உள்ளவர்கள் போய் வந்த அனுபவங்களை சுவைபடக் கூறுவார்கள். ஆனால் நான் இப்பயணத் தொடர் எழுதும் நோக்கம் எனது நீண்ட கால அனுபவத்தினை உங்களிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணமே.


அண்மையில் எனது நண்பர் ஒருவர் தமிழ்நாட்டை சுற்றிப் பார்க்க வந்தார். ஐந்து நட்சத்திர ஓட்டலில் தங்கி, பென்ஸ் காரை வாடகைக்கு எடுத்துக் கொண்டு தமிழ்நாட்டை சுற்றிப் பார்த்து வந்தார். வந்தவரிடம் நான் உங்கள் பயணம் எப்படி என்றேன். அதற்கு அவர் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து சிறப்புமிக்க கோவில்களையும் தரிசித்து விட்டேன் என்றார். ஆறுபடை வீடுகளில் ஒன்றான திருச்செந்தூர் எப்படி என்றேன். அதற்கு நண்பர் முழி பிதுங்கி அதைப் பார்த்த ஞாபகம் இல்லையே ! அது எங்கு உள்ளது? என்றார். நான் கன்னியாகுமரியிலிருந்து 60 கிலோ மீட்டர் தூரத்தில்தான் உள்ளது என்றேன். அதற்கு அவர் என்னுடைய ஓட்டுநர் அந்த இடத்தை தவறவிட்டுவிட்டார் என்று கவலைப்படக் கூறினார்.

இதேபோல் சுற்றிப்பார்க்க வந்த மற்ற ஒரு நண்பரையும் சந்தித்தேன். அவர் கூறியது வியப்பாக இருந்தது. எல்லா கோவிலையும் தரிசித்தேன். ஆனால் திருவண்ணாமலையை மட்டும் விட்டுவிட்டேன் என்றார். அவரின் வாதமும் சிந்திக்கக்கூடியதாக இருந்தது. நினைக்க முக்தி தரும் திருவண்ணாமலையை வீணாக ஏன் பார்க்க வேண்டும் என்று அவர் நினைத்தார் போலும். தமிழ்நாட்டில் 36,000 கோவில்கள் இருப்பதாக ஓர் கணக்கு ஏடு கூறுகின்றது. இவ்வனைத்துக் கோவில்களையும் தரிசிக்க முடியுமா ! குறிப்பாக தமிழ்நாட்டில் பாடல் பெற்ற திருத்தலங்கள் 276 உள்ளன. இவைகள் யாவும் நால்வர்கள் பாடப்பெற்ற அற்புதம் வாய்ந்த சிவ தலங்கள். இதைவிட தமிழ்க்கடவுளான முருகன் ஆலயங்கள் எத்தனை எத்தனையோ. ஆனாலும் ஆறுபடை வீட்டுக்கு இணையாகாது. ஒரு சைவ மகன் தனது வாழ்நாளில் ஒருமுறையாவது இந்த அற்புதம் வாய்ந்த கோவில்களையும், தமிழ்நாட்டையும் தரிசிக்க வேண்டியது அவசியம்.

வியாபாரம் செய்யும் நண்பர் ஒருவர், கடவுளை வணங்கத்தான் வேண்டுமென்றால் அதற்கு இன்னும் வயது போகட்டும் என்றார். அவரின் கூற்றை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. காரணம் தமிழில் ஒரு பழமொழி உள்ளது. பல்லு விழும் முன் சப்பிக்கோ, துப்பிக்கோ. பிள்ளை பெறு முன் தின்னுக்கோ, குடிச்சுக்கோ. ஆகவே இப்பழமொழிக்கு ஏற்ப எதையும் இளம் வயதில் செய்து கொள்வது நல்லது.

இனி என் பயணப்பதிவுகளைத் தொடர்கிறேன். எனது முதல் பயணம் இலங்கையிலிருந்து திருச்சிராப்பள்ளிக்கு. அந்த நாள் இந்தியா சென்று வர அந்நிய செலாவணி ரூபாய் 150 மட்டும் அனுமதிக்கப்படும். இப்பணத்தைக் கொண்டு தென்னிந்தியாவை வலம் வரவேண்டும். ஆனால் இலங்கையிலிருந்து விமானப் பயணச்சீட்டை தன் பணத்தில் எடுத்துக் கொள்ளலாம். அப்போது பலாலியிருந்து திருச்சிராப்பள்ளிக்கு வந்தடைய வெறும் ரூபாய் 25 மட்டுமே.

– தொடரும்


HAPPY TEX
6 Ealing Road Wembley Middx HA0 4TL
Tel : 020 8903 0782 Fax : 020 8903 4680
• Money Transfer
• Textiles
• Watches
• Jewellery
• Rice Cookers
• Perfume
• Wedding Suits


SELECT
ESTATE LETTINGS
Sales Mortgages Lettings
288 High Street North,
Manor Park, London E12 6SA
Tel : 020 8470 1500
Fax : 020 8470 9800
www.selhouses.co.uk
email : info@selhouses.co.uk
Residential & Commercial Sales
Professional Service
Rent Guarantee Scheme
Vetted Tenants
In-house Maintenance Dept
Competetive Sales Commission
Business Transfer
Mortgages Arranged even with
no proof of income

# வயிற்றை பாதுகாக்கும் மாதுளம்பழம்

களைப்பை போக்கி தாகத்தை தணிக்கும் பழமாய் மாதுளை திகழ்கிறது.

பண்டை காலத்திலிருந்தே மாதுளை மிக உயர்ந்த உணவாகவும் மருந்தாகவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. சிலருக்கு காய்ச்சல் நேரத்தில் மிகவும் தாகமாய் இருக்கும். அப்போது மாதுளம் பழச்சாறு அருந்தினால் உடனே தாகம் தணியும். நோயாளிகளுக்குப் பசியும் எடுக்கும்.

இது ஈரான், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளைத் தாயகமாகக் கொண்டது. இஸ்ரேலிலும், எகிப்திலும் உள்ள குழந்தைகள் பாலைவனங்களில் சுற்றித் திரிந்து அங்கே காட்டில் வளர்ந்திருந்த மாதுளை மரத்தின் பழங்களைப் பறித்து தங்கள் தாகத்தைத் தணித்துக் கொண்டதாக குறிப்புகள் காணப்படுகின்றன.

பாபிலோனியாவின் தொங்கும் தோட்டத்திலும் மாதுளம் பழமரம் இருந்ததற்கான சான்றுகள் உள்ளன. பிறகு மத்தியதரைக்கடல் நாடுகள், சீனா, இந்தியா, ஜப்பான் என்று இந்தப் பழம் பரவியது.

### புத்துணர்ச்சி தரும் பழம் இது!

உடலைப் போலவே உள்ளத்துக்கு புத்துணர்ச்சியையும், இனிமையான உணர்வையும் தரவல்லது மாதுளம்பழம். அதனால்தான் சல் முகம்மது நபி அவர்கள் தினமும் மாதுளம்பழம் சாப்பிடுங்கள். அது உங்கள் உடலில் உள்ள கழிவுகளை வெளியேற்றும். உள்ளத்திலுள்ள பெருகும் வெறுப்பு பகைமை போன்ற தீய குணங்களையும் உங்களிடமிருந்து வெளியேற்றி விடும் என்றார்.

மாதுளம்பழத்தின் வேர், பழத்தின் தோல், இலைகள், மலர்கள், விதைகள் என ஒட்டுமொத்தமாக மாதுளை மரம் மருத்துவ குணங்களுடன் திகழ்கிறது.

மஞ்சள் காமாலை குணமாக... மாதுளம்பழம் இரைப்பைக் கோளாறைச் சீர்படுத்தி ரத்தத்தை சுத்தப்படுத்துகிறது. கல்லீரல் வீக்கத்தை முற்றிலும் குணமாக்குகிறது. ஒரு இரும்புச் சட்டியில் மாதுளம்பழச் சாற்றை நான்கு மணிநேரம் வைத்திருந்து பிறகு அதைப் பருகினால் மஞ்சள் காமாலை நோய் ஒருவாரம் அல்லது பத்து நாட்களுக்குள் குணமாகிவிடுகிறது. நோய் தீரும் வரை (மஞ்சள் காமாலை) மாதுளம்பழ சிகிச்சைத் தொடர வேண்டும்.

பண்டைய இந்தியர்கள் எளிய உணவாகவும் டானிக்காகவும் மாதுளம்பழச் சாற்றை இதய நோய்களுக்குப் பயன்படுத்தினார்கள். வயிற்றுப்புண், இரணம், இதயவலி ஆகியவற்றுக்கும் மாதுளை சிறந்த மருந்து.

இப்பழத்தில் உள்ள இனிப்பும், துவர்ப்பும் சிறந்த பேதி மருந்தாகவும் செயல்படுகின்றன.

கல்லீரல், இதயம், சிறுநீரகம் முதலியவை சிறப்பாக வேலைச் செய்யவும் மாதுளம்பழச் சாறு உடனடியாகப் பயன்படுகிறது. இதனால் நோயாளியின் துன்பம் குறைந்து நோய் குணமாகும். டைபாய்டு நோயாளிகளின் காய்ச்சலின் தீவிரம் உடனே குறைய மாதுளம்பழச் சாறுப் பயன்படுகிறது. காய்ச்சல் நேரத்தில் தொற்று நோய் கிருமிகளோ, டி.பி கிருமிகளோ குடலுக்குள் சென்றுவிடாமல் பாதுகாக்கிறது.

இப்பழத்தில் உள்ள தாது உப்புகளும், பழ உணவிலிருந்து கிடைக்கும் வைட்டமின் ஏ யும் கல்லீரல் கெட்டுவிடாதபடி பாதுகாக்கிறது.

வயிற்றுவலி, சளி, கோழை, குடல் கோளாறு, அஜீரணக் கோளாறு, வயிற்று மந்தம் முதலியவற்றுக்கு மாதுளம்பழச்சாறு கைகண்ட மருந்தாகும்.

### பித்தவாந்தியா ?

பித்தவாந்தி எடுப்பவர்கள் மாதுளம்பழச்சாறுடன் சிறிதளவு தேனையும் சேர்த்து சாப்பிட்டால் உடன் நன்மை அளிக்கும். காலையில் எழுந்ததும் காய்ச்சல் என்று உணர்பவர்கள் இரத்தத்தில் இருந்து பித்தநீர் பிரிக்கப்பட்டு வெளியேற வேண்டும் என்று எண்ணுபவர்களும் இதே முறையில் மாதுளம்பழச்சாற்றையும் தேனையும் சேர்த்து சாப்பிட்டால் போதும்.

இரத்தத்துடன் மலம் வெளியேறினால் 50 மிலி பழச்சாறு அருந்தினால் போதும். இதில் உள்ள துவர்ப்புச் சுவையே மரு ந்தாக செயல்பட்டு வயிற்றுப்போக்கு, சீதபேதி முதலியவற்றைக் கட்டுப்படுத்திவிடுகிறது.

இப்பழத்தின் விதைகளுக்கு சிறுநீர்க் கற்களை வளரவிடாமல் செய்யும் ஆற்றல் உண்டு. கற்கள் ஏற்படாமலும் தடுக்கிறது. எனவே விதைகளையும் சாப்பிடுவது அவசியம். நம் அறிவுத் திறனை அதிகரிக்க இப்பழம் பயன்படுகிறது. பழங்களிலேயே மிக விரைவாக ஜீரணிப்பதும் இப்பழச்சாறுதான்.




JK Gold House &
Fashion House
314-316 London Road Croydon Surrey CRO 2TJ
Tel : 020 8684 4577 Fax : 022 8684 4677


ஐரோப்பிய, மத்திய கிழக்கு நாடுகளில்
24 மணி நேரமும் ஒளிரும் தமிழ் தொலைக்காட்சி
DEEPAM TV
EAST WEST BROADCAST LTD
UNIT 1, EBURY BUSINESS CENTRE
161-163, STAINES ROAD
HOUNSLOW, MIDDLESEX TW3 3JB, U.K.
செய்திகள் காலைக்கதிர் சின்னத்திரை தொடர்கள்
அரசியல் ஆய்வு விவரணங்கள்
மகளிர் – சிறுவர் நிகழ்ச்சிகள் நீங்களும்
நாங்களும் இணையும் பல நிகழ்ச்சிகள்
இசை நடன நிகழ்ச்சிகள் புத்தம் புதிய திரைப்படங்கள்
Tel : +44 (0) 208 8146565
Fax : +44 (0) 208 8141144
Email : info@deepamtv.tv
Web : www.deepamtv.tv



லண்டனில் பத்மினி ஜுவலர்ஸ் உரிமையாளர் பாலா என்று அழைக்கப்படும் வீரசிங்கம் பாலசுப்ரமணியம் பழகுவதற்கு மிகவும் இனிமையானவர்.

தங்க வியாபாரம் செய்பவர்கள் தங்கம் மாதிரி இருக்க வேண்டும் என்று கூறுவார்கள். அதற்கேற்ற விதமாக தங்கமானவர்.

புங்குடுதீவு மண்ணில் பிறந்து தெல்லிப்பழை மகாஜன கல்லூரியில் பழித்தவர். எழுத்தாளர் தலைசிங்கத்தின் சர்வமத கொள்கையில் ஈடுபாடு கொண்டவர். தமிழர்களின் விளையாட்டுத் தரத்தை சர்வதேச அளவில் உயர்த்த உழைத்த, நினைவில் வாழும் றோகனின் நண்பர். றோகன் அவர்கள் இந்தியாவுக்கு மருத்துவத்திற்காக வந்தபோது அவர் இறந்ததும் அவர் ஈமக்கிரியைகளில் கலந்து கொண்டு தன் நட்பை வெளிப்படுத்தியவர்.

ஒரு வியாபாரியிடம் இப்படியான பண்புகளை காணுவது கடினம். இராணுவ ஆக்கிரமிப்புக்கு உட்பட்டிருக்கும் சொந்த கிராமத்தில் பல பாலர் பாடசாலைகளை அமைத்து உதவி செய்திருக்கிறார். இவைகள் புகழ்ச்சிக்காகவோ, அவரின் விளம்பரத்துக்காகவே எழுதப்படவில்லை. கடந்த 5 வருட அவரின் நட்பில் நான் தெரிந்து கொண்டவைளே இவை. இவர் ஒரு மனித நேயம் மிக்க வணிகர்.


## இந்த அகராதி...

- தற்காலத் தமிழுக்கு என்றே உருவாக்கப்பட்ட முதல் அகராதி.
- தற்காலத் தமிழில் உள்ள சொற்களை எடுத்துக்காட்டு வாக்கியங்களோடு விளக்கும் முதல் அகராதி.
- தற்காலத் தமிழ்ச் சொற்களுக்கான ஆங்கிலச் சொல்/ விளக்கம் தந்திருக்கும் முதல் அகராதி.

## இந்தப் பதிப்பு...

- 1990க்குப் பிறகு தமிழ்ச் சொற்களில் நிகழ்ந்த மாற்றங்களைப் பதிவுசெய்யும் புதிய பதிப்பு.
- 75 லட்சம் தமிழ்ச் சொற்களைக் கொண்ட சொல்வங்கியின் உதவியுடன் உருவாக்கப்பட்ட புதிய பதிப்பு.
- தற்கால மொழியியல், அகராதியியல் அறிவையும் தற்காலத் தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட புதிய பதிப்பு.
- தொடக்கம்முதல் இறுதிவரை எல்லாக் கட்டங்களிலும் கணிப்பொறியைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டிருக்கும் புதிய பதிப்பு.

## இதில்...

- 21,000 தலைச்சொற்கள்.
- 38,000 எடுத்துக்காட்டு வாக்கியங்கள்/தொடர்கள்.
- 1,700 இலங்கைத் தமிழ் வழக்குச் சொற்கள்.
- 342 சொற்களுக்கான படங்கள்.

# க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி

விரிவாக்கித் திருத்திய புதிய பதிப்பு

தமிழ் - தமிழ் - ஆங்கிலம்

கிடைக்குமிடம்

**தமிழர் தகவல்**

தொலைபேசி :

**020 8480 3320**



புதிய பொலிவுடன் லூசியத்தில்
கற்பகம்
சகலவிதமான மரக்கறி வகைகள். பழவகைகள் உட்பட
சகல தேவைகளுக்கும் நாடவேண்டிய ஒரே இடம்
KATPAGAM
36, Loampit Hill Lewisham London SE 13 7SW
Tel : 0795763 9738 / Fax : 020 8311 9304
துரித பணமாற்றுச் சேவை
ரஞ்சன்
இலண்டன்
36, Loampit Hill Lewisham London SE 13 7SW
Tel / Fax : 020 8694 8810




Anthoorium
World of Designs
For your Jewels, Gems, Sarees, Costumes, Musical Instruments & Gift Items please visit us...
வைரத்தாலிக்கொடி அத்துடன்
பழைய தங்கத்தில்
புதிய டிசைன் நகைகள்
செய்து கொள்ள நாடுங்கள்...
இத்துடன் வாத்தியகருவிகளும்
விற்பனைக்கு உண்டு
102, B Burlington Road New Malden, Surrey KT3 4NT
Tel : 020 8942 8001 Fax : 020 8942 8007
Web : www.anthoorium.co.uk Email : sales anthoorium.co.uk

# நம்பிக்கைத் துரோகம்

ஒரு காலத்தில் ஓர் அரசன் இருந்தான். அவன் ஒருநாள் தன் மந்திரியை அழைத்து ''உன்னிடம் நான் வைத்துள்ள நம்பிக்கையினால் பரம ரகசியமான விஷயம் ஒன்றை இப்போது சொல்லப்போகிறேன்... அதாவது என் தம்பியிடம் எனக்கு ஒரு சந்தேகம் ஏற்பட்டுள்ளது.. என்னைக் கொன்றுவிட அவன் சதி செய்து கொண்டிருப்பதுபோல் தோன்றுகிறது.. அதைத் தடுக்க வேண்டும்... நீர் சாதுர்யமாக அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும்.'' என்று கூறினான்.

''அப்படியே செய்கிறேன்'' என்று சத்தியம் செய்து கொடுத்தான் மந்திரி. அரசனிடம் விடைபெற்றுத் திரும்பிய அவன் முதல் காரியமாக அரசனுடைய தம்பியின் இருப்பிடத்தை நோக்கி சென்று அவனிடம் ''தங்களைக் கொன்றுவிடுவதற்கு தங்கள் தமையனாரான அரசர் முடிவு செய்திருக்கிறார். என்னிடம் அவருக்கு உள்ள நம்பிக்கையினால் இந்த ரகசியத்தை எனக்கு மட்டும் கூறினார்'' என்று சொன்னான்.

அதைக் கேட்ட தம்பி ''மந்திரியாரே முன் ஜாக்கிரதையாக நான் நடந்து கொள்வதற்கு உதவியாக இப்பொழுதே வந்து இந்தச் செய்தியைக் கூறினீர்கள். உங்களுக்கு என்றாவது நான் பெரிய வெகுமதிகள் அளிப்பேன்'' என்று சொன்னான்.

சில நாட்களுக்குப் பிறகு அரசன் இறந்து போகவே தம்பி பட்டத்திற்கு வந்தான். அவன் பெரிய வெகுமதிகள் அளிப்பான் என்ற நம்பிக்கையோடு அவனைப் பார்க்கச் சென்றான் மந்திரி. அரச பதவி ஏற்ற தம்பி முதல் காரியமாக மந்திரிக்கு மரண தண்டனை விதித்தான்.

''நான் செய்த உதவிக்கு எனக்குத் தாங்கள் அளிக்கும் வெகுமதி இதுதானா?'' என்று கேட்டான் மந்திரி.

''ஆம். அரசன் சொன்ன பரம ரகசியமான விஷயத்தை மற்றவர்களிடம் போய் வெளியிடுகிற எவனும் மரண தண்டனை அடைவதே நியாயம் ! அந்த பயங்கர குற்றத்தை நீ செய்திருக்கிறாய். உன்னிடம் நம்பிக்கை வைத்து என் தமையனார் சொன்ன ரகசியமான விஷயத்தை உடனே என்னிடம் ஓடி வந்து சொன்னவன் அல்லவா நீ. தமையனாருக்கு துரோகம் செய்த நீ எனக்கும் துரோகம் செய்ய மாட்டாய் என்பது என்ன நிச்சயம் ?'' என்று கேட்டான் தம்பி.

**கருத்து விளக்கம்**

ஒருவன் தன் வாழ்க்கையில் எதை வேண்டுமானாலும் மறந்துவிடுவான். நம்பிக்கைத் துரோகத்தை மட்டும் எளிதில் அவனால் மறக்க இயலாது. நம்பிக்கைத் துரோகிக்கு இறுதியில் சரியான தண்டனை வழங்கி விட்டார் அரசன் !

''நம்பிக்கையுள்ள ஒரு ஊழியன் விலை மதிக்க முடியாத அணிகலன்'' என்கிறார் பென்ஜான்சன்.

ஒரு கதை சொல்லுவார்கள் : ''ஒட்டகம் ஒன்று கூடாரத்திற்குள் தலையை மட்டும் கொஞ்சம் நீட்டிக் கொள்கிறேன் என்ற சொல்லும். பிறகு சிறிது சிறிதாக உள்ளே நுழைந்து கூடாரத்தின் சொந்தக்காரரையே உதைத்து வெளியே தள்ளிவிடுமாம்!'' இதே வேலையைத்தான் நம்பிக்கைத் துரோகிகளும் செய்வார்கள். அவர்களைத் தண்டிக்காமல் விட்டால் !

''துரோகத்தாற் கொன்ற துரைத்தனம், குடிகளை வருத்தும் கொடுங்கோல்'' என்பதையுணர்ந்த அந்த அரசன் எப்படி நீதி வழங்குகிறானோ அதுபோல நாமும் அவர்களை விட்டொழிக்க வேண்டும் ●

# ஓதுவார் தேவையா?

**ஓதுதல் என்றால் பாடுதல். கிறித்தவ தேவாலயங்களில் பைபிளின் சங்கீதம் என்பர். பாடல் பாடி வழிபாடு நடத்தும் இஸ்லாமியர் திருக்குர் ஆன் ஓதுதல் என்று இசையோடுதான் பாடுவர்.**

**இந்துக் கோவில்களிலும், பெருமாள் கோவில்களிலும் திவ்யப் பிரபந்த பாடல்களான திராவிட வேதம் பாடுவது சிறந்த வழிபாடாக நடந்து வருகிறது. சிவாலயங்களில் பன்னிரு திருமுறைகள் ஓதுவது சிறப்பு.**

**இராச ராச சோழன் காலத்தில் நாடெங்கிலும் இருந்து ஓதுவார்களை அழைத்து வந்து தஞ்சையில் குடியேற்றி, அவர்களுக்கு நிலம் தந்து, வீடு தந்து திருப்பதியம் விண்ணப்பம் செய்வார். பிடாரர்கள் என்று அவர்களை ஆதரித்தது கல்வெட்டுகள் காட்டும் உண்மை.**

1. **தொண்டர் நாதனை தூது செல்ல வைத்து ஆரூர் வீதியை அமர உலகமாக்கியது அந்தரத் தமிழ்.**
2. **எலும்பைப் பெண்ணாக்கி பூம்பாவையாக உலகம் மீண்டும் காண வைத்தது சம்பந்தரது செந்தமிழ்.**
3. **கல்லையே தெப்பமாக மிதக்க வைத்தது திருநாவுக்கரசரின் தீந்தமிழ்.**
4. **ஊமையைப் பேச வைத்தது மாணிக்கவாசகரின் மணித் தமிழ்**

**திருமறைக்காட்டில் அடைத்திருந்த கோவில் கதவை திறக்க வைத்தது தமிழ் மறை.**

**ஆண்பனையை காய்க்க வைத்து அற்புதம் நடத்தியது திருமுறை**

**இதெல்லாம் நடத்தவல்ல திருமுறைப் பாடல்களை ஆலயங்களில் பாடவைப்பது அவசியம். வேத மந்திரம் முழங்க தமிழ்மொழியில் அர்ச்சனை செய்வதுடன் தமிழ் மறை பாடினால் மிகவும் நல்லது. ஆலயங்களில் திருநெறிய தெய்வ தமிழ் எத்தனையோ தெய்வீக சக்திகளை ஏற்படுத்தும் ! புரிந்து, கேட்டு, மக்கள் தமிழ்ப் பாடல்களைப் பாடி வழிபடுவது மிகப்பெரிய பலன்களைத் தரும். எத்தனையோ குருக்கள்மாரை நியமித்துள்ள இலண்டன் ஆலய நிர்வாகத்தினர் ஒரு கோவிலுக்கு ஒரு ஓதுவாரை நியமிக்கலாகாதா?**

**பதிப்பாசிரியர்**

# PARAM & COMPANY

**Charted Certified Accountants**

**FOR EFFICIENT PROFESSIONAL SERVICE IN**

PREPARATION OF ACCOUNTS
AUDITING
TAXATION
CORPORATE FINANCE
PERSONAL FINANCIAL PLANING
BUSINESS ACQUISITION
VAT
PAYE



TEL : 020 8571 9594 FAX : 020 8571 9094

First Floor 44-50 The Broadway, Southall, Middlesex UB1 1QB

# USHANI caterers

Free Phone
**0800 195 99 75**
www.ushanicaterers.com

OUR NEW FACTORY ADDRESS
34-38 Steele Road Park Royal London NW10 7AS
call Ushani or Suresh **020 88384757 / 07867911591**

All our products are hygenically prepared under direct supervision at our own catering centre

அதி நவீன தொழில்
நுட்பங்களுடன்
அதியுயர் சுகாதார
மற்றும்
பாதுகாப்பு வசதிகளுடன்
சர்வதேச தரத்தில்
இயங்கும்
முதலாவது
தமிழர் நிறுவனம்





இப்போது பிரமாண்டமான காட்சியறையில்

# EELAM SHOP



## EELAM SHOP

399 Lewisham High Street
Lewisham
London SE13 6NZ
**TeL : 020 8690 6545**

# Hotel Westeern

Hotel Westeern (Pvt) Ltd
35, Frankfurt Place - Bambalapitiya - Colombo 4, Sri Lanka



Ready to
accommodate you...
...at the Sun kissed beaches
of Srilanka

30 Guest Rooms,
5 Luxurious Suites
Restaurant & Party Hall
Conference Hall

**HOTEL WESTEERN**
Situated at the Heart of
Colombo City

Email : infor@hotelwesteern .com
Web : www.hotelwesteern.com

Approved by the Ceylon Tourist Board

ESTD 1992

# SRIKANTH & CO.

Solicitors & Property Business Centre

**Solicitors & Estate Agents**

**Property Sales, Letting & Conveyancing**

557 High Road, Wembley, Middlesex HA0 2DW
Tel : 020 8795 0648
Fax : 020 8795 0649 / Mob : 07831 195 979

TEL : 020 8795 0648

We also practise in the following areas of LAW:

- Immigration
- Wills & Probate
- Conveyancing - Residential
- Conveyancing - Commercial
- Londlord & Tenant
- Liquor Licensing
- Matrimonial / Family
- Employment Matter
- Consumer Problems
- Civil Litigation
- Housing Matters
- Welfare Matters

*With best compliments from*

# RATNAM JEWELLERS

84, Burlington Road New Malden
Surrey KT3 4NT
Phone : 020 8942 9425 / 020 8942 5670
Email : ratnamjewellers.com
www.ratnamjewellers.com

# தொல்லை தவிர்ப்போம்

நூல்களிலே காப்புச் செய்யுள் என்று இருப்பதுண்டு. காப்புச் செய்யுள் இல்லாத நூல்களும் உண்டு. காப்புச் செய்யுள் வழிபடு கடவுள் அல்லது ஏற்புடைக்கடவுள் பெயரில் அமைந்திருக்கும். நூல் ஆசிரியர் நூல் சிறப்பாக அமையவேண்டும் என்ற எண்ணத்தால் விக்கினங்கள் தீர்க்கும் விநாயகரை வழிபட்டு முதற் செய்யுளை விநாயகர் பெயரிலே பாடுவர். இது வழிபடுகடவுள் பெயரில் அமைந்த காப்பு. திருவாதவூரடிகள் புராணத்திலே 'பவளமால் வரையில் நிலவெறிப்பதுபோல்' என்ற செய்யுள் காப்பாக வருகிறது. நீதி வெண்பா என்ற நூலில் 'மூதுணர்தோர் ஓதுசில மூதுரையை' என்ற வெண்பா காப்பாக அமைந்துள்ளது. கந்தபுராணத்தில் 'திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்' என்பதிலிருந்து 'வான்முகில் வழாஅது பெய்க' என்பது வரையான ஐந்து செய்யுள்கள் காப்பாக அமைந்துள்ளன. இதிலே முதலிரண்டு பாடல்கள் விநாயகர் பெயரிலும் மூன்றாவது பாடல் முருகன் பெயரிலும் (கந்தபுராணம் என்பதால் ஏற்புடைக் கடவுள் முருகன்) அமைந்தன. பெரியபுராணம் பாடவந்த சேக்கிழார் 'உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்' எனச் சிவனை முதற்பாட்டில் வைத்தார். சிவன் தொண்டர் பற்றிய நூல் அது. காப்புச் செய்யுள் இருந்தால் நூலைப் படிக்கும்போது காப்புச் செய்யுளைப் படித்தபின் படிப்பது முறையாக இருந்துவருகிறது.

அப்படி காப்புச் செய்யுள் இல்லாத ஒரு நூல் திருவாசகம். வேதம் நான்கினும் மெய்ப்பொருளான நாதனின் நாமம் 'நமசிவாய' என்ற பஞ்சாக்கர மந்திரம். அதையே தன் முதற்சொல்லாக எடுத்து மணிவாசப்பெருமான் 'நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க' என்று சிவபுராணத்தை ஆரம்பித்தார். திருவாசகம் ஒரு நூலல்ல. அது மாணிக்கவாசக சுவாமிகளின் சிவாநுபவம். அந்தத் திருப்பாடல்களின் தொகுப்பை எழுதி நூலாக்கியதே சிவபெருமான் என்பதுதான் உண்மை.

திருவாசகம் கல்நெஞ்சையும் கரைக்கும் தன்மையது. 'திருவாசகம் இங்கு ஒருகால் ஓதின் கருங்கல் மனமும் கரைந்துக' என்பர் சிவப்பிரகாச சுவாமிகள். மனதிலுள்ள கவலையை ஓட்டி அமைதியை ஏற்படுத்த வல்லது திருவாசகம். ஆன்ம ஈடேற்றத்துக்கு வழிசமைக்கும் ஆற்றலுள்ளது. அதனாலேதான் மன அமைதிக்கும் ஆன்ம ஈடேற்றத்துக்கும் பயன்படும் வகையில் மரணச் சடங்குகளிலே சிவபுராணம் பாடும் வழக்கம் வந்ததோ என எண்ணத் தோன்றுகின்றது. இப்போதெல்லாம் கோயில்களிலே பாடாது, மரணச்சடங்குகளில் மட்டுமே பாடும் பாடலாக சிவபுராணத்தை சிலர் பயன்படுத்துவது வேதனைக்குரியது. கோயில்களிலே பஜனை என்ற பெயரில் ஏதேதோ பாடுபவர்கள் சிவபுராணத்தைப் பாடாமல் இருப்பது விந்தைதான்.

திருவாசகம் பாடப் பாட மனதிலே விவரிக்க முடியாத ஓர் இன்ப அநுபவம் தோன்றும். அப்படி ஏற்பட்ட தமது அநுபவத்தை ஓர் அன்பர்,

> தொல்லை யிரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
> அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே – எல்லை
> மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
> திருவா சக்மென்னுந் தேன்

என்று பாடியுள்ளார். தேன் தெவிட்டாதது. தானும் கெடாது, தன்னை அண்டிய பொருள்களையும் கெட விடாது. நோய்க்கு மருந்தாவது. உடலுக்கு உறுதியளிப்பது. இப்படித் தேனுக்கு எவ்வளவோ சிறப்புக்கள் உள்ளன. அதுபோலவே திருவாசகமும் உள்ளத்துக்கு அமைதி, ஆனந்தம், ஆன்மிக சிந்தனை என்பவற்றை அளிப்பது எனப் பலவிதமான நல்ல குணங்கள் உடையதாக இருந்ததால் அதை அந்த அன்பர் தேனுக்கு ஒப்பிட்டார். எனவே இந்தப் பாடல் திருவாசகத்துக்குப் பின்னால் வந்ததென்பதும் காப்புச் செய்யுள் அல்ல என்பதும் புலனாகின்றது.

வாழ்த்துக்கள் பாடுவதென்றால் வாழ்த்துப்பாக்களின் முதற் பதங்கள் எப்படி இருக்கவேண்டும் என இலக்கணம் வரையறுத்துள்ளது. 'செந்திருவும் திங்களும் பூவும் தலைசிறப்ப' என்று அது சொல்கிறது. செம்மை,


VM CASH & CARRY
282, Lee High Road London
Tel : 020 8852 3561
கலப்படமற்ற தூய தானியவகைகள்,
புதிது குன்றாத கடல் உணவு வகைகள்,
பச்சை நிலையில் பொலிவுறும் இலங்கை,
இந்திய, தாய்லாந்து மரக்கறி வகைகள்,
கார நறுமண உணவுப் பொருட்கள்,
மதுபான வகைகள் வீடியோச் சுருள்கள்,
தமிழர்களின் பாரம்பரிய பண்டிகைகள்
விழாக்களுக்கான பொருட்கள்
அனைத்திற்கும் நாட வேண்டிய
இடம்.
வெள்ளிக்கிழமைகளில் இறக்குமதி செய்யப்பட்ட
மீன் வகைகள் விற்பனையாகின்றன


அழகிய காட்சியறையில் இப்போது மீரா
லண்டனில்
பொற்கை
வண்ணர்களின்
நிர்வாகத்தில்
இயங்கும்
ஒரே நகை மாடம்
MIERRA
Jewellery Mart
Gems & Jewellery
34 London Road
Tooting London SW 17 9HP
Tel : 020 8648 7750
Mobile : 07958948685
www.meera_jewellery.com

திரு, திங்கள் முதலிய மங்கல வார்த்தைகளை வைத்தே வாழ்த்துப் பாடல்களைத் தொடங்கவேண்டும். தொல்லை என்ற சொல் தொன்மையான என்ற பொருளைக் கொடுத்தாலும் தொல்லை என்பது மங்கல வார்த்தையல்ல. எனவே காப்புச் செய்யுள் அல்லது வாழ்த்துச் செய்யுள் என்று எந்த உருவத்திலும் அமையாத 'தொல்லை இரும்பிறவியை' திருவாசகம் பாடுமுன் பாடுவது தேவைதானா? தொல்லையைத் தவிர்க்கலாமே!

இப்படிச் சொன்னால், பலகாலமாகப் பாடிவந்துவிட்டோம், இனி நிறுத்துவது சரியா? என்ற கேள்வி எழலாம். பிழையான ஒன்றை பிழை என்று தெரிந்தபின்னும் தொடர்ந்து செய்வதும் பிழைதானே! திருவாசக முற்றோதல்களிலும் திருவெம்பாவை பாடும்பொழுதும் 'தொல்லை இரும்பிறவி' பாடிக்கேட்டதாக எனக்கு ஞாபகமில்லை. லண்டனிலேதான் இந்தப் புது வழக்கம் ஆரம்பித்து தொடர்கிறது. இதைச் சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம், சைவமுன்னேற்றச் சங்கம் போன்ற சைவசமய அமைப்புக்கள் மக்களுக்கு எடுத்துச்சொல்லி திருத்தவேண்டும்.

\- அநுராதா

### தேவாரம் பாடினால் பலன் கிடைக்குமா?

அண்மையில் சிதம்பரத்தில் ஆறுமுக சுவாமி அவர்கள் திருவாசகம் பாடி சிறப்பித்தார். அவர் பகலில் ஒரு பிடி சாதம் கிடைக்க வழியில்லாமல் தவித்த நிலையில் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த செய்தியை அறிந்த கலைஞர் இவருக்கு மாதம் 3000 ரூபாய் அவர் இறக்கும்வரை கொடுக்கும்படி கடலூர் மாவட்ட ஆட்சியரை பணித்துள்ளார். தேவாரம் பாடினால் பலன் கிடைத்ததை பார்த்தீர்களா?

லண்டனில் 18 வருடங்களுக்கு முன்னம் ஆரம்பித்த BEST FOOD நிறுவனம், BEST FOOD Harrow, Hounslow, Wembley, Croydon என்று லண்டன் முழுவதும் மிகப்பெரிய காட்சியறைகளில் தங்கள் கிளைகளை திறந்துள்ளது. இதற்கு முத்தாய்ப்பு வைக்கும் முறையாக மாபெரும் இறக்குமதி ஸ்தாபனம் Vaani Cash & Carry திகழ்கிறது. இன்று லண்டனில் காய்கறி மொத்த வியாபாரத்தில் சக்கைப் போடு போடுகிறார்கள்.

ஸ்கந்தவோரதயா கல்லூரி இசை நிகழ்ச்சி விழா அண்மையில் நடைபெற்றது. யாதவ் என்ற இசைக் கலைஞரின் நெறியாள்கையில் பாட்டும் பரதமும் நடைபெற்றது மக்களைக் கவர்ந்தது.






மே மாதம் தமிழர் தகவலில் வந்த இந்தப் பகுதி மே மாத மங்கையர் மலர் இதழல் இடம்பெற்ற கைபக்குவம் என்ற பக்கத்தின் மறுபிரசுரம்

### அண்மையில் ஒரு விளம்பரம்

லண்டன் கனகதுர்க்கை அம்மன் கோவிலில் தமிழரின் நல்வாழ்வுக்காக ஒரு சண்டி ஹோமம் நடத்த இருப்பதாக விளம்பரம் வந்துள்ளது. முதலில் கனகதுர்க்கை அம்மன் கோவில் நிர்வாகம் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பதற்காக ஒரு சண்டி ஹோமம் செய்து பின்பு உலக நன்மைக்காக சண்டி ஹோமம் செய்யலாமே!

தெல்லிப்பழை துர்க்கையம்மன் கோவில் தலைவி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் கடந்த ஒன்பது நாட்களாக சுயநினைவில்லாத நிலையில் யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவருக்காகப் பிரார்த்தனை செய்யுமாறு சகலரையும் கேட்டுக் கொள்கிறோம்.

– பதிப்பாசிரியர்

லண்டனில் தொலைக்காட்சி விளம்பரங்களைப் பார்த்தால் ரசிக்கத்தக்க முறையில் இல்லை. காரணம் பெரிய தொலைக்காட்சியில் போய்கொண்டிருக்கும் விளம்பரங்களை நகல் செய்து தங்களுக்கு ஏற்ற விதமாக மாற்றி போடுகிறார்கள். இப்படி இல்லாமல் தங்களது விளம்பரங்களை தகுந்த முறையில் தயாரித்து மக்களை கவரும் வண்ணம் விளம்பரம் போடும் Spiceway நிறுவனத்தார் பாராட்டுதற்குரியவர்.


JAFFNA HOUSE
Sri Lankan & South Indian
Tandoori Restaurant & Take Away
உயர்ரகத்தில், தரத்தில்
ருசியில், சுத்தத்தில்
கடந்த 18 வருடங்களாக
முதலிடம் வகித்து ஒரே
நிர்வாகத்தில்
நிலைத்து உயர்ந்து
நிற்கும் ஒரே உணவகம்
90 High Street, Tooting Broadway
Tooting, London SW17 0RN
Phone : 020 8672 7786 / 020 8767 6668
Web : www.jaffnahouse.co.uk


உலகின் எப்பாகத்துக்கும் உங்கள் பணம்
பாதுகாப்பாக சென்றடைய
Eastham ஸ்ரேசனுக்கு எதிரில்
உடனே எம்மை அழையுங்கள்
A1 MONEY TRANSFER
7 Station Pride East Ham E6 1JD
Tel : 0208 503 5446
Mob : 07961406289
தொடர்பு : நிரஞ்சன்


CHANDRA
Super Market & Off Licence
COST CUTTER
உங்களுக்குத் தேவையான சகல
விதமான மளிகைப் பொருட்கள்,
இலங்கையிலும், இந்தியாவிலும்
இருந்து இறக்குமதி செய்யப்பட்ட
உணவுப்பொருட்கள், கடல் உணவு வகை
மரக்கறி வகைகள், பழ வகைகள்,
மேல்நாட்டு குடிவகைகளுடன்
இலங்கை பியர் வகைகளையும்
சகாய விலையில் பெற்றுக்கொள்ள
ஒரே இடம். ஆடியோ, வீடியோ, சீ.டி,
ஆகியவற்றை விற்பனைக்கும்
வாடகைக்கும் பெற்றுக்கொள்ளலாம்.
Tel : 020 8333 8680
209 - 211 Bromley Road
Catford
London SE6 2PG


தென் கிழக்கு லண்டனில்
PARTY WORLD U.K
THE BEST DECORATORS
Manavarai (Mandaps) and Hall Decorations
Fresh Flower arrangements & Garlands from India
Printed & Plain Balloons for all events
Food Supply & Food warmers
D J Sound Systems, Live Music & Disco Lights
Photographs, Video,
Wedding Cards & Hall Bookings
Party Cakes, Gift Items & all Party Needs
20, Loampit Hill, Lewisham
London SE13 7SW
Tel : 0208 6949404 Mob : 07961843035
Fax : 0208 6949272
Email : sales@babaspartyworld.com
Web : www.babaspartyworld.com

முதல் முதலாக புகை வண்டி யாழ்ப்பாணத்தில் தன் பயணத்தை தொடங்குவதற்கு 24 பெட்டிகளுடன் வந்து தன் ஓடு பாதையில் நின்றது. இதைக் காணப் பலர் வந்தனர். வந்தவர்களில் ஒரு மூதாட்டி சின்ன தொடர்வண்டி இயந்திரம் இத்தனை பெட்டிகளை இழுத்துக்கொண்டு ஒரு காலத்திலும் ஓடாது என்று கூறும்போதே ஓடத் தொடங்கியது. இதை கண்ட அதே மூதாட்டி ஓடியதைப் பார்த்தவுடன் இனி ஒரு காலத்திலும் நிற்காது என்று கூறினார்.

இந்த செய்தியைப் போல நான் தமிழர் தகவல் மாத இதழை தொடங்கியபோது இது ஓடாது என்றார்கள். இப்போது, இனி ஒருபோதும் நிற்காது என வியப்பாக கூறுகின்றனர். இந்த ஐந்து வருட வளர்ச்சிக்கு பின் நின்று உதவி செய்தவர்கள் பலர். முதல் 12 இதழை அச்சிட்டுத் தந்த வாசன் அச்சகத்தின் உரிமையாளர் திரு வாசன் அவர்களுக்கு என் நன்றி. இதை தொடங்க வேண்டாம், காரணம் நீ ஒரு இடத்தில் இருப்பவர் அல்ல என்றும் இதைவிட விளம்பரம் செய்ய வணிகர்கள் முன்வரமாட்டார்கள் என்று புத்தி கூறிய என் அன்பு மகன் போன்ற வாணி மொத்த வியாபாரி கனேந்திரன் இந்த இதழை எக்காரணத்திலும் விடக்கூடாது என்று எனக்கு தோன்றா துணையாக இருக்கிறார். அவருக்கும் என் நன்றி. இன்னும் இந்த இதழ் வளர தக்க சமயத்தில் உதவி செய்யும் உலக அளவிலான புகழ் பெற்றுள்ள ஐங்கரன் நிறுவன உரிமையாளர் திரு கருணாமூர்த்திக்கு இத்தருணத்தில் நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

என் இதழுக்கு இன்று வரை மனம் கோணாமல் விளம்பரம் அளித்து வரும் மித்தூஸ் நகை கடை உரிமையாளர் திரு யோகநாதன், லட்சுமி ஜுவலர்ஸ் உரிமையாளர் திரு நீலகண்டன், பெஸ்ட் புட் உரிமையாளர் திரு ஜெயம், தாரணி, அம்பாள், பத்மினி ஜுவல்லர்ஸ் உரிமையாளர்கள், அபே அன்ட் கோ உரிமையாளர் ஸ்ரீ மற்றும் அனைத்து வணிக விளம்பரதாரர்களுக்கும் என் நன்றி.

விளம்பரம் என்பது தனிப்பட்ட நபர்களுக்காக கொடுப்பது அல்ல. தன் வியாபாரத்தை வளர்த்து கொள்ள அனைவருக்கும் எடுத்துக் கூறுவதுதான் விளம்பரம். உதாரணமாக லண்டனில் ஒரு நகைக் கடை மிக விமரிசையாக திறக்கப்பட்டது. நான் என் இதழ் பற்றிக் கூறி என் இதழுக்கு மாதா மாதம் ஒரு சிறிய விளம்பரம் கொடுக்குமாறு கேட்டபோது இம்முறை விளம்பரத்திற்கான வரவு செலவு முடிந்துவிட்டது என பதில் அளித்தார். இதில் என்ன ஆச்சர்யம் என்றால் அக்கடை இப்போது இல்லை. இப்படி பல கடைகள் என் அனுபவத்தில் வந்த அடிச்சுவடு தெரியாமல் போய்விட்டன.

இறுதியாக தமிழர் தகவல் பெயரை லண்டனில் பாவிப்பதற்கு அனுமதி அளித்துள்ள கனடா எஸ் திருச்செல்வத்துக்கும், ஐந்து ஆண்டுகள் அறுபது இதழ்கள் தொடர்ந்து வெளிவர உதவிய அனைவருக்கும், தொடர்ந்து ஆதரவு அளிக்கும் வாசகர்களுக்கும் என்னுடைய நெஞ்சம் நிறைந்த நன்றி!


Tooting-ல் தமிழருக்கான கடை

# Prime Food & Wine

118, Tooting High Street
London SW 17 ORR
Tel : 020 8682 3777

நம்மவரின் வசதிக்கேற்ப
எமது கடையை
விஸ்தரித்துள்ளோம்.
உங்களுக்கு வேண்டிய
சகல தெரிவுகளும் எங்கள்
புதிய காட்சியறையில் உள்ளன.







# Mithus Jewellery

322-324 London Road
Croydon CRO 2TJ
Tel : 020 8683 1756 Fax : 020 8683 1792